
# கலைக்கேசரி

KALAIKESARI

CULTURE · HERITAGE · TRADITION · INTERVIEWS · ENTERTAINMENT

VOLUME : 1 ISSUE : 6 Registered ... under No. QD / 116 / News / 2010



இணைப்பு

செம்மொழி மாநாட்டுச்

சிறப்புமலர்


மலை உச்சியில்

வாழும் தெய்வங்கள்

இலங்கையில்

பௌத்த சங்கம்


www.kalaikesari.com / JUNE 2010

ISSN 2012-6824

| | | |
|---|---|---|
| INDIA..............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA..AUS$ 10.00 | UK............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE...EUR 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka's Heritage in Hospitality...
# Galle Face Hotel



## Other unique properties of Galle Face Hotel Management Company



**Queen's Hotel**
Kandy



**Suisse Hotel**
Kandy



**Lihiniya Surf Hotel**
Bentota

## Managed by

*Galle Face Hotel Group*

The Galle Face Hotel, No. 2, Galle Road, Colombo 03
Tel: (94) 11 2541010-16, 2543565-77, Fax: (94) 11 2541072/74
Visit : www.gallefacehotel.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




100 SMS
அனுப்ப
நாளொன்றுக்கு
ரூ.5/- மட்டுமே.
SMS லோடட்
செயற்படுத்த
அழைக்கவும்
2233

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்










## அட்டைப் படம்

வள்ளுவர் கோட்டம் - கற்தேர்


06 காதணிகள்

10 ஞானப்பழத்தைப் பிழிந்த கானக்குயில்

14 "மாயா ராவண் நாட்டிய நாடகமல்ல" - ஷோபனா

30 அநுராதபுரத்தில் பௌத்தமும் தமிழரும், நாகரும்

35 தமிழும் குறளும்

38 கலைச் சிறப்புடன் பாங்கொக் 'வற்' கள்

52 ஜூபிலி கொண்டாடும் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்

62 மலை உச்சியில் வாழும் தெய்வங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பழைமைச் சிறப்புகளும் புதுமைப் பொலிவுகளும்

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்

கலைக்கேசரியின் ஆறாவது இதழ் மூலமாக (ஜூன்) எமது அன்புக்குரிய வாசகர்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கலைக்கேசரி இதழ்கள் குறித்து வாசகர்கள் தெரிவித்து வரும் இதயபூர்வமான கருத்துக்கள் எமக்கு மென்மேலும் நம்பிக்கையைத் தருகின்றன. அதேவேளை உங்கள் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றபடி விடயதானங்களைத் தரவேண்டும் என்பதிலும் நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான், கற்பனைக்கு எட்டாத உயரத்திலும் இருப்பான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் வாழும் மனிதர்களாகிய நாம் இலகுவில் சென்றடைந்து விட முடியாத மலையுச்சியிலும் இறைவன் இருக்கின்றான் என வணங்கும் மரபில் உள்ளவர்கள் அல்லவா !

சிவனுறையும் கைலாசம் பற்றிய சில அரிய தகவல்களைத் தந்த கலைக்கேசரி கடவுளர்கள் வாழும் ஒலிம்பஸ் மலை குறித்த சில தகவல்களைத் தருவதும், பொருத்தம் தான். கிழக்கானாலும், மேற்கானாலும் மனிதர்களைப் பொறுத்தவரை நம்பிக்கைகள் ஒன்றாகத் தான் இருக்கின்றன.

தவிரவும் இவ்விதழில் மேலும் சில பழைமைச் சிறப்புகளும் புதுமைப் பொலிவுகளும் இழைந்து வாசகர்களை மகிழ்விக்கக் காத்திருக்கின்றன. படித்துச் சுவையுங்கள். எம்முடனும் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

மேலும் நம் வாசகர்களுக்கு ஓர் இலவச இணைப்பிதழாக பெறுமதிமிக்க கருவூலம் ஒன்றையும் தருவதில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

"தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ், இன்பத் தமிழ், எங்கள் உயிருக்கு நேர்" என்றார் பாவேந்தர் பாரதிதாசன். தமிழைச் செம்மொழிகளில் ஒன்றென இந்திய அரசாங்கம் அறிவித்தது. உலகின் பிற தொல்சீர் மொழிகளுடன் தமிழை ஒப்புநோக்கும் உயர்நோக்கில் தமிழக அரசு உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை தமிழ்நாடு, கோயம்புத்தூர் நகரில் இம்மாதம் நடத்தவிருப்பதை கௌரவிக்கும் வகையில் கலைக்கேசரியும் தன்னாலான ஒரு சிறு பங்களிப்பை நல்க விழைந்துள்ளது. அந்த வகையில் நாம் வெளியிடும் சிறப்பு மலரை நீங்கள் நுகர வேண்டாமா ?

நன்றி

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

**PUBLISHER**
**Express Newspapers (Cey) (Pvt) Ltd.**
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5322700
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. S. Pathmanathan
Prof. S. Sivalingaraja
Bro. R. Joseph Jeyakanthan
Kalaimamani Pon. Theivendran
Shanthini Arulanantham

**PHOTOS**
N. Joy Jeyakumar
Sabita N.
G. Vinoth (India)

**LAYOUT**
S. Pressanna
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan

**CIRCULATION**
S. Alexandar

**PRODUCTION**
L. A. D. Joseph

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதணிகள்







ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் காலங்காலமாக தமது காதுகளை அலங்கரிப்பதற்காக காதணிகளை அணிந்ததாக நாம் அறிகிறோம். இக்கருத்தை இலக்கியங்களும் வலுப்படுத்துகின்றன. இன்றைய காலங்களில் காதுகளில் அணிகின்ற பொன் ஆபரணங்கள், வெள்ளி ஆபரணங்கள், கல் வைத்த ஆபரணங்கள் என அனைத்தையும் 'தோடு' என்ற சொல்லால் நாம் பொதுவாக அழைக்கிறோம். தற்போது fashion தோடுகளும் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன.

இன்று நாம் 'தோடு' என அழைக்கின்ற காதணிக்கு ஆரம்ப காலங்களில் 'ஓலை' என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இங்கு ஓலை எனக்கூறப்படுவது பனை ஓலையை ஆகும். அதாவது சுருளாக மடிக்கப்பட்ட பனை ஓலையை காதுகளில் அணிந்த காரணத்தால் காதணிக்கு பழங்காலத்தில் ஓலை என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. தாலி என்பது கூட 'தாலம்' என்ற சொல்லில் இருந்து வந்தது என்பதை நாம் ஜனவரி மாதக் கலைக்கேசரியில் உங்களுக்கு தந்திருந்தோம்.

காலங்கள் செல்லச் செல்ல பொன்னால் உருவாக்கப்பட்ட காதணிகளை நம் முன்னோர்கள் அணியத் தொடங்கினார்கள். இதனால் அவர்கள் அதை 'பொன்னோலை' என்று சிறப்பித்துக் கூறினார்கள். 'தோடு' என்பது இன்றைய கால காதணியாகும். இதற்கு 'இதழ்' எனப்பொருள் கொள்ள முடியும். முன்னைய காலங்களில் பெண்கள் தமது காதுகளில் மலர்களை அணிந்து தம்மை அழகு படுத்தினார்கள். ரவிவர்மாவின் சித்திரத்தில் சகுந்தலையின் காதுகளில் மலர்கள் அணியப்பட்டிருப்பதை காணமுடிகிறது. அழகிய பெண்ணான சகுந்தலை கூந்தலில் மாத்திரம் மலர் சூடாமல் காதுகளிலும் மலர்கள் அணிந்திருப்பதில் இருந்து பெண்கள் தமது காதணிகளாக மலர்களை பயன்படுத்தினார்கள் என்ற செய்தி எமக்குக் கிடைக்கிறது. மேலும் முற்காலத்தில் காதணிகளுக்கு 'குழை' என்ற சொல்லும் வழக்கில் இருந்துள்ளது.

தினைப்புனங்கள் செறிந்த இடங்களில் பறவைகளை விரட்டுவதற்கு 'கவண்' கற்களை பயன்படுத்துவது வழக்கமாகும். ஆனால் செல்வச் செழிப்புமிக்க அக்காலத்துப் பெண்கள் தம் காதுகளில் அணிந்திருந்த குழைகளைக் கழற்றி அவற்றை கவண் கற்களாகப் பயன்படுத்தினார்கள் என்பது எமக்கு வியப்பான ஒரு செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**'தோடுடைய செவியன்'**

என்று தொடங்குகின்ற திருஞானசம்பந்தரின் முதல் தேவாரப்பாடலில் இருந்து அன்னையான உமையவள் அணிந்த காதணியாக தோடு விளங்குவது தெளிவாகிறது. இதன் மூலம் பெண்கள் அணிந்த காதணியாக தோடு விளங்கியது. மேலும் ஆண்கள் அணிந்த காதணிக்கு 'குழை' என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

**'இழை நெரிடும் ஏழை அறிவனோ**
**குழை நக்கும் பிஞ்ஞகன் தன் கூற்று'**

என்ற தொடரில் 'குழை' என்னும் காதணி பற்றிய குறிப்புரை நமக்குக் கிடைக்கின்றது.

பழங்காலத்தில் 'கொப்பு' என்ற காதணியும் புழக்கத்தில் இருந்தது என்பது எமக்குத் தெரியவருகிறது. அவ்வாபரணம் தோடு என்ற ஆபரணத்தில் இருந்து வேறுபட்டு பெண்களின் காது மடல்களில் அணிகின்ற அமைப்புடன் இருந்துள்ளது. ஆனாலும் 'கொப்பு' என்ற காதணியை இஸ்லாமிய பெண்கள் அதிகமாக அணிந்துள்ளனர்.

**'சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே'**

என்பது ஆண்டாள் நாச்சியாருடைய பாடல்களில் உள்ள சொற்களாகும். இங்கு சூடிக்கொடுத்த நாச்சியார் செவிப்பூ எனக்குறிப்பிட்டது காதணியை ஆகும்.

மேலும் தமனியக்கொப்பு, குதம்பை, குண்டலம், மகர குண்டலம், வாளி போன்ற காதணிகள் சிறு சிறு வேறுபாடுகளுடன் அக்காலத்தில் புழக்கத்தில் இருந்துள்ளன. 'கொப்பு' என்றால் காது மடல்களில் அணிகின்ற அணி எனவும் 'தமனியம்' என்றால் பொன் எனவும் பொருள் கொள்ள முடியும். குண்டலம் மற்றும் மகர குண்டலம் என்பது அசையக்கூடியதாக இருந்ததுடன் தற்காலத்து வளையம் என்ற ஆபரணத்தை ஒத்ததாக வாளி என்னும் காதணி இருந்துள்ளது.

அக்காலத்தில் பல வகையான ஆபரணங்கள் புழக்கத்தில் இருந்தமைக்கான பிரதான காரணம் என்னவெனில் அக்காலத்து மக்கள் அழகுக் கலையில் கொண்டிருந்த தீராத காதல் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இயற்கையோடு வாழ்ந்த தமிழ் இன மக்கள் செடி, கொடி, தளிர், மலர் போன்றவற்றை ஆரம்ப காலத்தில் அணிந்த காரணத்தால், பின்னர் தாம் உருவாக்கிய பொன், வெள்ளி, தந்தம், சங்கு போன்ற ஆபரண்ங்களிலும் அப்பூவேலைப்பாடுகளை விரும்பி உருவாக்கி அணிந்து மகிழ்ந்தார்கள்.

**'கடுத்து வாழ்தர வொருத்திபொன் னோலைகா தணிந்தாள்'**

என்ற பிரபுலிங்க லீலை - சிவப்பிரகாச சுவாமிகளின் வரியில் இருந்து 'பொன்னோலை' என்ற காதணி பற்றிய தகவல் எமக்குக் கிடைக்கிறது.

**'கொப்பழகு குழைமடந்தை பள்ளியறை தனிலிருந்து கோயில் புகும் ஏகாந்த சமயம் சகியே'**

என்பது திருக்குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெற்றுள்ள திருக்கூட ராசப்ப கவிராயரின் வரியாகும். இங்கு கொப்பு, குழை எனக்குறிப்பிடப் பட்டிருப்பது காதணிகளை ஆகும்.


**'தண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கோர் தமனியக் கொப்பு மிட்டு'**

என்பது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் குமர குருபரரின் வரிகளில் இருந்து காதணிகள் பற்றிய தெளிவான பழமையான பெயர்கள் எமக்குக் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**'பழையாய் புதியாய் சரணம் பணிலக் குழையாய் சரணம்'**

என்று திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் கூறியுள்ளார். இங்கு பணிலம் என்பது சங்கு எனவும் குழை என்பது காதணி எனவும் பொருள் கொள்ளப்படுகிறது.

**'அழிதகன் குறுகுவான்முன் னங்கயற்கண்ணி தந்தக் குழையிரு காதுங்கோத்து'**

என்று திருவிளையாடல் புராண வரிகளில் மீண்டும் காதணியை குழை என சிறப்பித்துக் கூறுகிறார் பரஞ்சோதி முனிவர். காதுகளில் அணிகின்ற அணிகளை மகரக்குழை என்றும் சிறப்பித்துக் கூறுவார்கள். மகரம் என்பது மீன் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. 'மகரக் குழை நெடுங் காதன்' என்றும் பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்படுவது மீன் வடிவத்தை ஒத்த காதணியை ஆகும்.

**'தோளில் மகரக்குழை தவழ'**

என்பது திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ள வரி ஆகும். தோளைத் தொடக் கூடிய அளவிற்கு காதணியை அணிந்திருந்ததாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**'வடிந்து வீழ் காதினர்'**

இவ்வாறு கூறும்போது பெண்களும் தமது காதுகளில் துளைகளைப் பெரிதாக இட்டு, தாழ்த்தி, தொங்கக்கூடிய அளவிற்கு காதணிகளை அணிந்திருந்தார்கள் என்பது எமக்குப் புலனாகிறது.

**'கடிப்பிரு காதில் கனங்குழை தொடர'**

என்ற தொடரில் இருந்து தொங்கக்கூடிய அளவிற்கு காதணிகளாக அணிந்த ஆபரணத்திற்கு 'கடிப்பு' என சிறப்புப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

**'மின்னுமா மணிமகர குண்டலங்கள் வில்வீசு மென்கிறாளானால்'**

என்று திருமங்கையாழ்வார் கண்ணபுரத் திருமாலை பரவுகின்றார். இங்கு மணிகள் கொண்டு உருவாக்கப்பட்ட மகரக் குண்டலங்கள் ஒளி வீசுவதாக அவர் குறிப்பிடுகிறார்.

**'காதில் கனவயிர குண்டலங்கள் சேர்த்தி'**

என ஆளுடையப் பிள்ளையார் திருவுலா மாலையில் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகிறார். ஒளி வீசும் வைரக்கற்களைக் கொண்ட குண்டலங்கள் என்பது அவரின் கருத்தாகும்.

**'வெய்ய குதம்பை வளர்த்தகலை விழுநீர் வள்ளைக் காதினிடைத் துய்ய பசும்பொன் மணிகுயின்ற துணைத்தோடமையத் தோன்றினாள்'**

இங்கு சிவப்பிரகாசர் அவர்கள் 'வள்ளை மலர் போன்ற காதுகளில் மணிகள் பதிக்கப்பட்ட துணைத்தோடு (இரண்டு தோடு) அமையத் தோன்றினாள்' என பிரபுலிங்கலீலையில் குறிப்பிட்டுள்ளார். இதில் இருந்து அக்காலத்து செல்வச்செழிப்பு நமக்குத் தெளிவாகப் புலனாகிறது.

**'இன்னிசை வீணையிருவோ ரிசைந்தாடப் பொன்னூசல் போற் குழைகள் பூட்டியே'**

என்று கடம்பர் கோவில் உலாவில் கூறுவதற்கு 'அஸ்வதர் மற்றும் கம்பளர் ஆகிய இருவரும் இசைந்தாட ஊஞ்சல் போல ஆடக்கூடிய குழைகள் பூட்டிய' என பொருள் கொள்ளமுடியும்.

இவ்வாறு காதணிகள் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் மேற்கூறப்பட்ட கருத்துக்களில் இருந்து காலங்காலமாக சிறு சிறு வித்தியாசங்களுடன் இன்றைய 'தோடு' ஆபரண அமைப்பை அவை ஒத்திருந்தன என்பது எமக்குத் தெரியவருகிறது. மேலும் தமிழர் தம் வாழ்வில் காது குத்தல் என்பது மரபு சார்ந்த ஒரு விழாவாகக் கொண்டாடப்படுவதுடன் அதில் தாய் மாமன் உறவுக்கு மிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

**தகவல் : வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**
**தொகுப்பு : பிரியங்கா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SGH

# SUWARNAA GOLD HOUSE



Indelible Jewellery Mart

144, Galle Road, Wellawatta,
Colombo 06, Sri Lanka.
Tel:+94 11 250 1789, 236 2919
Tele/Fax: +94 11 236 2919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. பி. சுந்தராம்பாள்

## ஞானப் பழத்தைப் பிழிந்த கானக்குயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிகாலை வழிபாட்டு நேரம் ஆலய முன்றலில் உள்ள ஒலிபெருக்கி ஊடாக ''ஞானப்பழத்தைப் பிழிந்து.... ஊ.... ஊ'' என்று காம்போதி ராகம் மேல் ஸட்சத்தில் ஒலித்தால் எப்படி இருக்கும். இசைத் தட்டாய் வெளிவந்த காலத்தில் பட்டிதொட்டி எங்கும் இதே பாடல் தான் இரண்டு வருடங்களுக்குள் ஏறத்தாழ இரண்டு லட்சம் இசைத் தட்டுகள் விற்பனை ஆயின என்று தகவல்.

சிவனுக்கு உகந்த ராகம் காம்போதி ஆத்ம போதையின் வேதியுடன் கணீர் என்று மடை திறந்த வெள்ளம் போல் உள்ளத்தை உருக்கிய கானக் குயிலிசையாள் யார்? கே.பி.எஸ். என்று பலராலும் பரவசத்துடன் மொழியப் பெற்ற, கொடுமுடி கோகிலம் என்று சொல்லவல்ல கே.பி. சுந்தராம்பாள் அவர்களே அவர்.

1908 ஆம் ஆண்டு அக்டோபர் பதினொன்றில் ஜனித்த இந்த அற்புதப் பெண்மணி 1916 ல் எட்டுக் கட்டைச் சுருதியில் இனிமையாகக் கீச்சிடத் தொடங்கிவிட்டார். வண்டு ரீங்கார மிடுவது போன்று எந் நேரமும் இனிய இசையொலி வெளிவந்து கொண்டிருக்குமாம். கொடுமுடி எனும் அவ்வூர் பிரபல ஆத்மீக தலமுடையது.திருப்பாண்டிக் கொடுமுடி ஞாபகத்திற்கு வரும். பாலாம்பாள் கொண்டர் தம்பதியருக்கு முதல் பிள்ளை இவரின் பின் ஒரு தம்பியும் ஒரு தங்கையும் இருந்தனர். இளமையில் தந்தை இறந்ததும் தாய் பாலாம்பாள் தவியாய்த் தவித்தார். பெற்றவர்களை வளர்க்க வேண்டாமா. பிள்ளைகளை வளர்க்க முடியாத கவலையில் உயிரை விடத் துணிந்தார். உணர்ந்த மூத்தவள் தடுத்தாள். முருகனே கதி என நம்பினர். தாய் மாமன் உதவியுடன் வாழ்க்கை ஓடியது.

வயதும் வளர சுந்தராம்பாளின் குரலும் வளர்ந்தது. மக்களும் மயங்கினர். போவோர் வருவோரை இவரது குரல் நின்று கேட்க வைத்தது. சுருதி சுத்தமுடன் எதுவித பயிற்சியுமின்றி இப்படி ஒரு கானமா? ஒரு முறை கேட்டாலே மனதில் பதித்துக் கொள்ளும் ஆற்றல் திறன். ஆடலும் பாடலும் கூத்தும் கும்மாளமும் நிறைந்திருந்த காலமது. ஊர்ப் பெரியவர்கள் சிறுமி சுந்தராம்பாளை ஆலய உற்சவ பூசைகளில் கலந்து நலந் தரும் பாடல்கள் இசைக்க வழி செய்தனர்.

இது ஒரு பெரிய திருப்புமுனையாயிற்று. காய்ந்த குடும்ப வயிறு கனிந்தது. அழைப்புகள் பெருகின. பிழைப்புக்கும் வழி திறந்தது. குரலும் சிறந்தது. ''முருகா'' என்னும் தாரக மந்திரம் இறுதி மூச்சு வரை இவர் இரத்தத்துடன் கலந்தது. இன்பமும் துன்பமும் சகடக்கால் போல, இயற்கை விடுமா? ''பழம் நீயப்பா ஞானப் பழம் நீயப்பா'' என்று பாடி பலரை முருகனிடம் நாடவைத்த பெருமாட்டியல்லவா இவர்?

காலங்கள் மலர்ந்தன. சுந்தராம்பாளை இசை ஞானக் குழந்தை என்றனர். அவரது புகழ் பரவியது. படிப்பு வரா விட்டாலும் பாட்டு நன்கு வந்தது.

இவர் வசித்த குடிசைக்குப் பின்புறம் ரயில் ஓடும். அந்த ஒலிக்கு தாளத்துடன் பாடுவதைக் கண்டும் வியந்தனர். சங்கரதாஸ் சுவாமிகள் நாடக ஆசிரியர், நடிகர், பாடகர் வேலுநாயகரின் நாடக சபையில் முக்கிய தூண். அவரிடம் சுந்தராம்பாள் சென்றார். இறுதி ஒப்புதல் தேர்வுகளில் இவரே முதன்மை பெற்றார். நாடகத்தில் சேருவது என்பதே அன்று முயற்கொம்பு. எப்படியோ முருகன் அருளில் சுந்தராம்பாளைப் பாட்டொன்று பாடு என்றனர். உச்ச ஸ்ருதியில் வெளிவந்த குரல் சகலரின் வாய்களையும் அடைத்து விட்டது. இலட்சுமியும் சரஸ்வதியும் ஒரு சேர வரவேற்றனர்.

1917 இல் இவர் நாடக நட்சத்திரம் ஆனார். கண்டிப்புக்குப் பெயர் பெற்ற சங்கரதாசரும் கண்டிப்பைத் துண்டித்துக் கொண்டு கனிவுடன் பொருத்தமான பாடல் நிறைந்த பாத்திரங்களை கே.பி. எஸ்சுக்கு ஒதுக்கி முன்னேற்றினார். தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் இவர் நாடகங்களே பாட்டுக்காக முதன்மை பெற்றது. ஒலி பெருக்கி இன்றியே கேட்கவல்ல கானக்குரல். வானம் வரை அது எட்டும்.

சுவாமிகளின் நாடகக் குழு இலங்கையிலும் அடிக்கடி நாடகம் நடத்தியது. எஸ்.ஜி. கிட்டப்பா இன்னுமொரு நாடக நடிகர், ஸ்ரீ வள்ளி நாடகத்தில் முருகன் இவரே. தினைப்புனம் காத்த வள்ளியிடம் இவர் போகும் பொழுது ''காயாத கானகத்தே'' என்று பைரவியில் உச்ச ஸ்தாயியில் பாடத் தொடங்க மேடை அதிரும். எங்கும் நிசப்தம். உள்ளம் உருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டப்பா இலங்கையில் நாடகம் நடத்திக் கொண்டிருக்கும் போது சுந்தராம்பாள் பற்றிய செய்தியும் அவரை எட்டியது. இரகசியமாக சுந்தராம்பாள் நடித்த நாடகத்தைப் பார்த்தார். அதிர்ந்தார். வியந்தார். தன்னையே மிஞ்சி விட்டாள் என எண்ணினார். அவரை நண்ணினார்.

எனக்கு இணையான துணை இனி இவரே என்றும் தீர்மானித்தார். பல நாடகங்களில் இவர்கள் நடித்தனர். பாடல்கள் நிறைந்த நாடகங்கள் யாவும் இவர்களுக்காகவே விடிய விடிய நடத்தப்பட்டது. மக்களும் துடிப்புடன் ரசித்தனர். இவர்களுக்கு திருமணமும் நடந்தது. ஏற்கனவே கிட்டப்பா திருமணமானவர்தான். என்ன செய்ய? இசை இணைத்தது. ஒரு குழந்தையானதும் கிட்டப்பா இவர் கிட்ட வரவில்லை.

பிறந்த குழந்தையும் பத்து நாட்கள் அழுதுவிட்டுப் பதினொரா வது நாள் பரமனடி சேர்ந்தது. வேதனையும் சோதனையும் முருக பக்தையான கே.பி. எஸ்ஸுக்கு பல போதனைகளை ஊட்டியது. அகவை 26 இல் அல்லல் வாழ்வா? கலங்கவில்லை. சகலதையும் நிறுத்தித் துறவியானார்.

நாடக உலகில் இருந்தபடியே பெற்ற பாடற் பயிற்சி, இசை வாணர்கள் முன்வந்து கொடுத்த இலவச இசைப் பயிற்சி, அனுபவ முதிர்ச்சி, அயரா முயற்சி, பல் இசை உயர்ச்சிக்கு வழிவகுத்தது.

கர்நாடக சாஸ்திரீய இசை முதல் மெல்லிசை, துள்ளல் இசை, கிராமியப் பாடல்கள், குறவஞ்சி, பள்ளு, அந்தாதி சிந்து என எவ்வகைப் பாடல்கள் ஆயினும் மெய் தான் அரும்பி விதிர் விதிர்க்க வைக்கும். வகையில் பாடினார். இவர் குரலைக் கேட்டவர் யாழையும் குழலையும் மறந்தனர்.

அகவை 28 இல் கிட்டப்பா கடின சுகவீனத்துடன் இவர் பராமரிப்பில் இருந்து மறைந்ததும் கே.பி. எஸ். இடம் திரு இருந்தது, உரு மாறியது. அவர் தூய வெண்ணிற ஆடைகளை அணிந்தார். ''வெண்ணீறு அணிந்தது என்ன/ வேலைப் பிடித்தது என்ன? என்ன? என்று தோடியில் முருகனைக் கேட்ட பாங்கில் நெற்றி நிறைந்த பழனி விபூதி, கழுத்தில் உருத்திராக்கம், செருப்பு அற்ற பாதங்கள், மூச்சுக்கொரு தடவை ''முருகா'' என்னும் அவரது உச்சாடனம் உருகாத மனதையும் உருக்கும் தமிழ் உச்சரிப்பில் அத்தனை நெருக்கம். ''அன்னை தமிழால் வளர்ந்த அமுத மூதாட்டி'' என்று ராஜாஜி ஒரு தடவை வியந்து கூறினார்.

சுந்தராம்பாளின் முதல் திரைப்படம் ''பக்த நந்தனார்'' கூட நடித்தவர் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர். பாடல்களுக்காகப் பெருவிழா கண்டது. பின்பு மணிமேகலை. ''வெள்ளிவிழாக் கண்டது நீண்ட இடைவெளியின் பின் பலர் வற்புறுத்தலால் ஔவையார் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு நடித்தார். சன்மானம் 4 இலட்சம் ரூபா.

1953 ல் சிவாஜியின் வற்புறுத்தலால் ''மகா கவி காளிதாஸ்'' படத்தில் நடித்தார். இறுதியில் கலைஞருக்காக ''பூம் புகார்'' படத்தில் கவுந்தியடிகள் பாத்திரத்தில் நடித்தார். எதிலும் ஜோடி போட்டு நடிக்கவில்லை. கிட்டப்பா போன பின் ''பால் கூட அருந்தவில்லை. ஆலய தீர்த்தமே மருந்து, பொங்கல் மட்டுமே விருந்து. சுதந்திர தாக எழிச்சிக் காலங்களில் இவர் ஏறாத மேடையே இல்லை. தீரர் சத்திய மூர்த்தியும் கர்மவீரர் காமராஜரும் பிரபல இசை வாணர்கள், ஆத்மீக வள்ளல்களும் இவருக்கு விருதுகளை அள்ளி வழங்கினர்.

''ஒட்டுடையோர் எல்லாம் கேட்டிடுங்கள் ஓர் செய்தி'' என்ற தேச பக்திப் பாடல் சுதந்திர தாகத்தை தட்டி எழுப்பியது. முழுநேர இசை விருந்தில் தழுவாத இராக ஸ்வர பிரயோகங்கள் தவறாது ஸ்ருதி மாதா லயம் பிதா என்பதை நன்குணர்ந்தவர். இவரது எந்தக் கச்சேரியும் சோடை போனது கிடையாது.

தமிழிசைச் சங்க விழாவெனில் முழுப் பங்கையும் இவரே ஏற்பார். தலை சிறந்த வித்துவான்கள் அனைவரும் ஒருசேர இவரை வாயார புகழ்ந்து மகிழ்ந்தனர். இலங்கை மக்களுடன் சுந்தராம்பாள் இரண்டறக் கலந்தவர். நிதானம் தவறாதவர். நன்கு கனிந்த ஞானப் பழம், 72 மேளத்தையும் இசைத்து 80 ல் முருகன் பாதங்களை அணைந்தது என்றாலும் அவரது குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது.

**கலைமாமணி பொன். தெய்வேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மாயா ராவண் - நாட்டிய நாடகமல்ல"

# ஷோபனா

ஷோபனா - நடிகை பத்மினியின் உறவுப்பெண், திரைப்பட நடிகை, நாட்டிய மங்கை என பலவாறு அடையாளப் படுத்தப்பட்டாலும், பரதத்தின் மீது அவர் வைத்திருக்கும் தீராப்பற்றால் தன்னை ஒரு நாட்டியக் கலைஞர் என்று அடையாளப்படுத்தப்படுவதையே விரும்புகிறார். நாட்டிய நாடகம் என்ற எல்லைக்குள் அடங்காது 'மாயா ராவண்' என்றதொரு இசை, நாட்டிய வடிவத்தை உருவாக்கி, பரதக்கலைக்கு தன்னாலான சேவையை செய்து வருபவர். பரதம் கற்றுக்கொள்வதற்கு ஆர்வமும், ஈடுபாடும் மட்டுமே தேவையென கருதும் இளம் கலை ஆர்வலர்களுக்கு, அவர்களுடைய பொருளாதார சக்திக்கு முன்னுரிமை வழங்காமல், இலவசமாக தன்னுடைய நாட்டிய பயிற்சி கூடமான 'கலார்ப்பணா' வில் பயிற்சி அளித்து வருபவர். பல்வேறு சமூக மற்றும் பெண்களின் மேன்மைக்கான விழிப்புணர்வு நிகழ்வில் பங்குபற்றி, தன்னுடைய சமூகத்தின் மீதான அக்கறையை பறைசாற்றி வருபவர். ஒரே தருணத்தில் நாட்டியம் மற்றும் திரைப்படத்துறை என்று இரண்டு துறைகளிலும் இரட்டைச் சவாரி செய்து வருபவர். பரதக் கலையில் உள்ள நூற்றியேழு வர்ணங்களில் அறுபதிற்கும் மேற்பட்ட வர்ணங்களை மனப்பாடம் செய்து, ஆடக்கூடிய திறமையைப் பெற்றவர். நாட்டியத்துறை சார்பான தன்னுடைய பார்வையை கட்டுரைகளாக வடிவமைத்து தமிழகத்திலிருந்து வெளியாகும் முன்னணி ஆங்கில நாளிதழ்களில் எழுதியவர். இப்படி பலவற்றை கூறிக்கொண்டே செல்லலாம். இத்தகைய பெருமைகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும் ஒரு பரதக்கலைஞருக்கு உரிய தன்னடக்கத்துடன் வளைய வரும், இவரை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் கலைக்கேசரிக்காகச் சந்தித்தோம்.

*** திரைப்படத்துறையில் தீவிரமாக கவனம் செலுத்தாமல் நாட்டியத்துறையில் கவனம் செலுத்தி வருகிறீர்களே ஏன்?**

நாட்டியத்துறையில் தீவிரமாக பணியாற்றி வந்தாலும் கூட திரைப்படத்துறையிலும் கவனம் செலுத்தி வருகிறேன். எம்முடைய நாட்டிய பயிற்சிப்பள்ளியான 'கலார்ப்பணா' விற்காகத்தான் பெரும்பாலான மணித்தியாலங்களைச் செலவிடுகிறேன். ஏனெனில் பரதக்கலை என்பது விசாலமானது. பரந்து விரிந்தது. அதில் மூழ்கினால் தான் மாயா ராவண் போன்றதொரு முத்தை எடுக்க இயலும். இது போன்ற முத்துக்களால் தான் எம்மீது இப்படியொரு முத்திரை விழுந்திருக்கிறது. அதே தருணத்தில் எமக்கான முக்கியத்துவம் உள்ள திரைப்படத்திலும் நடித்து வருகிறேன்.

*** நடிகை பத்மினியம்மாவிடமிருந்து எதனைக் கற்றுக் கொண்டீர்கள்?**

பப்பிம்மாவிடமிருந்து ஒழுக்கத்தையும், தொழில் பக்தியையும், மற்றவர்களிடம் எப்படி மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும், சந்திக்க வருபவர்களிடம் எதனை, எப்படி பேசவேண்டும், பொதுமக்களைச் சந்திக்கும் போதும், மற்ற பெரிய சாதனையாளர்களை எதிர்கொள்ளும் போது, எப்படி எளிமையாக நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டேன். ஒரு கலைஞரின் தனித்திறன், அவர்களது கற்பனை வளத்தில் தான் வெளிப்படவேண்டுமே தவிர, ஈகோவில் தெரியக்கூடாது என்பார்கள். இதிலிருந்து நான் கற்றுக்கொண்டது என்னவெனில், யாரிடம் அளவுக்கதிகமான திறமையிருக்கிறதோ, அவர்கள் எளிமையாகவும், தன்னடக் கத்துடனும், தங்களை வெளிப்படுத்திக்கொள்ளாமலும் இருப்பார்கள். இதற்கு நேர் எதிராக யாரிடம் திறமை சற்று குறைவாக காணப்படுகிறதோ, அவர்கள் தங்களை வெளிப் படுத்திக்கொள்வதற்கான காரணத்தை கண்டறிவார்கள்.


*** தஞ்சை நால்வரால் கடந்த இரண்டு நூற்றாண்டு களுக்கு முன்பாக வடிவமைக்கப்பட்ட மார்க்கம் என்னும் முறையில் மாற்றங்கள் தேவையா? தேவை எனில் எப் பகுதியில் மேற்கொள்ளலாம்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய மதிப்பிற்குரிய நாட்டிய மேதை பத்மா சுப்ரமணியம், முப்பதாண்டுகளுக்கு முன் நாட்டியத் துறையில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்து, அதில் சிலவற்றினை அரங்கேற்றினார். அதனை அப்போதிருந்த விமர்சகர்கள், இது தேவையா? என விமர்சித்தனர். ஆனால் தற்போது அவர் அரங்கேற்றிய கூறுகள், தற்போதைய மார்க்கத்தை விட பழமையானவை என்று விமர்சிக்கிறார்கள். ஆக முப்பதாண்டுகளில் ஒரு விமர்சனம், தன்னுடைய பார்வையை மாற்றிக்கொண்டிருக்கிறது.

அத்துடன் பரதக்கலையின் அடிப்படைக் கூறுகளை எழுதியவர்கள் பெரும்பாலும் இந்து ஆலயங்களின் கோபுரத்திலும், அதன் உட்புற மற்றும் மேற்சுவர்களில் காணப்படும் ஓவியங்கள் மற்றும் சிலைகளைத்தான் முன் மாதிரியாக எடுத்துக்கொண்டு, ஆராய்ந்து உருவாக்கி இருக்கின்றனர். இதில் மாற்றுக்கருத்து எழ வாய்ப்பு இல்லை. அதனை விட, ஒவ்வொரு கலைஞரும், தன்னுடைய குருவிடமிருந்து கற்றுக்கொள்வது தான் இக்கலையின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம். குருவானவர்கள் எதனைக் கற்பிக்கிறார்களோ, அது தான் கற்பவர்களுக்கு கலை. அந்தக் கலையை நாம் மற்றவர்களுக்கு கற்பிக்கும் போது தான், அதில் புதுமையை புகுத்துகிறோம். ஏனெனில் குருவிடம் கற்ற கலையில் ஏற்படும் சந்தேகங்களை, எம்முள்ளேயே கேட்டுக்கொண்டு, அதற்கொரு தீர்வினை வழங்குகிறோம். இது குறித்து இத்துறை சார்ந்த மற்ற நிபுணர்களை கலந்து ஆலோசிப்பதில்லை. காரணம் தனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதனை வடிவமைக்கிறார்கள். இது தங்களுக்கு பிடிக்கவில்லையென்றால் அதனை பார்க்காதீர்கள். உதாரணத்தில் ஒரு நாட்டிய மேடையில் டிரம்ஸ் என்றதொரு மேலைத்தேய கருவி வாசிக்கப்படுகிறது. அதற்கு பரதநாட்டியம் ஆடுகிறார்கள். இது தங்களுக்கு பிடிக்கவில்லை என்றால், பார்க்காதீர்கள். பார்க்கிறவர்கள் பார்த்துவிட்டுப் போகட்டும்.

எமக்கு மார்க்கத்தின் அழகும், கம்பீரமும் பிடிக்கும். தனிப்பட்ட முறையில் நான் அதனை வரவேற்கிறேன். ஆனால் அதே தருணத்தில் மார்க்கம் என்று அறிவித்து விட்டு, அதனை ஆடினால் மட்டுமே வரவேற்பேன். இல்லையென்றால் விமர்சிப்பேன். இதற்கு நேர்மாறாக, 'ஃப்யூசன்' என்று அறிவித்துவிட்டு, நீங்கள் எந்த புதுமையைச் செய்தாலும் அதனையும் நான் மனதார வரவேற்பேன். காரணம் பார்வையாளனாக அமர்ந்திருக்கும் எம்முடைய மனநிலை, மேடையில் உள்ள கலைஞரிடமிருந்து பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் எதிர்பார்க்காது என்பதால் மனதார வரவேற்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட நாட்டிய கலைஞர்களின் திறமையை துல்லியமாக இனங்கண்டறிந்து விமர்சிக்க கூடிய தகுதியான கலை விமர்சகர்கள் மிகமிகக் குறைவு என்பதனையும் குறிப்பிடவிரும்புகிறேன்.

*** பாணிகளின் தோற்றத்தால் நாட்டியத்துறை வளர்ச்சியடைந்திருக்கிறதா?**

பாணிகள் என்று பார்த்தோமானால், லேட்டஸ்ட்டாக அறிமுகமாகயிருக்கும் பாணி கலாச்சேத்ரா பாணி. இதற்கு முன்னர் வழுவூரார் பாணி இருந்தது. இதற்கு முன்னர் பந்தநல்லூர் பாணி. அதற்கு முன்னர் கிட்டப்பா பிள்ளை என சில பாணிகளே இருந்திருக்கிறது. ஒவ்வொரு பாணியிலும் தங்களின் குருவிடம் கற்ற கலையும், அவர்களின் கற்பனை வளமும் கலந்திருக்கும் நிலையை காண முடிகிறது. அதனால் நாட்டியத்துறையின் வளர்ச்சிக்கு பாணிகளும் ஒரு காரணம் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

*** தங்களின் கற்பனையில் உதித்த மாயா ராவணைப் பற்றி....?**



மாயா ராவண் என்பதே முற்றிலும் புதுமையானது. இது ஒரு நாட்டிய நாடகமல்ல. இது அனைவருக்கும் எளிமையகாகப் புரியக்கூடியது. ஏனெனில் இதில் நாடகமும் உண்டு. நாட்டியமும் உண்டு. அதில் இடம்பெறும் ஒவ்வொரு காட்சியமைப்பிற்கும் எத்தகைய நடன வடிவம் தேவைப்படுகிறதோ அதனை இணைத்திருக்கிறோம். கதகளி இருக்கும். குச்சிப்புடி இருக்கும். திரைப்பட பாடல்கள் இருக்கும். மாயா ராவணில் ஒரு காட்சி இராவணன் கனவு காணும் காட்சி. இக் காட்சியில் நாங்கள் திரைப்படப் பாடலை இணைத்து, நாட்டியத்தை வடிவமைத்திருக்கிறோம். ஏனெனில் காட்சியமைப்பின் படி நாயகன் கனவு காண்கிறான். இங்கும், நாட்டிய சாஸ்திரத்தின் படி இயங்காமல், மக்களுக்கு புரியக்கூடிய, மக்கள் இரசிக்கக்கூடிய பாடலையும், நாட்டியத்தையும் இணைத்திருக்கிறோம். அத்துடன் சில பொழுதுபோக்கு அம்சங்களையும் இணைத்திருக்கிறோம். சுருக்கமாகச் சொல்லப்போனால் நாட்டியத்துறை, நாடகத்துறை, கற்ற கல்வி ஆகியவற்றில் பெற்ற எம்முடைய அனுபவத்தின் முழுமையான வெளிப்பாடு தான் மாயாராவண். மாயாராவண் ஒரு இங்கிலீஷ் மியூசிக்கல்.

*** அடவுகளுக்கு பாவனை வேண்டுமா? வேண்டாமா?**

அடவுகளுக்கு பாவனை வேண்டும். ஆனால் மேலைத்தேய நாடுகளில் அடவுகளைக் கற்பிப்போர், இதனை ஒரு உடற்பயிற்சி என்றே குறிப்பிட்டு, கற்பிக்கிறார்கள். ஆனால் எம்மிடம் கற்போர் களுக்கு அடவுகளை சொல்லிக்கொடுப்போம். கற்றுக்கொள்கிறவர் களின் ஆர்வம் மற்றும் ஈடுபாட்டைப் பொறுத்து, அந்த அடவு களுக்குள் வைக்கப்படவேண்டிய சில நுட்பமான விடயங்களை கற்பிக்கிறோம். நாட்டியம் கற்றுக்கொள்ளும் கலைஞர்களின் ஆர்வத்தைப் பொறுத்தே அடவுகளில் பாவனை இடம்பெறும். ஆனால் எம்மைப் பொறுத்தவரை அடவுகளுக்கும் பாவனை வேண்டும். அது இருந்தால் தான் பரதத்தில் நளினம் இருக்கும், அது ரசிக்கக்கூடிய தாகவும் இருக்கும்.

*** மிருதங்க கலைஞர் மற்றும் ஜதி சொல்லும் நட்டு வனாரின் ஆதிக்கத்தில் தான் ஒரு நாட்டிய கலைஞரின் மேடை இருக்கிறது என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறீர்களா?**

ஒப்புக்கொள்ளவும் மாட்டேன். மறுக்கவும் மாட்டேன். ஏனெனில் ஒரு நாட்டிய கலைஞரின் மேடையில் ஜதி சொல்லும் நட்டுவனார், மிருதங்க கலைஞர் என எல்லோரும் ஒரு பக்க வாத்திய கலைஞர்கள் தான். பிரதானம், நாட்டிய கலைஞரே. அது மட்டுமல்ல, ஒரு நாட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் நாட்டியம் தான் பிரதானம் தவிர ஜதி சொல்பவர்களோ அல்லது மிருதங்க கலைஞர்களோ முக்கியமல்லவே! அதையும் மீறி நாட்டியத்தின் இடையே, ஜதி சொல்லும் நட்டுவனார் தன்னுடைய தனித்திறமையைக் காட்டினால்.... அல்லது மிருதங்கக்கலைஞர் தன்னுடைய தனித்திறமையைக்காட்டினால்.... அந்த நாட்டிய நிகழ்வு எதிர்பார்த்த குறைந்தப் பட்ச வெற்றியைக்கூட பெறாது. ஒரு நாட்டிய நிகழ்ச்சியில் மிருதங்க கலைஞரும், ஜதி சொல்லும் நட்டுவனாரும் பாதமாடும் கலைஞரின் திறமையை மேம்படுத்தும் விதத்தில் தானே செயல்பட வேண்டுமே தவிர, அவர்களை தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரக்கூடாது. ஆனால் அதே தருணத்தில் நாட்டியத்துறையில் அனுபவம் வாய்ந்த ஒரு கலைஞரின் நிகழ்ச்சியில், ஜதி சொல்லும் நட்டுவனார்களும், மிருதங்க கலைஞர்களும் தங்களுடைய முத்திரையை பதிக்க தவறக் கூடாது. இது தவிர சில மேடைகளில் குருவானவர், ஜதி சொல்லுபவராக இருந்தால், தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றுவது இயற்கை. ஆனால் தங்களுடைய சீடரின் திறமையை, மற்றவர்கள் குறைத்து மதிப்பிடும் அளவிற்கு செயல்படக்கூடாது என்பதே எம்முடைய வேண்டுகோள்.



*** 'கிருஷ்ணா நீ பேகனே...' எனத் தொடங்கும் வாத்சல்ய பாவனையில் உள்ள பாடலுக்கிடையே ஜதியை இணைப்பதை வரவேற்கிறீர்களா?**

என்னுடைய சொந்த கருத்து என்னவெனில், இதனை நான் வரவேற்க மாட்டேன். எம்முடைய வடிவமைப்பில் ஜதியை இணைக்கமாட்டேன். ஏனெனில் அது இடையூறாக இருக்கும். ஆனால் ஜதியை இணைத்திருக்கிறார்கள் என்றால், அவ்விடத்தில் தங்களுடைய கற்பனையை புகுத்தியிருக்கிறார்கள். ஒரு சில கலை ஆர்வலர்களுக்கு இது பொருத்தமாக இல்லை என்று அபிப்ராயம் கூறியிருப்பார்கள். ஒரு சிலர் ஏன் பொருத்தமாகத் தானே இருக்கிறது என்று பேசியிருப்பார்கள். இது ஒவ்வொரு பார்யைாளர் மற்றும் கலை ஆர்வலர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்குட்பட்டது. எம்மால் ஒப்புக்கொள்ளமுடியாது.

*** ஒவ்வொரு நாட்டிய கலைஞரின் உடல்வாகிற்கு ஏற்றபடிதான் நாட்டியத்தை கற்பிக்கவேண்டும் என்ற பொது விதி இருக்க, இதற்கு நேர்மாறாக ஒவ்வொரு நாட்டிய கலைஞருக்கும் ஸ்டிப்னெஸ் தேவை என வலியுறுத்தும் கலாச்சேத்ராவின் பாணியைக் குறித்து தங்களின் அபிப்ராயம் என்ன?**

பத்மாக்கா ஸ்டிஃப்னெஸ் தேவையில்லை என்று கூறும் போது, கலாச்சேத்ரா தேவை என்று வலியுறுத்தி, செய்து காண்பித்தது, அவர்களுடைய பாணி என்று தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இது ஆரோக்கியமானதா? இல்லையா? என்பதை விட, பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கிறதா? என்பதை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும். கோவில்களில் உள்ள சிலையைப் பார்த்து தான் நாடடியத்தை கற்பிக்கிறோம் என்றாலும், இருவர் முத்திரையும் ஒன்றே. ஆனால் அதற்கிடையேயான செயல்பாடு எப்படியிருந்தது என்பதில் தான் இருவரும் வேறுபடுகிறார்கள். இது தவறு என்று கூறமாட்டேன். ஏனெனில் இது அவரவர் களுடைய கற்பனைத்திறன்.

எமக்கும் ஸ்டிஃப்னெஸ் பிடிக்கும். ஆனால் எதில்.. எந்தளவிற்கு ஸ்டிஃப்னெஸ் தேவையென்பதில் தான் இதுவரை ஒருமித்த கருத்து எழவில்லை என்று எண்ணுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*** சமீபகாலமாக நாட்டிய மேடைகளில் வீற்றிருக்கும் நட்டுவனார்களின் ஜதிகளில் மிருதங்கச் சொற்கள் அதிகமாக இடம்பெறுகிறதே ஏன்?**

*பழைய ஜதி மீதான ஈர்ப்பு குறைந்துவிட்டது என்றும் கருதலாம். அல்லது மிருதங்க கலைஞர்களின் தாளகட்டுச் சொற்களின் ஜாலம் நட்டுவனார்களை கவர்ந்திருக்கலாம். அதனால் ஜதிகளின் போது மிருதங்கச் சொற்களை அனுமதித்திருக்கலாம். இதனை நான் வரவேற்கிறேன். ஏனெனில் மரபுக்குட்பட்ட புதுமை. இதில் என்ன தவறு? தத், தித்,திண்,ணோம் என்ற நான்கு சொற்களைத்தான் பயன்படுத்தவேண்டும் என்று நாட்டிய சாஸ்திரத்தில் உறுதியாகக் கூறப்படவில்லை எனும் போது மிருதங்கச் சொற்களைப் பயன்படுத்துவதில் தவறில்லையே. இருப்பினும் இன்றைய கலைஞர்களுக்கு பழைய ஜதிச் சொற்கள் மற்றும் மிருதங்கச் சொற்கள் என இரண்டிலும் கற்பிக்க வேண்டும். எம்மைப் பொறுத்த வரை தவிலிசைக்கலைஞர் வலையப்பட்டி அவர்களின் தவிலுக்கு நான் ஆடியிருக்கிறேன்.*

*** பாடல்களுக்கு நாட்டியத்தை வடிவமைக்கும் போது பரதத்துடன் வேறு கலைகளான குச்சிப்புடி, ஒடிசி, கதக், கதகளி என வேறு கலைகளின் கூறுகளையும் இணைத்து அமைக்கிறார்களே. இது ஆரோக்கியமானது தானா?**

*இம்மாதிரியான வடிவமைப்பில் வேண்டும் என சில அமைப்புகள் வலியுறுத்துவதால் தான் இந்நிலை ஏற்பட்டுள்ளதற்கு காரணம். அத்துடன் பார்வையாளர்களும் மாறிவிட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். பாரம்பரியம் மாறாத பரதத்தையும், இன்றைய இளைய தலைமுறையினர் விரும்பும் கலப்பு பாரம்பரிய நடனத்தையும் எம்மால் ஆடஇயலும். உதாரணத்திற்கு ஏ. ஆர். ரஹ்மானின் பாடலுக்கு நாங்கள் நாட்டியத்தை வடிவமைத்து ஆடியிருக்கிறோம். பலமான வரவேற்பையும் பெற்றிருக்கிறோம். ஆனால் எமக்கு பாரம்பரிய நாட்டியத்தில் ஆடுவதில் தான் திருப்தி உள்ளது.*

*** நாட்டியம் கற்கும் அனைவருக்கும் அரங்கேற்றம் அவசியமா?**

*அவசியம் தான். ஏனெனில் இன்றைய கட்டத்தில் இளைய தலைமுறையினரிடம் கவனச்சிதறலை ஏற்படுத்தி, அவர்களை தற்காலிகமான மகிழ்ச்சிக்கு பழக்கப்படுத்த ஏராளமான விடயங்கள் இருக்கும் போது, அதனை எல்லாம் தவிர்த்து, ஒரு கலை மீது ஈர்ப்பு ஏற்படுத்திக்கொண்டு, அதனை, அதற்குரிய பாரம்பரியத்துடன் சில ஆண்டுகள் தொடர்ச்சியாக கற்றுக் கொள்கிறார்கள். முதலில் அதற்கு மரியாதை கலந்த வணக்கத்தை மனமுவந்து தெரிவிக்கவேண்டும். இதனை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாக அமையும் அரங்கேற்றத்தை நான் உறுதியாக ஆதரிக்கிறேன்.*

*** எதிர்கால திட்டம் என்ன?**


*தற்போதைக்கு 'கிருஷ்ணா காட் ஆஃப் ப்யூச்சர்' என்ற நாட்டிய நாடகத்தை வடிவமைத்தில் ஈடுபடுத்திக்கொண்டுஇருக்கிறேன்.*

***வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளவிரும்பும் விடயம் என்ன?**

*தங்களுக்குள் உறவுகளை வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் போதுமான நேரத்தை ஒதுக்கவேண்டும். குடும்ப உறவுகளை மேம்படுத்திக்கொள்வதன் மூலமே ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆரோக்கியமான சமுதாயமே கலையின் வளர்ச்சிக்கு அடிப்படை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திப்பு - ஆர். கோபி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணப் பண்பாடு:

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

### ஆடை அணிகலன்கள்

கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களிற் பலர் சுதேசிய, விதேசிய உடைகளைக் கலந்து பயன்படுத்தினர். தமது பாரம்பரியப் பண்பாட்டு அடையாளங்கள் சிலவற்றை இழக்க விரும்பாத மனநிலையிலேயே அவர்கள் இருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் பலவுள. வகை மாதிரிக்கு வண. முருகப்பா சதாசிவம் (Rev. Thomas peter Hunt) என்பவரின் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம்பெறுவதைச் சுட்டிக் காட்டலாம்.

''அவருடைய (Hunt) உடை எப்போதும் ஒரே தன்மையதே. கொய்யப்பட்ட ஒற்றைப் பட்டு வேஷ்டியை உடுத்து, தலையிற் 'பழைய காட்' லேஞ்சி தலைப்பாகையாகக் கட்டி பொத்தான் வெளியே தோன்றும் மூடு சட்டை போட்டுச் சாதாரண செருப்போடு வெள்ளை உறைபரவிய கறுப்புக் குடையுமே இவரது சபை சந்திக்குரிய உடுப்பு. தூது வளங்காய்ப் பரிமாணமான கடுக்கன் ஒரு சோடி இவர் காதில் மரண பரியந்தம் தொங்கியது.''

யாழ்ப்பாணத்து ஆடவர்களிற் பலர் குடுமியுடனும், கடுக்கனுடனும் இருந்தார்கள் என்பதை இன்றைய தலை முறையினர் அறிய மாட்டார்கள். இந்த மரபு இப்போது சற்று வேறுபட்ட கோலத்திற் புலம் பெயர் இளைஞர்களிடையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டில் ஆண்கள் கடுக்கன் அணிந்தமை அவர்களது பொருளாதாரச் சிறப்பின் அடையாளமாகவும் அமைந்ததெனலாம். எல்லா ஆண்களும் கடுக்கன் அணிந்தார்கள் என்று கூற முடியாது. யாழ்ப்பாணச் சமுகத்திலே 'பொன்' சேமிப்பின் அடையாள மாகவும் விளங்கியது. பணத் தேவை ஏற்படும் பொழுது தம்மிட முள்ள பொன் ஆபரணங்களை விற்றோ அல்லது அடகு வைத்தோ பணம் பெறும் வழக்கமும் இருந்தது. உதாரணமாக முருகப்பா என்பவரின் வாழ்க்கைச் சம்பவம் ஒன்றைச் சுட்டிக் காட்டலாம்.

**''முருகப்பா பிள்ளைகளின் கல்விப் பயிற்சியின் வாஞ்சையினாலும் பொருட் கஷ்டத்தினாலும் தான் அணிந்திருந்த கடுக்கன்களைக் கழற்றி விற்று, ஒரு பாரத ஏடுவாங்கிப் பிள்ளைகள் படிப்பதற்காகக் கொடுத்தார்.''**

இம்மேற்கோளில் இரண்டு உண்மைகள் பொதிந்து கிடப்பதை அவதானிக்க முடிகின்றது. ஒன்று : யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக வாழ்வை அர்ப்பணித்தனர் என்பது. இரண்டு : ஒரு சோடி கடுக்கன்களின் பெறுமதி ஒரு மகாபாரத ஏட்டிற்கு இருந்தது என்பது யாழ்ப்பாண மக்கள் 'பொன்விலை' கொடுத்தே கல்வியைப் பெற்றனர் என்பதற்கு இது சான்றாகும்.

ஆண்கள் அரைஞாண் கொடி கட்டும் வழக்காறும் நம்மிடையே இருந்தது. வசதிபடைத்தவர்கள் வெள்ளியினால் ஆன அரைஞாண் கொடியினைக் கட்டுவர். ஆண்கள் இப்போது அரைஞாண் கொடி கட்டும் வழக்கம் முற்றாகவே அருகி விட்டது எனலாம். ஆனால் இன்றும் குழந்தைகளுக்கு அரைஞாண் சங்கிலி, பஞ்சாயுதமும் சங்கிலியும் முதலான அணிகலன்கள் அணியப்படுவதையும் காணலாம்.

ஆங்கிலக் கல்வி, அதன் வழி வந்த பதவிகள் காரணமாக யாழ்ப்பாணச் சமூக அடிநிலை மக்களின் ஆடை அணிகலன் களிலே பல மாற்றங்கள் உண்டாயின. சாதிப்பாகுபாடு பலமாக நிலவிய சமூகத்திலே இம்மாற்றம் ஏற்றுக் கொள்ள முடியாத தாய், ஜீரணிக்க முடியாததாய் இருந்தமை பற்றி இலக்கியங்கள் நிறையவே பேசுகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எழுந்த இலக்கியமொன்றிலே





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**''வண்ணார், வடுகர், பணிக்கர், பண்டாரம்**
**மடப்பளியார், பரதேசிகள் சட்டையும்**
**எண்ணுஞ் சரிகை யுறுமாலுப் போட்டிப்போ**
**யான் பிரபென்கிறார் பாருமடி''**

இவ்வாறு பாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வேளாள சமூகத்தின் மேலாண்மை மெல்ல மெல்லக் கீழிறங்குவதைக் கண்டு சகிக்காத உள்ளத்தின் குமுறலாக இப்பாடலை அடையாளம் காணலாம்.

### பெண்களின் உடைகளும் அணிகலன்களும்

யாழ்ப்பாணப் பிரதேசத்திற் பெண்களின் உடைகள் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரே தன்மைத்தாக இருந்தது என்று கூற முடியாது. உடைகளை உடுக்கும் விதத்தில் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணச் சமூகத்திலே உயர்சாதிப் பெண்கள் உடுக்கும் உடைக்கும் அடி நிலைச் சமூகப் பெண்கள் உடுக்கும் உடைக்கும் உடுக்கும் முறைமையிலே வேறுபாடுகள் காணப்பட்டன. பெரும்பாலான உயர்சாதிப் பெண்கள் சேலை உடுத்து (சாறி) மேற்சட்டை அணிந்திருந்தனர். சிலர் சேலையை இடுப்பிலே கட்டித் தொங்கலை மார்பை மூடிப் போட்டுப் புறத்தாலே சுற்றிக் கட்டி இருப்பர்.

அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் குறுக்குக் கட்டாகக் கட்டி இருப்பர் (இதற்கு புறநடையும் உண்டு). அடி நிலைச் சமூக ஏழைப் பெண்களின் உடை பற்றிக் காதலியாற்றுப் படை ''கந்தை உடையினர் குறுக்குக் கட்டினர்'' எனக் குறிப்பிடுவதை இவ்விடத்திலே நினைவு கூரலாம்.

யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடைப் பாரம்பரியம் பற்றித் திருமதி ஹரியற் வின்சிலோ அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுவர்.

**''பெண்கள் சேலையை இடுப்பில் உடுத்து இன்னொரு பகுதியால் தங்கள் மார்பை மறைத்துக் கட்டுவார்கள். மிகுதியான துண்டால் தங்கள் தோளைப் போர்த்துவார்கள்.. தாழ்த்தப்பட்ட வகுப்பில் உள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியை மூடுவதற்குச் சமூகம் அனுமதி அளிப்பதில்லை.''**

தாழ்த்தப்பட்ட வகுப்பில் உள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியை மூட அனுமதிக்காமை, குரூரமான சமூக அடக்குமுறையென்பதையே புலப்படுத்தி நிற்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவிலே தோன்றிய ஆக்க இலக்கியங்களில் இவ்விடயம் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1830 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி திருமதி வின்சிலோ அம்மையார் தமது சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடையைப் பற்றிக் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்குரியது.

**''சுதேச கிறிஸ்தவர்கள் எங்களைச் சேர்ந்ததும் தங்கள் உடையை மாற்றுவதில்லை. நாங்களும் அதனை விரும்புவதில்லை. பெண்கள் தங்கள் இடுப்பு வரை ஒரு சேலையைக் கட்டி, அதன் ஒரு பகுதியால் தங்கள் தோள்களை மூடுவார்கள். எங்கள் கூட்டங்களுக்கு வரும் போது நாணயமாக உடுத்தி வருவார்கள். பொதுவாக அமெரிக்கப் பெண்களை விட இவர்களின் நடைத் தூய்மை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள பெண்கள் தங்கள் கைகளையும் கால்களையும் தவிர்த்து உடல் முழுவதையும் துணியால் முறைப்படி மூடிக் கொள்வார்கள். கடுங்காற்று வீசித் தங்களை விழுத்தினாலும் பிறர் பார்வைக்கு இவர்களின் உடல் தென்படாதவாறு இவர்களின் உடை சீராக இருக்கும்.''**

மேலைத்தேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடையைப் பற்றி இவ்வாறு கூறுவது மிகவும் முக்கியமானது. கிறிஸ்தவத்தின் செல்வாக்கு ஆரம்பத்தில் பெண்களின் உடையில் பெருமளவு மாற்றத்தைக் கொண்டு வரவில்லை என்பதைத் திருமதி வின்சிலோவின் கூற்று மெய்ப்பிக்கிறது. ஆனால் நாளடைவில் பெண்களின் உடையிலே கிறிஸ்தவத்தின் செல்வாக்குக் கணிசமானளவு இடத்தைப் பிடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





19 ஆம் நூற்றாண்டில் உயர் சாதிப் பெண்களும், கிறிஸ்தவத்தோடு இணைந்து கொண்ட பெண்களுமே மேற்சட்டை போடும் வழக்கமுடையவர் களாக இருந்தார்கள் என்பதை மிஷனரிமார் பல்வேறு இடங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்கள் பொன், வெள்ளி, செம்பு முதலானவற்றால் ஆன ஆபரணங்களையே அணிந்தனர். பெண்களின் தகுதியை (தராதரத்தை) அணிகலன்களே தீர்மானித்தன எனலாம். பொருளாதார வசதி படைத்தவர்களே பெரும்பாலும் பொன் ஆபரணங்களை அணிந்தனர். ஓரளவு வசதியுடையோர் வெள்ளி, செம்பு, (பித்தளை) முதலானவற்றை அணிந்தனர். ஏழைகள், அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆபரணங்களை அணிந்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணச் ச மூகத்தின் சேமிப்பாகப் பொன் ஆபரணங்களே இருந்தன என்பதை ஏலவே குறிப்பிட்டோம். பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பட்டியல் இடுவது சாத்தியமற்றது. வகை மாதிரிக்குக் காதலியாற்றுப் படையில் வரும் பின்வரும் பகுதியைச் சுட்டிக் காட்டலாம்.

**"........... தாலியும்**
**அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி**
**பூரானட்டியல் கீச்சுக்கல் அட்டியல்**
**கடுகு மணிக் கொலுசு கவுத்தோர், காதுப்பூ**
**வாளி, சிமிக்கி, வளையல், தோடு**
**பட்டணங்காப்பு, பீலிக்காப்புப்**
**பாதசரமொடு சங்கிலிச் சிலம்பு**
**தூங்கு கடுக்கன் நட்டுவக்காலி**
**அரும்புமணி முருகு கொன்னைப்பூவும்**
**ஒட்டியாணம் ஒளிபெறுநுதலணி**
**அரைஞாண் கயிற்றொடு அரைமுடி சலங்கை"**

யாழ்ப்பாணப் பிரதேசப் பெண்கள் அணிந்த ஆபரணங்களின் பட்டியலைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பிரக்ஞைபூர்வமாகவே பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிடப்பட்ட ஆபரணங்களிற் பல இன்று பயன்பாட்டில் இல்லை. அவற்றுக்குப் பதிலாக வெவ்வேறு வடிவில் வெவ்வேறு வகையில் அணிகலன்கள் வந்து விட்டன. 'அரைமுடி சலங்கை' என்ற அணிகலன் இப்பொழுது இல்லாமலே போய் விட்டது. அரைமுடிச் சலங்கை பற்றி மிஷனரிமாரின் குறிப்பொன்று பின்வருமாறு:

"சிறு பிள்ளைகள் ஐந்து அல்லது ஆறு வயது வரை, பொதுவாக எவ்வித உடுப்பும் உடுத்துவதில்லை. இப்பிள்ளைகளின் அரையில் கயிறு அல்லது வெள்ளிச் சங்கிலி கட்டித் தங்கள் பிறப்புறுப்பை மறைக்க இரண்டு மணிகளை அணிவார்கள். அவர்கள் நடக்கும் போது இவை கலகலவென ஒலிக்கும்."

அணிகலன்கள் எமது பண்பாட்டுத் தளத்தில் மிகுந்த பெறுமதி உடையனவாய் இருந்தன என்பதை மறுக்க முடியாது. ஒரு காலத்தில் பெண்களின் அழகை மாத்திரமல்ல, சமூகப் பெறுமானத்தையும் பொன் ஆபரணங்களே தீர்மானித்தன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இந்தப் பொன் அணிகலன்களுக்குப் பின்னால் கைவினைக் கலைஞர்களின் அழகியல் உணர்வும், ஆக்கத்திறனும் நுட்பமான விவேகமும் இருந்தன என்பதை இலக்கியங்களோ வேறு ஆவணங்களோ பதிவு செய்யாமை எமது சமூகத்தளத்தின் பண்பாட்டுப் பலவீனத்தையே காட்டி நிற்கிறது.

**வளரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIP TOP TRAVELS & TOURS

ADJUSTABLE SEAT | AIR CONDITIONED | TV/DVD | DAILY SERVICE

**Tel: 011 236 1144 / 236 4999 / 077 3236354**

**Tip Top Travels, # 296/A1, Galle Road, Wellawatta.**

Office Tele: 077 3236354 / 0777 520284

(பிரயாணத்தில் மாற்றம் இருப்பின் 6 மணித்தியாலங்களுக்கு முன் அறிவிக்கவும்)




**Colombo - Jaffna**



**Tip Top Travels**

Tour arrangement, Hotel Booking & Transport

**கொழும்பு - யாழ்ப்பாணம்**



## *Our Services:*

**Tip Top Guest House Holiday Bungalow**
# 23, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
Tele: 077 3236354
Comfortable rooms, Attached Bathroom,
Hot water, Full furnitures

**Tip Top Guest House**
# 34/2, Church Road, Nuwar-Eliya.
Tele: 052 2235742
Comfortable rooms with food,
Attached Bathroom, Hot water, Heater,
Function Hall, Wedding Hall & Restaurant

24 Hrs Service

**யாழ்ப்பாணத்தில் ஆசனப்பதிவுகளுக்கு**

யாழ்ப்பாண தலைமையகம்:
**R.B. BOOKING CENTRE**
இல. 15, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்,
(மரக்கறி மார்க்கட் அருகாமையில்)
*Tel: 021 2227016 / 021 2228356*

கிளை:
**R.B. BOOKING CENTRE**
நவீன சந்தை கீழ்தளம்
(வைரவர் கோவில் அருகாமை)
*077 9849690 / 021 4908188*
*077 6103236*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவிற் கடவை மலைச்சாரல் கோவில்

சிவனை முழு முதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயம் மிகவும் தொன்மையானது. இக்கருத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக ''சைவம் சிவனுடன் சம்பந்தமானது'' என திருமூலர் சைவத்துக்கு இலக்கணம் கூறியுள்ளார். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் சிவனுக்கு ஈழமெங்கும் பல ஆலயங்கள் இருந்ததாக நாம் அறிகிறோம். பழந்தமிழர்கள் கடவுட் கொள்கை உடையவர்களாகவும், முழுமுதற் கடவுள் ஒருவரைப் பற்றிய கோட்பாடுகளைக் கொண்டிருந்தார்கள் எனவும் பழந்தமிழ் நூல்கள் மூலம் நாம் அறிகிறோம்.

### அமைவிடம்


ஈழத்திலுள்ள புராதன சிவாலயங்களுள் கீரிமலை சிவன் கோவிலும் ஒன்றாகும். அது மாத்திரமல்லாமல் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவன் கோவில்களில் கீரிமலை சிவன் கோவிலே மிகவும் பழைமையானதாகும். இவ் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கோவில் யாழ்ப்பாணத்தில் இருந்து அண்ணளவாக பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது. கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேயன்துறை ஆகிய மூன்று கிராமங்களும் உள்ளடங்கிய பிரதேசம் 'கோயிற் கடவை' என்ற பெயரால் சிறப்பாக அழைக்கப்பட்டு வந்தது.

### பூர்வீக வரலாறு

இக்கோவில் ஆதி காலத்தில் நகுலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம் என பலவாறு அழைக்கப்பட்டுள்ளது. 'விஜயன் தனது அரசாட்சியை ஆரம்பிக்கும் முன்னர், தன் அரசுக்குப் பாதுகாப்பாக நான்கு திக்கிலும் நான்கு சிவாலயங்களை எழுப்பினார்' என யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்பட்டுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதியில் நாக இனத்தவர்களின் இராசதானியாக விளங்கிய 'கதிரமலை' என்ற இடமே தற்போது 'கந்தரோடை' என அழைக்கப்படுகிறது. நாக அரசர்களுடன் நட்புக் கொண்ட விஜயன், வட பகுதிக்குப் பாதுகாப்பாக கீரிமலைச் சாரலில் 'திருத்தம்பலை' எனும் பகுதியில் திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோவிலைக் கட்டினான். மேலும் காசியிலிருந்து 'வாமதேசாசாரியன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னும் பிராமணரையும் இங்கு வரவழைத்து கோவில் பூசைக் கடமைகளையும் செய்வித்தான் எனவும் இக்கோவில் காணப்பட்ட கிராமத்திற்கு 'கோவிற் கடவை' என்ற சிறப்புப் பெயர் உருவானது எனவும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இச்சிவாலயம் சிறப்புப் பெற்று விளங்கியுள்ளதை புராண வரலாறுகளும் ஐதீகங்களும் எமக்கு விளக்கியுள்ளன. பல்வேறு காரணங்களால் காலத்துக்குக் காலம் ஆலயங்கள் அழிக்கப்பட்டதை நாம் அறிகிறோம். எனவே அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயத்தை விஜயன் மீளக் கட்டியிருக்கலாமே அன்றி புதிதாக ஆலயத்தைக் கட்டினான் என்பதை ஏற்க முடியாது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய ஆலயங்கள் எவ்வளவு பழைமையானவையோ, அத்தகைய பழைமை கொண்ட ஆலயந்தான் நகுலேஸ்வரம் என்பது பொதுவான கருத்தாகும். கி.மு. 1500 வருடங்களுக்கு முன்பு வட இந்தியாவில் அரசாண்ட பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு புண்ணிய தீர்த்த ஷேத்திரமான நகுலமலையைக் கொண்ட மணிபுரத்திற்கு வந்தான் என்ற மகாபாரதக் குறிப்பில் இருந்து நகுலேஸ்வரம் என்ற தலத்தின் தொன்மையை நாம் அறியலாம்.



### காரணப் பெயர்

நகுல முனி என்பவர் சாபம் காரணமாக தான் பெற்ற கீரிமுகத்தை நீக்குவதற்காக கோவிற் கடவை மலைச்சாரலில் தங்கியிருந்து அங்கிருந்த புனித தீர்த்தத்தில் நீராடி தன் முகத்தில் இருந்த குறை நீங்கப் பெற்றார் என்பது வரலாறு ஆகும். இக்காரணத்தாலே அவர் தங்கியிருந்த இடத்திற்கு கீரிமலை என்ற பெயர் வழங்கப்பட்டது. இச்சம்பவத்தின் பின்னர் திருத்தம்பலேசுவரர் கோவில் 'நகுலேசர் கோவில்' என்றும் திருத்தம்பலேசுவரி கோவில் 'நகுலாம்பிகை' கோவில் எனவும் வழங்கப்பட்டது என யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்பட்டுள்ளது.

கீரிமலைத் தலத்தின் சிறப்பை மாருதப் புரவீகவல்லியின் வரலாற்றிலும் நாம் காணக் கூடியதாக உள்ளது. முனிவர் ஒருவரின் சாபத்துக்கு உள்ளான மாருதப் புரவீக வல்லி குன்ம நோய் காரணமாக குதிரை முகம் பெற்றுக் காணப்பட்டாள். இதனால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மாருதப்புரவீக வல்லிக்கு 'மருந்துகள் எதுவும் பயன்தராது. தீர்த்த யாத்திரையின் மூலமே சுகமடைவாய்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என சந்நியாசி ஒருவர் கூறினார். மேலும் ''இலங்கையின் வடமுனையில் கீரிமலை என்றொரு மலையுண்டு. அங்கே உவர்ச்சல் மத்தியில் சுத்த தீர்த்தமும், மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தம் ஒன்று உண்டு. அப்புனித தீர்த்தத்திலே நீராடினால் சுகம் பெறுவாய்'' எனக் கூறினார். அவர் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு புறப்பட்டு வந்த மாருதப் புரவீகவல்லி, கீரிமலைச் சாரலில் தவம் செய்து கொண்டிருந்த நகுல முனிவரைக் கண்டு வணங்கி, தன் சாபம் பற்றிக் கூறினாள். நகுல முனிவரும் தல மகிமை, தீர்த்த விசேடம் ஆகியவற்றை அவளுக்கு எடுத்துக் கூறி, தன் கீரி முகம் மாறிய அற்புதத்தையும் எடுத்துரைத்தார். அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த மாருதப் புரவீக வல்லி அங்கு தங்கியிருந்து தீர்த்த மாடி, சிவாலய தரிசனம் செய்து, குன்ம நோய் நீங்கி, குதிரை முகம் மாறி, அழகிய பெண்ணானாள். அவள் தான் தங்கியிருந்த இடத்திற்கு அண்மையில் கந்தவேளுக்கு ஒரு ஆலயம் அமைத்தாள் என்றும் அவ்வாலயமே 'மாவிட்டபுரம்' கந்தசாமி கோவில் என்றும் வரலாறு கூறுகின்றது.

ஆனாலும் நகுலேஸ்வரத்தின் மிகப் பழைமையான கோவில் கடலில் அமிழ்ந்து விட்டது. இரண்டாவது கோவில் போர்த்துக் கேயரால் தரை மட்டமாக்கப்பட்டது. மூன்றாவது கோவில் போரில் சிதைவடைந்து தற்போது புதுப்பிக்கப்படுகிறது என்றொரு கருத்தும் உண்டு. முதன் முதலாக உருவாக்கப்பட்ட கோவில் கடற்கரையில் உள்ள மலையில் இருந்ததாகவும் கடற்கோள் ஒன்று ஏற்பட்ட போது அக்கோவில் கடலுக்குள் அமிழ்ந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது கி. பி. 1621 ஆம் ஆண்டளவில் இரண்டாவது ஆலயம் முற்றாக தரை மட்டமாக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழிகாட்டலில் கி. பி. 1878 ஆம் ஆண்டு மூன்றாவது கோவில் கட்டப் பெற்றதாகவும் நாம் அறிகிறோம். கி. பி. 1878 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் கீரிமலைக் கோவில் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை நாவலர் வெளியிட்டார். அத்துண்டுப் பிரசுரத்தில் மேற்கூறப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளதுடன் கீரிமலையில் ஒரு சிவன் கோவிலை கட்டுவதற்கு பொது மக்களிடம் இருந்து பொருளுதவியும் கோரப்பட்டுள்ளது. கீரிமலை சிவாலயம் உருவாவதற்கு முன்னர் நாவலர் சிவபதம் அடைந்தாலும் அவருடைய வேண்டுகோளை ஏற்ற சைவ மக்கள் அப்பணியை நிறைவேற்றினர்.

நகுலேஸ்வரம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படுவதற்கு முன்னர் மூன்று பிரகாரங்களும் ஐந்து கோபுரங்களும் கொண்ட மிகப் பெரிய ஆலயமாக விளங்கியுள்ளது. ஆனாலும் தற்போது உள்ள ஆலயம் சிவாகம விதிகளுக்கும் சிற்ப சாஸ்திர முறைகளுக்கும் அமையவே உட்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான நிலப் பரப்பு முருகை கற்பாறையின் மேலே காணப்படுகிறது. மேலும் வடகடற்கரை யில் நிலத்தில் இருந்து கடலுக்குள் பாயும் பல அருவிகள் உண்டு. இவ்வருவிகளுள் முக்கியமான அருவியாக கீரிமலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





அருவி போற்றப்படுவதுடன் மிகப் பரிசுத்தமானதாகவும் கருதப்படுகிறது.

"Ancient Hindu Temples of Sri Lanka" என்ற நூலின் ஆசிரியரான திரு எஸ். ஆறுமுகம் அவர்கள் தனது நூலில் '........ The spring water how to Keerimalai is of great value and bathing in its waters imports therapeutic medicinal benefits to the human body. From its source in the rocks of Tellipallai - Maviddapuram (30 feet elevation) area, the spring waters flowing through the crevices and fissures of the carbonated rocks, encountering sea water as it emerges at Keerimalai, acquire chemical values and minute electric charges, which tonic the functioning of the human system" என்று குறிப்பிட்டுள்ளமை கீரிமலையிலுள்ள புனித தீர்த்தத்தின் பெருமையை எடுத்துரைப்பதாக உள்ளது.

### பூஜை முறைகள்

இவ்வாலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிவாகம முறைப்படி நடைபெறுவது வழக்கமாகும். இங்கு திருப்பள்ளி எழுச்சி தொடக்கம் அர்த்த சாமப் பூஜை வரை நாள்தோறும் ஆறு கால பூசை நடைபெறுகின்றது. ஆனாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக சில காலம் பூசை வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டது. மேலும் மூல மூர்த்திக்கு திருமணமான சிவாச்சாரியார்களே பூசை செய்யும் மரபு இன்றும் இக்கோவிலில் உண்டு.



### திரு விழாக்கள்

கீரிமலைச் சிவன் கோவிலின் வருடாந்த உற்சவம் மாசி மாதம் நடைபெறும். சிவராத்திரி அமாவாசை தினத்தன்று தீர்த்த உற்சவம் நிகழும். அம்மன் கோவிலில் பங்குனி மாதத்தில் கொடியேற்றம் நடைபெறுவதுடன் சித்திரை வருஷப் பிறப்பு அன்று தேர்த் திருவிழா நடைபெறும். மேலும் மாதந்தோறும் நடைபெறும் சோம வாரம், மாதப்பிறப்பு, வருடப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், மானம்பூ, ஆவணி உத்தரம், கார்த்திகை விளக்கீடு, புரட்டாதிச் சனி, திருவெம்பாவை, திருவாதிரை, சொர்க்கவாசல், ஏகாதசி போன்ற பல்வேறு விரதங்களும் விழாக்களும் இங்கு சிறப்புற நடைபெறுவதுண்டு.

வழிபாட்டிலே சிவ வழிபாடு சிறப்புப் பெற்ற வழிபாடாகக் காணப்படுகிறது. சிவம் என்பதற்கு மங்கலம், சுபம், நன்மை, பேரானந்தம், உண்மை, மேன்மை என பல பொருள்கள் கொள்ள முடியும். ஆகவே உடற் பிணி, உளப் பிணி இரண்டையும் ஒருங்கே அழிக்க வல்ல கீரிமலைச் சிவன் கோவிலை நாமும் வணங்கி அருள் பெறுவோமாக!

- உமா பிரகாஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பும், விசுவாசமும் ***என்றும்***
நிலைத்து நிற்கும் உறவுக்காக

அது எப்பொழுதும் உங்களுடையதாகட்டும். வோக் ஜுவலர்ஸ் விசேடமாக வடிவமைத்துள்ள நவீன மணமகளின் நகைத் தெரிவுகளுடன் பொன்னான தருணங்கள் ஒவ்வொன்றையும் நினைவில் வைத்திருங்கள்.

Vogue Jewellers
*with you forever...*

கொள்ளுப்பிட்டி 011 5414414 • நுகேகொடை 011 2826271 • கண்டி 081 2222133
நீர்கொழும்பு 031 2238311 • குருநாகல் 037 2229133 • சிலாபம் 032 2222197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரத்தில் பௌத்தமும் தமிழரும் நாகரும்

பேராசிரியர் சி. பத்மநாதன்

### பிராகிருத மொழிச் சாசனங்கள்

ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் சாசனங்களைப் பிராகிருத மொழியில் எழுதினார்கள். பிராகிருதம் கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியா முழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியது. இலங்கையில் வாழ்ந்த எல்லாச் சமூகத்தவரும் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப் பயன்படுத்தினார்கள். 'இலங்கையிற் சாசன வழக்கான பிராகிருதம் தமிழ்மொழியின் செல்வாக்கினைக் கணிசமான அளவிற்குப் பிரதிபலித்தது. பல தமிழ்ச் சொற்கள் பிராகிருத மொழி இலக்கண அமைதிகளுக்கு ஏற்ப உருமாறிய வடிவத்திலே ஆதியான பிராமிச் சாசனங்களில் வருகின்றன. அவற்றுட் பெரும்பாலானவை பெயர்ச் சொற்கள்; அவை இயற்பெயர், காரணப் பெயர், பண்புப் பெயர், பதவிப் பெயர், இன உறவு சம்பந்தமான பெயர், இடப்பெயர் எனப் பல வகைப்படும்.

தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுரிய ற, ன, ள, ழ ஆகிய எழுத்துகள் அவற்றில் இடம்பெற்றுள்ளமை இலங்கைப் பிராமிச் சாசனங்களின் மற்றுமொரு அம்சமாகும். இப்பண்புகள் சாசனங்களைப் பொறுத்தவரையில், பிரதேச வழக்காகவன்றிச் சாசனச் செறிவுள்ள இடங்கள் எங்கும் பரந்து காணப்படுகின்றன. நாட்டிலே குறிப்பிடத்தக்களவான தொகையினராக வாழ்ந்த ஒரு சமூகத்தவரின் பேச்சு வழக்கு மொழியாகத் தமிழ் விளங்கியமைக்குப் பிராமிச் சாசனங்கள் அடையாளங்களாய் அமைந்து விடுகின்றன.

### கலவோடுகளிற் தமிழ்ச் சொற்கள்

மிக அண்மைக் காலங்களில் அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்துள்ள கலவோடுகள் பலவற்றிலே தமிழ்ப் பிராமி எழுத்துகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் இலங்கையின் வட பகுதியிலும் அநுராதபுரம் போன்ற மத்திய நிலையங்களிலும் கிடைத்துள்ளன. அவை பல நூற்றுக்கணக்கில் வெளிவந்த வண்ணமாயுள்ளன. கலங்கள் பெரும்பாலும் தனியார் பாவனைக்குரியவை. எனவே அவற்றில் எழுதப்படும் பெயர்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கு மொழியோடு, வீட்டுப் பேச்சு மொழியோடு, தொடர்பு உடையனவாக அமைந்திருக்கும். வட இலங்கையிலே தமிழ் பேச்சு வழக்கு மொழியாக நிலவியதற்கான சான்றுகள் பெருகி வருகின்றன. தமிழ் மொழி வழக்கு நாட்டின் தென் பகுதிகளிலும் பரவியிருந்தமைக்கு அண்மையிற் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் சில ஆதாரமாயுள்ளன. அவற்றில் மகாசாத்தன், உதிரன், கட (ப்) பன், ந (ா) கர (ா) சந் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர்கள் சிலவற்றில் இறுதியான எழுத்து தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள வரிவடிவமான னகரமாய் அமைந்திருப்பதும் குறிப்பிடற்குரியது. இலங்கையிலே பிராமி எழுத்துகளின் உபயோகம் பரவுவதற்குத் தமிழகத்திலிருந்தும் அங்கு சென்ற சமண முனிவர்களும் ஏதுவாயிருந்தனர் என்று கருதலாம்.

### தமிழர் குடிகளும் தமிழரான சங்கத்தாரும்

இலங்கையிலே தமிழரைக் குறிப்பிடும் பிராமிக் கல்வெட்டுகளிற் பிரதானமானது அநுராதபுரத்தில் உண்டு. அது அபயகிரி கோயில் வளாகத்துக்கு அண்மையில் அமைந்திருக்கின்றது. அது கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியது. அதில் வர்ணிக்கப்படும் தமிழர் பரதர் குலத்தவர். இளபரத (ன்) என்ற பெயர் அதிற் காணப்படுகின்றது. அது நாகன் என்ற பெயரைப் போன்றது. இளநாக (ன்) அநுராதபுரத்து ஆதிகால மன்னரில் ஒருவன். இச் சாசனம் தமிழ்க் குடிகளைச் சேர்ந்தவர்களையும் (தமேட கஹபதிகள்) தமிழராயுள்ள சங்கத்தாரையும் (தமேடசமண) பற்றியது. குடும்பத்தவரான தமிழருக்கென்று நிர்மாணிக்கப்பட்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம் ஒன்றினைப் பற்றி அதிலே சொல்லப்படுகின்றது. அவர்கள் கடல் வாணிபத்தோடு தொடர்புடையவர்கள் என்பது சாசனக் குறிப்பால் உணரப்படும்.

இந்தச் சாசனம் அமைப்பிலும் அதிலடங்கிய விபரங்களைப் பொறுத்தவரையிலும் தனிப் பண்புடையது. அது ஏனைய பிராமிச் சாசனங்களிலிருந்தும் வேறுபட்டது. அது தான சாசனமன்று. சங்கத்தாருக்கு நன்கொடை வழங்கப்பட்டதாக அதிற் குறிப்பில்லை. பௌத்த சமயம் தொடர்பான தெளிவான குறிப்பெதுவும் அதிற் காணப்படவில்லை. சமண (ர்) என்னும் குழுவினர் பௌத்த சமயத்துக்கு மட்டுமின்றிச் சமண சமயத்திற்கும் உரியோராவர். ஒன்றாகக் கூடியிருந்த சமண முனிவர்களையும் சங்கம் என்று சொல்வது வழக்கம். திராவிட சங்கம் என்று சமண சமயத்தவரைக் குறிப்பிடுவது புராதன காலத் தமிழ் வழக்கு என்பது குறிப்பிடற்குரியது. இலங்கைப் பௌத்த சமய மரபில் மொழி வேற்றுமை காரணமாகவும் இன வேறுபாடு காரணமாகவும் சங்கத்தாரைத் தமிழ்ச் சங்கத்தாரென்றும் சிங்கள சங்கத்தார் என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடும் வழக்கம். கி.பி. 12 ஆம் நூற்றாண்டுவரை ஏற்பட்டிருக்கவில்லை.

மேலும் இச் சாசனம் காணப்படும் தலத்திலே அபயகிரி விகாரம் அமைக்கப்படுவதற்கு முன்பு பௌத்த சமயம் தொடர்பான நிறவனங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. அபயகிரிய வளாகம் அடங்கிய பிரதேசம் ஆதியிற் சமணர் தலமாக விளங்கியது.

வட்டகாமினி (கி.மு. 103, 89- 77) தமிழர்களின் படையெடுப்பு ஒன்றின் காரணமாக அரசிழந்து அநுராதபுரத்திலிருந்து வெளியேறிய சமயத்திலே கிரி என்னும் சமணத் துறவி அரசனை ஏளனம் பண்ணினார். அதனால் மனவேதனைப்பட்ட அரசன் அவரைத் தக்க சமயத்திற் பழிவாங்குவதற்குத் தீர்மானித்தான். மீண்டும் இராசதானியில் அதிகாரம் பெற்றதும், கிரியின் வசமிருந்த சமணப் பள்ளிகளைத் தகர்த்து அவற்றினிடத்தில் அபயகிரி விகாரத்தை அமைத்தான்.

அநுராதபுரத்திற் பௌத்த சமயம் நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு சமண சமயம் பரவியிருந்தது. பாண்டுகாயன் அநுராதபுரத்தை இராசதானியாக அமைத்த காலத்தில் அங்கு சமணப் பள்ளிகளையும் ஆசிவிகரின் ஆராமங்களையும் பிராமணரின் குடியிருப்புகளையும் வேதம் ஓதும் மண்டபங்களையும் யாக சாலைகளையும் அமைத்தான் என்று மகாவம்சம் கூறும். கிரி, ஜோதி, கும்பாண்ட என்னும் சமணத் துறவிகள் அவனுடைய காலத்தவர். தென்னிந்தியத் தொடர்புகளின் காரணமாக அநுராதபுரத்திலே சமண சமயம் பரவியது போலத் தெரிகின்றது. தமிழக்த்துப் பிராமிச் சாசனங்களிற் பெரும்பாலானவை சமண சமயம் தொடர்பானவை என்பதும் குறிப்பிடற்குரியது. அவை தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. இலங்கையிற் பிராமி வரி வடிவங்களின் உபயோகம் பௌத்த சமயம் பரவுவதற்கு முன் வழக்கில் வந்துவிட்டது என்றும் அதிற் சமண முனிவருக்கும் பங்குண்டு என்றும் கருதலாம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பூர்வ குடிகளான நாகரும் நாக நாடும்

அநுராதபுரம் இலங்கையின் மிகப் புராதனமான இராசதானி. அது இலங்கைப் பௌத்தர்களின் புனித நகரமென்று பாராட்டப் படுவது. அட்டஸ்த்தானங்கள் என்னும் பௌத்தர்கள் போற்றும் புனித தலங்கள் அங்குள்ளன. மகாபோதி, தூபாராமம், மகாவிகாரை, மிரிச வேதி, றுவான்வலிசேய, அபையகிரி, ஜேதவன சேதியம், மிஹிந்தலை என்பன அத்தலங்களாகும். தேவ நம்பிய தீஸன் காலம் முதலாக விகாரைகளும் கோயில்களும் சங்கத்தார் கல்லூரிகளும் போதனா மண்டபங்களும் மருத்துவமனைகளும் மிகப் பேரளவில் அந்நகரில் அரசராலும் பிரதானிகளாலும் வணிகராலும் அமைக்கப்பட்டன. அவற்றின் அழிபாடுகள் மிகப் பரந்த பிரதேசத்திலே காணப்படுகின்றன. அநுராதபுரத்திலுள்ள தொல்பொருட் சின்னங்கள் மிகக் கூடியளவிலே சங்கத்தாரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ளதால் அந்த நகரத்தை ஒரு சங்கத்தார் நகரமென்று சிலர் இந்நாட்களில் வர்ணிப்பர்.

அநுராதபுரத்துப் பௌத்த சமயக் கட்டிடங்களின் அபிவிருத்திகளிலே தமிழ் அரசர்களுக்கும் வணிகர்களுக்கும் கம்மாளருக்கும் தமிழரின் வம்சாவழியினரான அரசர் பலருக்கும் கணிசமான பங்குண்டு என்பது இப்பொழுது தெளிவாகின்றது.

தென்னிந்தியாவிலிருந்தும் படையெடுத்து வந்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய எல்லாளன் முதலானோரைத் தமிழ் அரசரென்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்தின் ஆதியான தமிழரசரான சேனன், குத்தகன் என்போரைப் பற்றிய குறிப்புகளில் அவர்கள் படையெடுப்பாளர் என்று அந் நூல் கூறவில்லை. அவர்களைக் குதிரை வணிகனின் புதல்வர் (அஸ்ஸநாவிக புத்தோ) என்று மட்டும் அது குறிப்பிடுகின்றது'' அவர்கள் இலங்கையிலிருந்த தமிழ் வணிகர் என்றும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் அளவிற்கு அவர்கள் பலமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர் என்றும் கொள்ள முடிகின்றது.

இன்னொரு வகையான நாகர்குலத்தவரான அரசர் பலர் அநுராதபுரத்திலே பதவி பெற்றிருந்தனர். மகாவம்சம் எழுதப்பட்ட காலத்தில் ஐந்தாம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரின் வம்சாவளியினரான நாகர்குலத்தவர் தங்கள் பூர்வீகமான அடையாளங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக இழந்து விட்டதால் அவர்கள் தென்னிந்திய உற்பத்தி உடையவர்கள், தமிழ் மொழியினைப் பேசியோரின் வம்சாவளியினர் என்ற விபரங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய மனோபாவம் அமைந்திருக்கவில்லை.

கி.மு. 109 கி.பி. 246 ஆகிய காலப் பகுதியில் நாக என்னும் பெயருடைய அரசர் பலர் இருந்தனர். கல்லாட்ட நாக (கி.மு. 109- 103), சோர நாக (கி.ம. 62- 50), மகாதாட்டிக மகாநாக (கி.பி. 9- 21), நிளநாக (கி.பி. 35- 44), மஹல்லகநாக (கி.பி. 134- 140), குஜ்ஜ நாக (கி.பி. 192- 194), குஞ்ச நாக (194- 195), சிரிநாக (கி.பி. 195- 214), அபைய நாக (கி.பி. 236- 234?), சிரிநாக II (கி.பி. 244- 246) என்போர் அத்தகையோர்.

நாக என்ற பெயருடைய மன்னர்களைப் பற்றிச் சிந்திக்குமிடத்து ஈழ நாட்டின் பூர்வகுடிகளான நாகரைப் பற்றிய நினைப்புகள் முனைப்புப் பெறுவது தவிர்க்க முடியாதது. இயக்கர், நாகர் என்போர் இலங்கையின் பூர்வ குடிகளென்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. பௌத்த சமயம் பரவுவதற்கு முன்பு அவர்கள் இலங்கையின் பல பகுதிகளில் பரந்து காணப்பட்டனர். யாழ்ப்பாணத் தீபகற்கம் அடங்கிய இலங்கையின் வடக்குப் பகுதி ஆதி காலத்தில் நாகதீப என்னும் பெயரால் வழங்கியது. அதனைப் பற்றிய புராதனமான நூல்களிலும் சாசனங்களிலும் குறிப்புகள் உள்ளன. நாகரைப் பற்றிய சிந்தனைகள் இந்நாட்களில் வித்துவபூர்வமான பரிமாணங்களைப் பெற்று முன்னேற்றம் அடைந்துள்ளன. நாகரைப் பற்றி விளக்குமிடத்து கா. இந்திரபாலா மேல்வருமாறு கூறுவார்.

''பொது யுகம் 300 வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அடங்கிய பகுதியும் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பமும் நாகரின் நாடு என வழங்கி வந்துள்ளன. நாக தீப (ம்) பற்றிய சாசனக் குறிப்பு ஒன்று மட்டுமே கிடைக்கின்றது. அது பொதுயுகத்தின் முதல் நூற்றாண்டுகளுக்கு உரியதாகும். ஐந்தாம் நூற்றாண்டுக்குரிய பாளி மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களிலும் உரை நூல்களிலும் நாகதீபம் பற்றிய குறிப்புகள் உண்டு. அவற்றிலொன்று அப்பிராந்தியத்திலுள்ள சிறு இராச்சியம் ஒன்றின் அதிபனை தீபராஜ என்று குறிப்பிடுகின்றது. (தீவகத்து அரசன் என்பது நாக தீபத்து அரசனைக் குறிக்கும்) இக்காலமளவில் எழுதப்பட்ட தமிழ் நூல்கள் நாக நாடு (நாகரின் நாடு) பற்றிக் குறிப்பிடுகின்றன. அது கடலுக்கு அப்பாலானது. நாக நாடு என்பதை நாகதீபம் என்று அடையாளங் காணலாம். நாக அரசரின் இருப்பிடமான நாகபுரம் (நாகரின் நகரம்) பற்றியும் அவற்றிலே சொல்லப் படுகின்றது. அவர்களின் பெயர்கள் சமஸ்கிருத மயமானவை. இரண்டாம் நூற்றாண்டிலே கிரேக்க - உரோம வணிகரால் நாகதீபம் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. குளோடியஸ் தொலிமி எழுதிய ஜியாகிரஃபியா என்னும் பிரசித்தமான நூல் தாமிரபரணியின் பெருங்கரையோர பட்டினங்கள் பதின் மூன்றில் நாகதீபமும் ஒன்றெனக் குறிப்பிடுகின்றது. நாகதீபம் பற்றிய வரலாற்றிலே எதுவித சந்தேகமும் இல்லை, அது உறுதியானது. இலக்கிய, சாசன ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. நாகர் என்போர் வாழ்ந்தமையின் காரணமாக நாகதீபம் என்னும் பெயர் உண்டானது என்பதும் அது இலங்கையின் தூர வட பகுதியிலுள்ள பிராந்தியம் என்பதும் ஒப்புக் கொள்ளக் கூடியனவாகும்.''


''நாகர் வட இலங்கை நோக்கிக் குடிபெயர்ந்து சென்ற காலத்தில் அவர்கள் தமிழகத்திலே மேலாதிக்கம் பெற்றுவிட்ட தமிழ் மொழி பேசுவோருடன் கலந்துவிட்டனர் போலத் தெரிகின்றது. சங்க இலக்கியத்தில் அடங்கிய மிகப் புராதனமான பாடல்களின் ஆசிரியர் பலர் நாக (னார்) என்னும் பெயரைப் பெற்றிருந்தமை அந்தக் கலப்பின் அடையாளமாகும். யாழ்ப்பாணத் தீபகற்பத்திற் குறுணிக் கற்கால மக்கள் வசிக்கவில்லை. அங்கு வாழ்ந்த ஆதியான குடிகள் நாகராதல் வேண்டும். அதன் காரணமாகவே நாகதீபம் என்னும் பெயர் உண்டாகியது. பாண்டிய மன்னரின் ஆதரவிலே தமிழ் மொழி முதன்மை பெற்றதன் விளைவாகவும் தமிழ் மொழி பேசுவோருடன் நாகர் கலப்புற்றதன் காரணமாகவும் ஏற்பட்ட செல்வாக்கினால் இலங்கையின் தூர வட பகுதியிலே நாகரின் மொழி வழக்கொழிந்து தமிழ்மொழி வழக்கு மேலோங்கிவிட்டது.

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ''இலங்கைத் தமிழ் சாசனங்கள்'' என்னும் நூலில் இருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவர் கோட்டம்

ஒரு நாட்டைப் பற்றி தெரிந்துகொள்ளும் முன் அந்நாட்டில் பிறந்த இலக்கியவாதிகளையும், அம்மண்ணின் பண்பாட்டையும், கலாசாரத்தையும், நாகரீகத்தையும், அதனைப் பதிவு செய்திருக்கும் இலக்கியங்களையும் அறிந்து கொள்வது சிறப்பு. இது ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள்.

உலக மக்களால் 'பொது மறை' என்று போற்றப்படுகின்ற திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கு ஆலயம் எழுப்புவது, அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன். இதனையுணர்ந்தே தமிழக அரசு, அப்பெருமகனாருக்கு கோயில் கட்டத் தீர்மானித்தது.

மயன் வம்சத்தின் வழித் தோன்றலான தேவ சிற்பி கணபதி ஸ்தபதியின் தலைமையில் 1976 ஆம் ஆண்டில் சென்னையின் பிரதான பகுதியில் திருவாரூர் தேர் போன்ற தோற்றத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதனை அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்கள் திறந்து வைத்தார்.

வள்ளுவருக்கு கோட்டம் ஏன்? என்ற வினா அனைவருக்கும் எழுந்தது. ஒரு சாதாரண மனிதனோ அல்லது கற்ற மனிதனோ வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய கொள்கைகளை மிக எளிமையாக மத, இன, மொழி சார்பின்றி புரிந்துகொள்ளும் வகையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கிய ஒரு தீர்க்கதரிசி திருவள்ளுவர். அவருக்கு ஒரு கோட்டம் அல்லது வாயில் அமைப்பதன் மூலம் நாம் அனைவரும் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தான் இந்த கோட்டம் அமைக்கப்படுகிறது என்று விளக்கமளித்தார் ஒரு மூத்த தமிழறிஞர்.



வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை யார் தீர்மானித்தது? என்ற வினாவிற்கு விடையளிக்கிறார் கணபதி ஸ்தபதி. வள்ளுவருக்கு கோயில் அல்லது கோட்டம் அமைக்கவேண்டும் எனத் தீர்மானித்தவுடன் அவருடைய திருக்குறள் காலங்கடந்து நிற்கவேண்டும்; அவர் கடவுளாக அதாவது உற்சவ கடவுளாக கருதப்படவேண்டும்; அதற்காக திருவாரூர் ஆழித்தேர் வடிவமைப்பினை முன் மாதிரியாகக் கொண்டோம். இதனை அனைவரும் கண்ணுறும் வகையில் பரந்த அளவில் நிர்மாணிப்பதுடன், அனைவரும் வந்து செல்லும் வகையில் அமைக்கவேண்டும் என்றும் முடிவெடுத்தோம். இதற்காக மூன்று முன்மாதிரிகளை உருவாக்கினோம். முதலில் நுழைவாயில், அதனைத் தொடர்ந்து பூங்கா அல்லது பரந்தவெளி, அதற்கு பின் குறள் மணிமாடம், அதற்கு கீழ் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் அமரக்கூடிய வகையில் ஓர் அரங்கம்; அதனை தொடர்ந்து தேர் போன்றதொரு அமைப்பு, அதில் உற்சவ மூர்த்தியாக திருவள்ளுவர். இவற்றை நிர்மாணிப்பது என முடிவு செய்தோம். குறள் மணி மாடத்தினை உருவாக்கும் போது தமிழறிஞர் ஒருவர், திருக்குறளில் பொருட்பால், காமத்துப்பால், அறத்து பால் என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இதனை உங்களின் வடிவமைப்பில் வித்தியாசப்படுத்துங்கள் என்று ஆலோசனை கூறினார். அதற்காக ஒவ்வொரு பாலிற்கும் ஒவ்வொரு வண்ணம் கொண்ட கல்லினை உருவாக்கினோம். அத்துடன் ஒவ்வொரு குறளையும் பார்வையாளர்களின் பார்வை மற்றும் வாசிப்பதற்கு எளிதாக இருக்கும் அளவில் உருவாக்கினோம்.

இதன் தனிசிறப்பு என்ன? என்று கேட்பவர்களுக்கு பதில் தருகிறார் சிவபாலன் என்கிற மாணவன். ''வள்ளுவர் கோட்டம் என்ற சொற்றொடர் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக மாணவர்களின் மனதில் பதிக்கப்படுகிறது. இதனால் திருவள்ளுவர் மற்றும் திருக்குறளின் தொன்மை மற்றும் முக்கியத்துவம் எம்முடைய தலைமுறைக்கு மட்டுமல்லாமல் எதிர்கால தலைமுறையினருக்கும் எடுத்துச் சொல்லப்படுகிறது. தமிழுக்கு கதியானவர் இருவர் என்று பாரதியார் குறிப்பிடுவார். அவர்கள் கம்பனும், திருவள்ளுவனும் என்பதனை எம் போன்ற மாணவர்கள் உணர்ந்துள்ளனர். அதனால் இன்றும் வள்ளுவர் கோட்டத்தையும், பூம்புகாரையும் மறக்க முடியவில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த வள்ளுவர் கோட்டத்தின் இன்றைய நிலை என்ன? என்பது குறித்து விவாதிப்பதை விட, அதனை மேம்படுத்தவும், தவறாக பயன்படுத்துவோர்களிடமிருந்து பாதுகாக்கவும் ஒவ்வொருவரும் தம்மாலான செயல்களை செய்தால், எதிர்கால சரித்திரம் உங்களை பாராட்டும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.''

-ஆர். கோபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈரடிக்குள் இயங்கும் உலகம்

# தமிழும் குறளும்

தமிழ் தமிழர்களின் தாய்மொழி. 1996 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, உலகம் முழுவதிலும் 8 கோடி 50 இலட்சம் (85 மில்லியன்) மக்களால் தமிழ் பேசப்பட்டு வருகிறது. ஒரு மொழியை தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்ட மொழிகளின் பட்டியலில், தமிழ் பதினெட்டாவது இடத்தில் உள்ளது.

தமிழ் சொல் வளம் நிறைந்த மொழி. பழந்தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான சொற்களை நவீனத் தமிழ்மொழி இன்னும் பயன்படுத்துகின்றது. திருக்குறள் போன்ற சிறந்த பழந்தமிழ் படைப்புகள் தமிழர்களால் சிறப்பாக கற்கப்படுவதற்கு இத்தொடர்ச்சியான சொற்பயன்பாடு உதவுகின்றது.

திருக்குறள் உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். தமிழில் இருந்து உலக மொழிகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் இதுவாகும். திருக்குறளை முதன்முதலில் மொழிபெயர்த்த பெருமைக்குரியவர் வீரமாமுனிவர். 1730 ஆம் ஆண்டு இவர் இலத்தின் மொழியில் மொழிபெயர்ந்தார். அதன்பிறகு பலவேறு மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறள் இயற்றப்பட்ட காலம் இதுவரை சரியாக வரையறுக்கப்படவில்லை. ஆனால் திருவள்ளுவர் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றார்கள். மறைமலை அடிகள் செய்த ஆராய்ச்சியின் பயனாக, தமிழ் ஆண்டுகளைக் குறிக்க திருவள்ளுவர் ஆண்டும் பயன் படுத்தப்படுகின்றது. திருவள்ளுவர் ஆண்டு என்பது பொது ஆண்டோடு 31 ஆண்டுகளைக் கூட்ட வேண்டும்.

திருக்குறளில் 1330 குறள்கள், பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் அறம், பொருள், இன்பம் அல்லது காமம் என்னும் முப்பெரும் பிரிவுகளாக (முப்பால்) தொகுக்கப் பெற்றுள்ளன. இது பழந்தமிழ் நூல்வரிசையில் பதினெண்கீழ்க் கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் 'முப்பால்' என்னும் பெயரோடு விளங்குகின்றது. குறள் ஒவ்வொன்றும் 2 அடியில் 7 சொற்களைக் கொண்டு, அதிகமாக 45 எழுத்துக்கள் உண்டு. நூலில் மொத்தம் 12,000 சொற்கள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் ஐம்பதுக்கும் குறைவான வடமொழிச் சொற்களே உள்ளன.

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு....'

என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய 'அ' வில் ஆரம்பித்து, 1330 ஆம் குறளாகிய,

'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப்பெறின்'

என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய 'ன்' னுடன் முடித்திருக்கிறார் திருவள்ளுவர்.

வள்ளுவர் காலத்தில் ஒழுங்கற்றிருந்த மனித வாழ்க்கையில், இவைதான் மனிதன் வாழவேண்டிய நெறிமுறைகள் என்று ஆழமாகச் சிந்தித்து, அவற்றைப் பதிவாக்கியுள்ள செயல், திருவள்ளுவரை சாதனையாளராக முன்னிறுத்துகிறது. திருக்குறளின் அறக்கருத்துகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழரை நெறிப்படுத்த முயன்றுள்ளன. தமிழர்களுக்கும் திருக்குறளுக்குமான ஆழமான உறவு என்றும் பிரிக்கவியலாத தன்மையுடையது என்பதே திருக்குறளுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

இன்று தமிழர் என்ற அடையாளத்துடன் பல்வேறு நாட்டினர், மதத்தினர் உள்ளனர். வேறுபட்ட பழக்க, வழக்கங்கள், நம்பிக்கைகள் கொண்ட உலகத் தமிழர்களின் பண்பாடு என்பது ஒற்றைத் தன்மையுடையது அல்ல. பன்முகப் போக்குகள் நிலவுவதை அங்கீகரிப்பதன் மூலமாகவே தமிழர் என்ற அடையாளம் வலுவடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமயமாக்கல், தகவல் தொடர்புப் பரவல் காரணமாகத் தமிழின் அடையாளம் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. தமிழரின் வாழ்நிலையும் தமிழின் இருப்பும் முன்னைவிடச் சிக்கலுக்குள்ளாகியுள்ளன. விஞ்ஞான - தொழில்நுட்பத் துறைகளில் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான வளர்ச்சிக்கேற்ப தமிழ்மொழியும் மாற வேண்டிய அத்தியாவசிய சூழல் உள்ளது. உலகமெங்கும் தமிழர்கள் பரவியுள்ள நிலையில், தமிழை உலகமொழிகளில் ஒன்றாக மாற்ற வேண்டியது இன்றைய உடனடித் தேவையாக உள்ளது. இத்தகைய சூழலில் மனிதர்கள் வாழவேண்டிய நெறிமுறைகள் யாவை என்பதைக் கண்டறிந்து, அவற்றைச் செய்யுள் வடிவில் தந்துள்ள வள்ளுவரின் கருத்தியலையும், அவை நவீன தமிழ்ச் சமூகத்தில் பெறுமிடத்தையும் மதிப்பிட வேண்டியுள்ளது.

கடவுளை மையமாக்கிப் புனையப்பட்ட பக்தி இலக்கியம் பரப்பிய நம்பிக்கைகளுக்கு எதிராக திருக்குறளின் அறிவுபூர்வமான கருத்துகள் முதன்மை பெற்றன. நாளடைவில் திருக்குறள் தமிழர் மறை அல்லது வேதம் எனப் போற்றப்பட்டது. மத அடையாளம் வெளிப்படையாக அற்ற திருக்குறளின் பொதுத்தன்மையானது சமூக சீர்திருத்த நோக்கம் உடையவர்களைக் கவர்ந்தது.

அன்றைய காலகட்டத்தில் சமஸ்கிருதத்தினை தேவபாஷையாகப் போற்றிய வைதிக இந்து சமய நெறிக்கு மாறாகத் தமிழின் மேன்மையை வெளிப்படுத்தத் திருக்குறள் பெரிதும் பயன்பட்டது. திருமண அழைப்பிதழ்களில் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை...' எனத் தொடங்கும் குறள் அச்சடிக்கப்பட்டது. பாடசாலை, பல்கலைக்கழகங்களில் திருக்குறள் தமிழ்ப் பாடத் திட்டத்தில் இடம் பெறுதல் கட்டாயமானது. இன்று தமிழின் அடையாளமாக அறியப்பட்டுள்ள திருக்குறளின் செல்வாக்கு, தமிழரின் வாழ்வில் ஆழமாக ஊடுருவியுள்ளது.

எப்படி வாழவேண்டும், எப்படியெல்லாம் வாழக்கூடாது என்ற வாழ்க்கை நெறிகளை, எளிமையாகவும் வலிமையாகவும் காட்டும் அற நூல்களில் முதலிடம் பெறக்கூடியது தமிழ்மறையான திருக்குறளாகும். வாழ்வில் வெற்றி காணவும், பிறர் போற்ற வாழவும் வழிகாட்டும் இந்த அறநூலில் 21 ஆம் நூற்றாண்டின் வாழ்வியல் சிந்தனைக்கு ஏற்றதாகவே அனைத்தும் உள்ளன. நேர்வழியில் நாம் வாழ்வில் வெற்றி பெற வள்ளுவர் கூறும் நெறிகள் என்னென்ன எனக் கொஞ்சம் பார்க்கலாம்.

பிரச்சினைகள் திடீரென ஏற்படும்போது, அதிலிருந்து விடுபடும் மனத்தெளிவையும் சிந்தனைத் திறனையும் தொடர்ந்து திருக்குறளைப் படிக்கின்றவர்களுக்கு குறள்கள் வழங்குகின்றன. 'நீரின்றி அமையாது உலகு', 'உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு', 'அடக்கம் அமரருள் உய்க்கும்', 'கற்க கசடறக் கற்பவை' போன்ற வரிகள் மனத்தில் சிந்தனையை ஏற்படுத்தக் கூடியன. இத்தகைய வரிகளினாலே திருக்குறள் தமிழர் மனங்களில் தொடர்ந்து ஆளுமை செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எப்படிப் பேச வேண்டும்?

*'சொல்லுக சொல்லில் பிறிதோர் சொல் அச்சொல்லை*
*வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து' (645)*

ஒரு சொல்லைச் சொல்லும் போது அதை விடச் சிறந்த பொருத்தமான சொல் இல்லாதவாறு தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும். வள்ளுவர் சொல்வது போல் பேசும் முன் சொற்களைத் தெளிவாகத் தேர்ந்தெடுக்கப் பழகிக் கொண்டால் பேச்சில் சொற்குற்றமோ, பொருள் குற்றமோ வர வாய்ப்பே இல்லை. குற்றமற்ற சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர் உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர். எனவே அதிகமாகப் பேசும் ஒவ்வொருவரும் தாங்கள் சொல்ல விரும்புவதை இன்னும் சுருக்கமாகச் சொல்ல முடியுமா என்று அவ்வப்போது ஆராய்ச்சி செய்து கொள்வது நல்லது. எத்தனையோ தீராத பகைக்கு முக்கிய காரணமாக இருப்பது புண்படுத்தும் சில அநாவசிய வார்த்தைகளே.

மொத்தத்தில் நல்லதை மட்டுமே, சுருக்கமாக, இனிமையாக, மற்றவருக்குப் பயன் தரும் வண்ணம் பேச வேண்டும். நாம் அப்படிப் பேசப் பழகிக் கொண்டால் அது அடுத்தவர்களுக்கு நல்லது; நமக்கு மிக மிக நல்லது.

### சந்தர்ப்பத்தை நழுவ விடாமை:

நாள், கோள் பார்த்துக் கொண்டே, சோம்பலின் காரணமாகவோ செயலைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் வெற்றித்திருமகள் எப்படித் தேடி வருவாள்? அதனால்தான் வள்ளுவர் சொல்கிறார்

*'ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்*
*செல்லும் வாய் நோக்கிச் செயல்'*

செய்ய முடிந்த இடத்தில் எல்லாம் செயலைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். செய்ய இயலாத இடத்திலோ, செயலைச்செய்து முடிப்பதற்கான வழிகளை அறிந்து செயலினை முடிக்க வேண்டும். தளராது செயல்படுபவனே வெற்றியாளன் ஆக முடியும். அடுத்து எந்தக் காலத்தில், எந்த இடத்தில் எத்தகைய செயலைச் செய்யலாமென்று அறிந்து, செயலாற்றி வெற்றியை ஈட்டவேண்டும். காற்றடிக்கும் நேரத்தில் மா விற்பவனும், மழை கொட்டும் வேளையில் உப்பு விற்பவனும், கொல்லன் பட்டறைகள் நிறைந்த இடத்தில் ஊசி வியாபாரம் செய்யச் செல்பவனும் வெற்றி பெற முடியுமா? இதை மனதில் கொண்டுதான் 'இடனறிதல்', 'காலமறிதல்' என்ற தலைப்புகளில் இருபது குறள்களை இயற்றி, நமக்கு வழி காட்டுகிறார்.

### தகவல் பரிமாற்றத் திறன்:

தன் கருத்துக்களை, பிறர் ஏற்கும்படி கூற வல்லவர் எளிதில் வெற்றியாளராவது உறுதி என திட்டவட்டமாகக் கூறுகிறார் திருவள்ளுவர்.

*'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல் வெல்லல் யார்க்கும் அரிது'*

### நேர முகாமைத்துவம்

நேரத்தின் மகிமையையும், காலமறிந்து செய்யும் செயல்களின் பலனையும் பல்வேறு குறள்களின் மூலம் மனதில் நிற்கும்படி எடுத்துக் கூறுகிறார்.

### திட்டமிடுதல்

திட்டமிடுதல் என்பது எந்தச் செயலை, எங்கு? எப்பொழுது? யாரைக்கொண்டு? எப்படிச் செய்வது? என்னும் கேள்விகளுக்கு விடை கூறுவதாகும்.

இதையே வள்ளுவர்,

*'பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்*
*இருள் தீர எண்ணிச் செயல்.'*

ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன், அச்செயலுக்குத் தேவையான பணம், தேவைப்படும் சாதனங்கள், செய்ய உகந்த சமயம் செயலைச் செய்வதற்கான வழிமுறைகள், செயலைச் செய்வதற்கான சரியான இடம் ஆகியவற்றை தீர ஆராய்ந்து செயலைச் செய்யத் தொடங்க வேண்டும்.


அதுமட்டுமல்ல, தற்காலத்தில் ஒரு செயலைத் தொடங்குமுன் நிபுணர்களின் கருத்தை அறிய முற்படுகிறோம் அல்லவா? அதைப்பற்றியும் திருக்குறளில் சொல்லப்பட்டுள்ளது.

*'செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளம் கொளல்'*

அதாவது ஒரு செயலைச் செய்யத் தொடங்குபவன், முன்பே அச்செயலைச் செய்த அனுபவம் உள்ளவன் அல்லது அச்செயலைப் பற்றி நன்கு அறிந்தவனுடைய கருத்தினை முதலில் அறிந்துகொண்டு செயலைத் தொடங்குதல் வேண்டும்.

இவ்வாறு கருத்தாழமும் மனிதப் பண்பின் பன்முகங்களையும் நேசத்தின் ஊற்றுக்களையும் தன்னுள் அடக்கி உயர் விழுமியங்களை உள்கட்டுமானமாக்கி, இயங்கியல் பொருண்மையோடு இயங்கி வருகின்றது வள்ளுவம். மாற்றம் மெல்ல மெல்லத் தான் நிகழும். அதற்கு நாம் முயலுவோம்.வள்ளுவர் கண்ட சமுதாயத்தை மெய்பித்துக் காட்டி வாழ முயற்சி செய்வோம்.

**- அமலகுமார்**





# கலைச் சிறப்புடன் பாங்கொக் 'வற்'கள்

தேவதைகளின் நகரம் என வர்ணிக்கப்படும் பங்கொக் நகரின் பழைமைச் சிறப்புக்கும் நுணுக்கமான கட்டடக்கலையின் நேர்த்திக்கும் சான்றாக இங்குள்ள பௌத்த ஆலயங்கள் விளங்குகின்றன. இந்து, பௌத்த, கிறிஸ்த ஆலயங்கள் தாய்லாந்தில் பொதுவாக வற்கள் என்றே அழைக்கப்படுகிறது. 800 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்று, கலாசார பண்பாட்டு சுவடுகளைத் தாங்கி நிற்கும் இந்த வற்கள் உல்லாசப்பணிகளுக்கு பக்தியுடன் பரவசத்தையும் அளித்து வருகின்றன.

'வற்'களும் (கோவில்கள்) அயுத்தயா நகரின் வற்களது கட்டடக் கலையின் மாதிரியான திட்டங்களைக் கொண்டு விளங்குகின்றது. அயுத்தயா நகரின் கட்டிடக் கலையை மீள உருவாக்கும் நோக்கத்தை பாங்கொக் நகரம் கொண்டுள்ளது. ஆனால், வற் அருனைத் தவிர, 'பிராங்க்'கை(ஸ்தூபி) மத்தியில் கொண்ட வற்கள் முற்றாக மறைந்துள்ளன.

அதற்குப் பதிலாக நீள் சதுர ''பொற்''களும் (சட்டங்களும்) விஹான்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அயுத்தயாவில் உள்ள ஜன்னல்களுக்குப் பதிலாக மறைப்புகள் உள்ள ஜன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளன. தாமரைக் குளங்களுக்குப் பதில் லில்லி மலர் நிறைந்த குளங்கள் தெரிவுக்குள்ளாகி உள்ளன.

அயுத்தயாவில் இடம்பெற்ற கூரை அமைப்பைப் போலன்றி காற்றோட்டமுள்ள பாரமற்ற மாதிரிகள் இடம்பெற்றுள்ளதுடன் கோபுரங்கள் மிகக் கூரான அமைப்புடன் விளங்குகின்றன. அதே மாதிரி அயுத்தயாவின் வேலைப்பாடுகளும் பாங்கொக் வற்களில் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதான வற்களின் சுவர்களில் செரமிக் ஓடுகள், கண்ணாடி ஓடுகள், பளிங்கு கற்கள் ஆகியன பதிக்கப் பட்டுள்ளன. நிலத்தில் இருந்து கூரை வரை இம்மாதிரியாக சுவர்கள் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

கதவு மற்றும் ஜன்னல் மறைப்புகள் தங்கம், தங்க முலாம் வார்னிஷ் (லக்கர்) ஆகியவற்றால் விஸ்தாரமாக அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வர்ணம் பூசப்பட்ட துவார பாலகர்கள், முழு காவலர்களின் உருவங்கள் ஆகியனவும் கட்டப்பட்டுள்ளன.

அரசனான மூன்றாம் ராமாவின் ஆட்சிக் காலத்தில் சீனக் கலையில் ஆர்வம் ஏற்பட்டதால் செரமிக் ஓடு, பூக்கள் மற்றும் பாய் செமா ஆகியன மூடப்பட்ட சீன விளக்குகளில் வைக்கப்பட்டன. வடக்கில் கட்டடக் கலைஞர்கள் தொடர்ந்தும் மரத்தினால் கட்டடங்களைக் கட்டி பின்னர் படிப்படியாக செங்கல் மற்றும் ஸ்ரக்கோ ஆகியவற்றை பிரதான மூலப்பொருளாகக் கொண்டு கட்டடங்களை அமைத்தனர்.

அரசனான முதலாவது ராமாவின் உத்தரவுப்படி மரகத புத்தருக்கான ஆலயம் கட்டப்பட்டது. வற் ப்ரா க்கோ (Wat Phra Kaew) கட்டி எழுப்பப்பட்டபோது அரசன் தென் மேற்கு மூலையில் மரக் கட்டடம் ஒன்றில் வசித்தான்.

1785 ஆம் ஆண்டு புதிய வற்றின் ''பொற்'' அயுத்தயாவின் பிரசித்தி பெற்ற காலகட்டத்தைப் போன்று தனித்துவமான ஒரு விழாவில் வைக்கப்பட்டது. 55 மீட்டர் நீளமும் 24 மீட்டர் அகலமும் கொண்ட ''பொற்'' மூன்று கதவுகளுடன் அமைக்கப்பட்டது. இது சூரியன் உதிக்கும் திசையை நோக்கி இருந்தது. மற்றையது மூன்று கதவுகள் அஸ்தமன சூரியனின் திசையைப் பார்த்து அமைக்கப்பட்டன.

வற் ப்றா கோவிற்கு தெற்காக அமைந்த ''வற் ப்றா'' செற்றுபன் ''வற்போ'' எனப் பிரசித்தி பெற்றது. இதன் ''பொற்'' பாங்கொக்கில் உள்ள மிக அழகான பொற்களில் ஒன்றாகும். ஒரு மேடையில் அது இருக்கிறது. சிங்களம் பாதுகாக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகள் வழியாக அது உள்ள இடத்துக்குச் செல்ல முடியும். மேடையின் தளம் மிகச் சிறந்த ராமாகியின் சிற்பங்களால் மூடப்பட்டுள்ளது. தாய் சிற்பிகளால் செதுக்கப்பட்ட மிகச்சிறந்த கற்சிற்பங்கள் சிலவற்றை அது பிரதிநிதித்துவப் படுத்துகிறது. பொற்றின் கதவுகளில் ராமாகியின் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இவை கைவினைக் கலைஞர்களின் சிறந்த வேலைப்பாட்டிற்கு உதாரணமாக உள்ளன.

அயுத்தன் ஆட்சிக் காலத்துக்கு மற்றுமொரு உதாரணமாக விளங்குவது வற் மஹாதற் ஆகும். இது ஒரு மிக முக்கிய தியான நிலையமாக விளங்குகின்றது. இது 1844 ஆம் ஆண்டிலும் 1851 ஆம் ஆண்டிலும் புனர்நிர்மாணம் செய்யப் பட்டது. இந்த ஆலயத்தில் பக்கம் பக்கமாக பொற் மற்றும் விதான்கள் உள்ளன. கிழக்குத் திசையில் ஒரு ''மொன்டொப்'' உள்ளது.

கிழக்குப் பக்கமாக மாளிகைக்கும் நகர சுவருக்கும் இடையில் இருப்பது வற் சுஹற் ஆகும். பாங்கொக்கின் மிக உயரமான இந்த வற் முதலாவது ராமா அரசனால் கட்டப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 8 மீட்டர் உயரம் 6 மீட்டர் அகலமும் கொண்ட ப்றா சிறி சௌக்கிய முனி வெண்கலச் சிலையை பிரதிஷ்டை செய்வதற்காக கட்டப்பட்டதாகும். தேக்கு கதவுகளைக் கொண்ட இக் கட்டடம் மிகவும் கவர்ச்சியானது.

மூன்றாவது ராமா அரசனால் கட்டப்பட்ட மிகவும் வழமையற்ற ஒரு கட்டடமாக அமைவது வற் தெபிடரம் ஆகும். இது கி.மு. 161இல் இலங்கையில் அமைக்கப்பட்ட ஆயிரம் அறைகள் கொண்ட புராதன பர்ணசாலையின் பாணியில் அமைக்கப்பட்டதாகும். பிரமிட் பாணியான அமைப்பு ஒரு பக்கத்தில் 38.6 மீட்டராகவும் 33.5 மீட்டர் உயரத்தைக் கொண்டதாகவும் விளங்குகிறது. தரை லற்றறிட் மற்றும் செங்கல்லாலும் அமைக்கப்பட்டது. 15 நடைபாதைகளும் உள்ளன. இப்பாதைகளின் குறுக்காக சிறு சிறு அறைகள் உள்ளன. இவை பிக்குகளால் தியான அறைகளாகப் பாவிக்கப்பட்டுள்ளன.

கோ ப்றயா நதியின் (Chao Phraya River) மேற்குக் கரையில் (Thou buri) அமைந்திருப்பது ''வற் சேங்'' என்று கூறப்படும் வற் அருன் ஆகும். பர்மியப் படையினால் முற்றுகையிடப்பட்ட அயுத்தயா நகரில் இருந்து வெளியேறிய அரசனான தக்ஸின் என்பவன் (King Taksin) விடியுந்தறுவாயில் இக்கோவிலுக்கு வந்தான் என்று நம்பப்படுகிறது. பின் அவன் அக் கோவிலைத் திருத்தி வற் சேங் (Wat Chaeng) *(விடியல் ஆலயம்)* எனப் பெயரிட்டான். அங்கு மரகதப் பச்சை புத்தரை பிரதிஷ்டை செய்தான். பின்னர் இக் கோவில் 1785 இல் வற் பராவிற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் வந்த அரசர்களால் திருத்தத்திற்கு உள்ளான இவ் வற் அயுத்தயன் பாணியில் அமைக்கப்பட்டது. மேரு மலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வற்றின் மேற்பகுதி வரிசையாக உள்ள இராட்சதர்களினால் காவல் காக்கப்படுகிறது. படிகளின் மூலம் மேலே சென்றால் 3 தலையுள்ள யானையில் சவாரி செய்யும் இந்திரன், புத்தரின் வாழ்வின் முக்கிய சம்பவங்களான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிறப்பு, 7 தலை நாகத்தின் கீழ் புத்தர் தியானம் செய்வது, தமது முதல் ஐந்து சீடர்களுக்கு புத்தர் போதனை செய்வது, அவரது சீடர்கள் உடனிருக்க மரணம் நிகழ்வது ஆகியவற்றைச் சித்தரிக்கும் உருவச் சிலைகளே உள்ளன.

கட்டிடக் கலைத் துறையிலும் பொறியியல் துறையிலும் மிகவும் வியப்பைத் தரக் கூடியதாக அமைந்திருப்பது நகொன் பாதொன் என்னுமிடத்தில் அமைந்துள்ள ப்றா படுதாம் ஷெடி என்ற ஆலயமாகும். துறவியாக விளங்கிய போதும் அரசனான நான்காவது ராமா ஒரு பழைய ஆலயத்தைக் கண்டு பிடித்தார். பண்டைக் காலத்தில் இவ்வாலயம் தாய் பௌத்தத்தில் முக்கிய இடம்பெற்றிருந்ததை அறிந்தார். அவர் அரசனாக பதவி ஏற்ற பின் பழைய கட்டடம் இருந்த இடத்திலேயே மிகப் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டப் பணித்தார். 127 மீட்டர் உயரமுள்ள இவ்வமைப்பு உலகிலேயே மிகப் பெரிய ஷெடி ஆலயம் எனக் கருதப்படுகிறது.

தாய்லாந்து மேற்குலக சிந்தனைகளில் மிகவும் ஈடுபாடு காட்டிய காலப் பகுதியில் 1870 ஆம் ஆண்டில் வற் ராஜபொபிற் கட்டப்பட்டது. அதன் மையத்தில் புத்தர் படமெடுக்கும் நாக பாம்புக்குக் கீழ் தியானம் செய்யும் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளே அமைந்துள்ள கட்டிடக் கலைத்திறன் விடயத்தை தருவது அங்கு சென்றால் ஓர் ஐரோப்பிய கிறிஸ்தவ தேவாலயத்திற்குச் சென்றது போலொரு உணர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.இக் கட்டிடம் வழமையான தாய் பாணியில் அமையாமல் கோதிக் கதீட்ரல் பாணியில் அமைந்துள்ளது.

அரசனான ஐந்தாவது ராமாவின் பாங்கொக் கால கட்ட கட்டடக் கலையில் மற்றுமொரு பங்களிப்பாக அமைவது வற்பென்தம பொபிற் ஆகும். அயுத்தயன் காலகட்டத்தின் பிற்காலத்தில் அமைந்தது போன்ற இக்கட்டடம், வற்குலற் என அழைக்கப்பட்டு பின்னர் வற் சாய்தொங் என அழைக்கப்பட்டது.

இவ்வாறு பௌத்த கலாசார - பண்பாட்டு விழுமியங்களைத் தாங்கிநிற்கும் இந்த உயர்ந்த கோபுர ஆலயங்களைப் பார்வையிடச் செல்வோர் மாலை வேளையைத் தெரிவு செய்வது சிறப்பு. மாலை வேளை மஞ்சள் வெயில் கோபுரங்களில் படும் ரம்மியமான காட்சி மனதுக்கு இதமானது. இதனை படம்பிடிப்பது உலகின் அத்தனை அழகையும் புகைப்படக் கருவிக்குள் அடக்குகின்றோம் போன்றதோரு உணர்வைத்தரும்.

-அன்னலட்சுமி இராஜதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் முன்னேற்றமே அவர்களது குறிக்கோள்...

AVIVA NDB Wealth Planners நன்கு தேர்ச்சி பெற்றிருப்பதுடன், அனுபவமும் வாய்ந்தவர்கள். ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் தேவைகளுக்கு சிறந்த ஆலோசனைகளைப் பெற்றுத்தரும் நிபுணர்களாக விளங்குவதுடன், உங்கள் சொத்துக்களை விருத்தி செய்து பாதுகாப்பவர்களாகவும் விளங்குகின்றனர்.

உங்கள் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, உங்கள் வெல்த் பிளானர்ஸை இன்றே நாடுங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 2310310

AVIVA NDB Wealth Planners

உங்கள் நம்பிக்கையை வென்றோர்

24 மணிநேர தொலைபேசி **2310310** மின்னஞ்சல் **info@avivandb.com** இணையத்தளம் **www.avivandb.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "புதுக்கவிதை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது"

**–கவிஞர் மேமன்கவி**

"புதுக்கவிதை என்பதை நான் நவீன கவிதை என்றே குறிப்பிடுவேன். இலங்கையைப் பொறுத்த வரை நவீன கவிதையின் ஆரம்பம் முதல் தனித்துவம் பேணப்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் வானம்பாடி இயக்கத்தின் புதுக்கவிதையின் தாக்கத்தில் எழுத ஆரம்பித்த இலங்கைப் புதுக்கவிதையாளர்கள் பின்னர் அதிலிருந்து விடுபட்டுக் கொண்டார்கள். இலங்கையின் புதுக்கவிதை மாற்றம் பெற்றது. அதற்கு இலங்கை தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்தான் காரணமாக அமைந்தன. அந்தக் கால கட்டத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களில் புதுக் கவிதையில் தான் ஆழமாகவும் வீச்சாகவும் அப்பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டன. இத்தகைய வெளிப்பாட்டின் மூலம், அது வரை காலம் அடைந்திராத வளர்ச்சியினை இலங்கைத் தமிழ்க் கவிதை பங்களிப்பால் (அதிக அளவில் புதுக்கவிதைகள்) அடைந்திருக்கிறது"

இவ்வாறு இலங்கையின் புதுக்கவிதை நிலை குறித்து தமது கருத்தினை ஆணித்தரமாக முன்வைத்தார் மேமன் கவி.

யுகராகங்கள், ஹிரோஷிமாவின் ஹீரோக்கள், இயந்திர சூரியன், நாளைய நோக்கிய இன்றில், மீண்டும் வசிப்பதற்காக, உனக்கெதிரான வன்முறை ஆகியன இவர் எழுதி வெளியிட்ட புதுக்கவிதை நூல்களாகும்.

1990 ஆம் ஆண்டு இவரின் "நாளைய நோக்கிய இன்றில்" என்ற நூலுக்கு சாகித்திய பரிசு கிடைத்ததும் குறிப்பிடத் தக்கது. அண்மையில் இவரைச் சந்தித்தபோது புதுக்கவிதைத் துறையோடு தொடர்புபட்ட பல கருத்துக்களை அறிய முடிந்தது.

அந்த வகையில் இவர் தமிழ் எழுத்துத் துறைக்கு வந்த சூழல் அல்லது காரணகர்த்தாக்கள் பற்றி வினவினோம். அதற்கு மேமன் கவியின் பதில் இது:

நான் எட்டாம் வகுப்புவரை தமிழ் மொழி மூலம் கற்றவன். மேமன் சமூகத்திலிருந்து வந்தவன் என்ற வகையில் எனது சமூகத்திலோ குடும்பத்திலோ எழுத்தாளர்கள் இல்லாதிருந்த சூழலில், பாடசாலை காலம் தொடக்கமே நான் ஒரு தீவிரமான வாசகனாக இருந்தேன். எனது தந்தையார் நடத்திக் கொண்டிருந்த தையல் நூல் உற்பத்தி தொழிற்சாலையில் எஸ். ஜி. சேகர் என்பவர் இயந்திர இயக்குனராக பணியாற்றினார். அவர் ஒரு ஓவியரும் பாடகரும் கூட. ஓய்வு நேரத்தில் தொழிற்சாலைக்கு சென்ற பொழுது சேகர் என்பவர் துப்பறியும் நாவல்களை படிப்பதை விட சமூக நாவல்களை படிப்பது நல்லது என சொல்லி கையில் நா. பார்த்தசாரதியின் "குறிஞ்சி மலர்" எனும் நாவலை கொடுத்து படிக்கச் சொன்னார். அந்த நாவலை வாசித்த நாள் தொடக்கம், துப்பறியும் நாவல்களை படிக்கும் பழக்கத்திலிருந்து முழுமையாக விடுபட்டு, சமூக நாவல்களைப் படிக்க ஆரம்பித்த பயணம்தான், நானும் ஒரு எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற ஆசையுடன் ஆர்வத்தையும் எனக்குள் ஏற்படுத்தியது.


அந்தக் கால கட்டத்தில் எனது இந்த ஆர்வத்தை ஊக்கப் படுத்திய எம். அஸ்ரப்கான் அவர்களையும் இங்கு நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். பிற்காலத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களும் அவரின் தொடர்பில் உறவு ஏற்படுத்திக் கொள்ள முடிந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் அமரர் ஈழவாணன் அவர்களும் என் வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றி வந்துள்ளார்கள்

எனது சமூகம் தமிழ்கலை இலக்கியச் சூழலுக்கு அறிமுகமில்லாத சமூகம் என்பதனால் அச் சமூகத்தை அச்சூழலுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் மேமன்கவி எனும் புனை பெயரை தெரிவு செய்தேன். .

**விசேடமாக கவிதைத் துறையில் நாட்டம் ஏற்படக் காரணம் என்ன? எனக் கேட்டதற்கு,**

மொழியின் செழுமையையும் சிறப்பையும் வளர்ச்சியையும் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அம்மொழியின் கவிதையைப் படித்தால் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் எல்லா உலக மொழிகளின் இலக்கிய உருவங்களிலும் கவிதையே ஆதியானது. பாடசாலை காலத்திலும் பிற்காலத்திலும் தேடிப் படித்த சங்க கால இலக்கியங்களிலும் நவீன கவிதைகளிலும் வெளிப்பட்ட தமிழ் மொழியின் சிறப்பு தான் என்னை கவிதை எழுத தூண்டியது. நான் அறிந்த மட்டில் சிறந்த படைப்பாளிகள் பெரும்பாலானவர்கள் கவிதையுடன் தான் தம் கலை இலக்கியப் பயணத்தை தொடங்கி இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன்.

மேலும் இக் கவிஞரிடம் நாம் கேட்ட சில கேள்விகளும் அதற்கு அவர் தந்த பதில்களும் வருமாறு:




**புதுக்கவிதையில் ஏன் அதிக ஈடுபாடு இருந்தது?**

தமிழகத்தில் பாரதிதாசன் நடத்திய குயில் எனும் கவிதைச் சஞ்சிகையை 70 களில் திண்டிவனத்திலிருந்து டாக்டர் வகாப் என்பவர் நடத்திக் கொண்டிருந்தார். எனது மரபுக் கவிதைகள் சில அச்சஞ்சிகையில் வெளிவந்து இருக்கின்றன. புதுக்கவிதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட ஆர்வம் தமிழகத்தின் வானம்பாடி இயக்கம், சி.சு. செல்லப்பா நடத்திய எழுத்து சஞ்சிகை முதற்கொண்டு அக் காலத்தில் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்து கொண்டிருந்த சிறு சஞ்சிகைகளிலும் வெளிவந்த புதுக் கவிதைகளின் தாக்கம் என்னை புதுக்கவிதைப் பக்கம் திரும்பி பார்க்க வைத்தன. அதனை எழுதவும் தூண்டியது. இன்றைய நிலையில் சொல்வது என்றால் நான் புதுக்கவிதை மரபுக் கவிதை என பிரித்துப் பார்க்க விரும்பவில்லை, நவீன கவிதை என அழைப்பதையே விரும்புகிறேன்.

**பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரு கவிஞனுக்கு பரிச்சயம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி....**

நல்லதொரு கேள்வி. இக்கேள்வியும் இதற்கான பதிலும் ஒரு விரிவான உரையாடலுக்கு வித்திடுகிறது. விரிவஞ்சி சுருக்கமாக பதிலைக் கூற முனைகிறேன். ஒரு கவிஞனுக்கு பழைய இலக்கியங்களின் பரிச்சயம் என்பதை பற்றி சிந்திக்கும் பொழுது இன்னொரு கேள்வியும் இவ்விடத்தில் எழுகிறது. அதாவது ஒரு கவிஞனுக்கு மட்டும்தான் பழைய இலக்கியங்களின் பரிச்சயம் இருக்க வேண்டும் என்றால் மற்ற இலக்கியத்துறை சார்ந்தவர்களுக்கு அதைப் பற்றி பரிச்சயம் அவ்வளவாக எதிர்பார்க்கப்படாத ஒன்றுபோல் தெரிகிறது. ஆனால் அது அப்படியல்ல,

என்னைப் பொறுத்தவரை கலை இலக்கியத்துறையில் ஈடுபடும் ஒருவர், எந்த மொழியைக் கொண்டு கலை இலக்கியத்தைப் படைக்கிறாரோ, இம்மொழிக்கான பழைய கலை இலக்கியங்களின் பரிச்சயம் கட்டாயம் இருந்தாக வேண்டும். நான் முன் கூறியது போன்று ஒரு மொழியின் செழுமையை சிறப்பை, வளர்ச்சியை மட்டுமல்லாமல், அம்மொழிச் சமுகத்தின் கடந்த கால வாழ்வியலை தெரிந்து கொள்ளவும் அம்மொழிச் சமுகத்தின் பழைய கலை இலக்கியங்களை பற்றிய அறிதல், பரிச்சயம், கட்டாயம் ஒருவருக்கு இருந்தாக வேண்டும்.

இன்றைய நவீன கலை இலக்கிய ஆய்வு மற்றும் விமர்சன முறைமைகள் கொண்டு பழந்தமிழ் இலக்கியங்கள் ஆய்வுக்கும் விமர்சனத்திற்கும் இன்று உட்படுத்தப்படுத்தப்படுவதால், இற்றைவரை அக்கலை இலக்கியங்களில் இனங்காணப்படாதிருந்த பல புதிய செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இம்முயற்சிகள் மூலம் பழந்தமிழ் இலக்கியங்களின் பெறுமானத்தை அதிகரிக்க வைத்திருக்கின்றன. நான் முன்பு குறிப்பிட்டது போல் ஒரு சமுகத்தின் அந்தந்த கால கட்ட வாழ்வியலை பதிவுசெய்வது அச் சமுகத்தின் கலை இலக்கியங்கள் என்பதற்கு ஏற்ப இன்றைய நமது வாழ்வியலை பற்றிப் பேசுகின்றன. இலக்கியங்களை பற்றிய பரிச்சயமும் கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டு இருக்கும் ஒருவருக்கு தேவை.



**நீங்கள் வேறு எந்தத் துறையில் நாட்டம் உள்ளவராக இருக்கிறீர்கள்?**

நாட்டம் என்று சொல்லும் பொழுது அது என்னில் இரண்டு விதங்களில் செயற்படுகிறது. ஒன்று கலை இலக்கியங்களை உள்வாங்குவதிலுள்ள நாட்டம். மற்றது அக்கலை இலக்கியப் படைப்புக்களை படைப்பதில் உள்ள நாட்டம். அடுத்து நான் நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கும் துறையாக விமர்சனத் துறை இருக்கிறது. என்னை பொறுத்தவரை விமர்சனம் என்பது ஒரு படைப்பை எவ்வாறு நான் உள்வாங்கினேன் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதோடு, அப்படைப்பை மற்றவர்கள் தேடிப் படிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் விமர்சனங்களை எழுதி வருகிறேன்.

**புதுக்கவிதை வாசகனுக்கு எந்தவொரு தெளிவினையோ அல்லது உணவிர்வினையோ பூரணமாக தராத ஒரு சொற் கூட்டம் என்ற குறை கூறுபவர்களுக்கு உங்கள் பதில் என்ன?**

படு பிழையான கருத்து. இது புதுக்கவிதை தமிழுக்கு அறிமுகமாகி அரை நூற்றாண்டு காலம் கடந்து விட்டது. அதன் தோற்றம் மாற்றம் என்பனவற்றை பற்றிய எந்தவொரு தெளிவு இல்லாதவர்கள் முன் வைக்கும் கருத்து இது. நவீன கவிதை மிக முக்கியமான ஒரு பண்பு என்று சொன்னால் குறைந்த சொற்களை கொண்டு வெளிப்படுவது. அவ்வாறான வடிவில் தமிழ் சூழலில் எழுதப்பட்ட புதுக்கவிதைகள் குறைந்த சொற்கள் கொண்ட கவிதைகள் துணுக்குகளாகவே புரிந்து கொள்ளப் பட்டன. தமிழில் எழுதப்பட்ட பல புதுக்கவிதைகள் இன்றைய வாழ்வியலை சிறப்பாக எடுத்துக் காட்டி இருக்கின்றன. அந்த வகையில் தமிழில் தோன்றிய புதுக்கவிதை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதுதான் உண்மை.

**பெண் புதுக்கவிதையாளர்களைப் பற்றி சிறிது கூறுங்கள்?**

தலித்தியம் பெண்ணியம் எனும் இரு போக்குகள் தமிழ் சூழலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தி இருக்கின்றன. அந்த அதிர்வை அப்போக்குகள் கொண்டவர்கள் படைத்த இலக்கியங்களால் தான் ஆழமாகவும் அகலமாகவும் நம்மால் உணரக்கூடியதாக இருந்தது. அதிலும் குறிப்பாக அச்சிந்தனை போக்குகளை வெளிப்படுத்திய புதுக்கவிதைகளால் உணரக் கூடியதாக இருந்தது. பெண்ணியச் சிந்தனையின் அடிப்படையில் எழுதப்பட்ட இலக்கியங்களில் பெண் மொழி என தனியாக பேணப்பட்டது. அதற்கு கவிதை உருவத்தை பொறுத்த வரை புதுக்கவிதை பெண் மொழி ஒன்றினை கவிதையில் கையாள வசதியாக இருந்தது. அந்த வகையில் தமிழ் புதுக்கவிதையில் பெண்ணியச் சிந்தனையாளர் களின் புதுக் கவிதைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின'' எமது வினாக்கள் மூலம் தமது பல்வேறு கருத்துக்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்டார்.



**நேர்முகம்: அன்னலட்சுமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தோல்வியில் துவளாமல் முன்னேற முயற்சிப்பதே கலைஞர்களுக்கு அழகு"

**கலைஞர்கள் – ராஜசேகரன் & ஹெலன்குமாரி**

இலங்கையில் கலையை நம்பி, குறிப்பாக நாடகத் துறையைத் தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்த முடியாது என்பதை கலைஞர்கள் பலரின் வாழ்க்கைப் பாடங்கள் உணர்த்தி நிற்கின்றன. கணவனும் மனைவியும் நாடக நடிகர்களாக இருந்தபோதிலும் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்டு, இலட்சணமான - இலட்சிய குடும்பமாக தலைநகரில் துலங்குகின்றார்கள் ராஜசேகரன் -ஹெலன்குமாரி கலைத்தம்பதியினர்.

'எங்கள் திருமணம் காதல் திருமணம். இரண்டு வீட்டிலும் படு பயங்கர எதிர்ப்பு இருந்தது; காதலை நம்பிக் கைபிடித்தோம். காதல் கைவிடவில்லை; இன்று இரண்டு பிள்ளைகளுக்கு தாய் தந்தையராகி, குடும்ப வாழ்க்கையில் 25 வருடப் பூர்த்தியையும் காணப்போகின்றோம்' என்று மனநிறைவுடன் கூறுகிறார் நடிகை ஹெலன்குமாரி.

இதேபோல் நடிகர் ராஜசேகரன் மனம்திறக்கும்போது ''நாங்கள் இருவரும் ஒரே துறையில் இருந்தமையால் எல்லாமே வசதியாக அமைந்தன. நாடக ஒத்திகைகளை நேரத்துக்கு ஆரம்பித்து, நேரத்துக்கு முடிக்கக் கூடியதாகவும் நாடகக் காட்சி அமைப்பு - நுணுக்கங்கள், ஏனைய பிற எல்லா விடயங்களையும் இருவரும் கலந்தாலோசித்து சரியான முடிவை எடுக்கக்கூடியதாக ஆர்வமும் திறமையும் உள்ள மனைவி எனக்கு வாய்த்தமை பாக்கியமே! இதனால் ஏனைய கலைஞர்களை விடச் சிறப்பாகவும் அதிகமாகவும் எம்மால் நாடகத்துறைக்கு பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருந்தது. ஆரம்பத்திலிருந்தே எமக்குள் புரிந்துணர்வு அதிகமிருந்தது.'' என்றார்.

''அரசநாடக விழாவுக்கு மட்டும் நாடகம் போடும் நிலை இலங்கையில் வந்துவிட்டது. இன்றைய இலங்கையில் ஒரு நாடகத்தை மிகக் குறைந்த பட்ஜெட்டில் மேடையேற்ற வேண்டுமென்றால்க் கூட ஆகக்குறைந்தது 75,000 ரூபாய் தேவை'' என்று இலங்கை நாடகத்துறையின் இன்றைய நிலை பற்றிக் கூறும் போது ராஜசேகரன் தொடர்ந்து கூறியதாவது..''ஒரு நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்றால் அதற்கான முழுச் செலவையும் அதன் ஏற்பாட்டாளர்களே பொறுப்பேற்க வேண்டி ஏற்படுகின்றது. அரசினதோ சமூக நிறுவனங்களினதோ விளம்பரதாரர்களினதோ பங்களிப்பு பாதியளவு கூடக் கிடைப்பதில்லை. வெளிநாட்டு கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு நம்மவர்கள் ஆயிரக் கணக்கில் செலவுசெய்து டிக்கட் வாங்கிச் செல்கிறார்கள். ஆனால் எம்மவர்களின் மேடை நிகழ்ச்சிகளுக்கு 25 ரூபா டிக்கட் வாங்கிப் பார்ப்பதற்கும் ஊக்கமளிப்பதற்கும் முன்வர மாட்டேன் என்கிறார்கள். இது கவலைக்குரிய விடயம்தான். வெளிநாட்டு கலைஞர்கள் மூலம் கலைப் பரிமாற்றம் ஏற்பட்டால் ஆரோக்கியம்தான். ஆனால் காசுப் பரிமாற்றம் அல்லவா நடக்கிறது. ஈழத்து நாடகங்களில் யதார்த்தமும் உயிர்ப்பும் தென்பட வேண்டும் என்றால் கலைஞர்களுக்கு போதிய பயிற்சிகளும் அனுபவங்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வேண்டும். இதற்கு அதிகளவான நாடகங்கள், அடிக்கடி மேடையேற்றப்பட வேண்டும். அதற்கான வசதி வாய்ப்புகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும். தமிழ்க் கலைஞர்களைப் பொறுத்தவரையில் கொழும்பில் ஒரு ஒத்திகை மண்டபம் கூட கிடையாது என்று தனது ஆதங்கத்தை ராஜசேகரன் பகிர்ந்து கொள்ளும் போது இடையில் குறிக்கிட்ட திருமதி ராஜசேகரன், ''அரசாங்கம் தமிழ் நாடகத்துறையை ஏறெடுத்தும் பார்ப்பதும் இல்லை. அநேக ஓரவஞ்சகமான செயல்கள் நடக்கின்றன. அரச நாடக விழாவில் சிறந்த சிங்களக் கலைஞருக்கு ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. ஆனால் சிறந்த தமிழ்க் கலைஞருக்கோ 25,000 ரூபா மட்டுமே கொடுக்கப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடக விழாவில் சிறந்த நடிகை, சிறந்த நடிகர் விருதுகள் வழங்கப்படவில்லை. காரணம் கேட்டபோது சிறந்த என்பதற்கு யாரும் தகுதி பெறவில்லை என்றனர். மேடையேறிய நாடகங்களில் நடித்த கலைஞர்களில் யார் சிறந்தவர் என்றுதானே பார்க்கப்பட வேண்டும்; அதுதானே நியாயம்'' என நீதியை நிலைநாட்டக் குரல்கொடுக்கும் ஹெலன்குமாரி, ஒரு நடிகையாக இருப்பதனால் தான் எதிர் கொண்ட சங்கடங்களையும் மனவுறுதிடன் எதிர்நீச்சல் அடித்தமையையும் நினைவுபடுத்தினார்.



''நடிகைகளுக்கே உரித்தான சாபக்கேடு - வதந்திகளில் இருந்து நான் தப்பிவிடவில்லை. கலைப் பற்றும் தொழில் பற்றும் என்னை ஊக்குவித்ததால் தவறுகளைக் களைந்து, நிறைவுகளைச் சேர்த்துக் கொண்டேன். நடிகை என்றவுடன் ஒருமாதிரியாகப் பார்க்கும் எமது சமூகத்தின் மத்தியில் பலவாறும் கதை சொல்பவர்கள் சொல்வார்கள்; ஆரம்பத்தில் அவற்றையெல்லாம் கணக்கெடுத்து அழுதேன். 'நடிப்பென்று வந்தால் இதையெல்லாம் கேட்டுத்தான் ஆகவேண்டும். தூற்றுவோர் தூற்றட்டும்; உன்மேல் உனக்கு நம்பிக்கை இருந்தால் எதற்கு நீ அஞ்சவேண்டும்?' என்று பெரியவர்கள் கூறிய அறிவுரைகளால்த்தான் என்னால் நடிப்புத்துறையில் நின்றுபிடிக்க முடிந்தது. இப்படித்தான் நடிப்பேன் என்று என் பாதுகாப்புக்காகவும் தொழில் மதிப்புக்காகவும் எனக்கு நானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுகள், ஒரு சிலருக்கு கசப்பான சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் ஆரம்பத்தில் பல நாடக சந்தர்ப்பங்களையும் தென்இந்திய சினிமா மற்றும் சிங்கள சினிமா சந்தர்ப்பங்களையும் இழந்திருக்கிறேன். ஆனால் அவற்றைப் பற்றி கவலைப்பட்டது கிடையாது.



பணம் சம்பாதிக்கலாம் என்பதற்காகவோ, நடிபார்வ மிகுதியாலோ பெண்கள் நாடகத் துறைக்குள் கால் வைக்கிறார்கள். கடைசியில் பலர் வருமானமும் இன்றி, கலைத்துறைச் சுழலுக்குள் நின்றுபிடிக்க முடியாமல் ஒதுங்கி விடுகின்றனர். தோல்வியில் துவளாமல் முன்னேற முயற்சிப்பதே கலைஞர்களுக்கு அழகு.


மேலும் நடிப்புத்துறையில் ஆர்வமுள்ள குடும்பப்பெண்களை உள்வாங்கிக் கொள்வதற்கு நாடக ஏற்பாட்டாளர்கள் எதையும் திட்டமிட்டு நேர முகைமைத்துவத்துடன் செய்யப் பழக வேண்டும். உதாரணமாக ஒத்திகை நேரத்தை மாலை ஆறு மணி என்று குறிப்பிடுவார்கள். ஆனால் இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பித்து நடுநிசிவரை நடத்துவார்கள். நடுச்சாமத்தில் போய் வீட்டுக்கதவைத் தட்டும் போது அயலில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்? வீட்டில் உள்ளவர்கள் கூட இப்படி ஒரு தொழில் தேவையா என்று எண்ண மாட்டார்களா? இதனால் பாதிக்கப்படுவது அந்த நடிகையும் நாடகத்துறையும்தானே?'' எனத் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

நாடகத் தந்தை இராசேந்திரம் மாஸ்டரின் மனோரஞ்சித கான சபா மூலம் ஆறு வயதில் கலை உலகில் காலடி எடுத்து வைத்த நடிகை ஹெலன்குமாரி, எம்.வி. பாலனின் 'ஒக்கொமஹரி' என்ற படத்தில் நடன நடிகையாக முதலில் அறிமுகமானார். 'நெஞ்சுக்குத் தெரியும்', 'நெஞ்சுக்கு நீதி', 'ஏமாளிகள்', 'தென்றலும் பாலும்' என ஏழு படங்களில் கதாநாயகியாக நடித்து, மக்களை சிரிக்க வைத்தும் களிக்க வைத்தும் பாராட்டுகளையும் பட்டங்களையும் பெற்றார். 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் 'தனேத்திரா' என்ற படத்தில் எச். ஆர். ஜோதி பாலாவுக்கு ஜோடியாக நடித்தார். 35க்கும் மேற்பட்ட சிங்களப் படங்களில் நடன இயக்குநராகப் பணி புரிந்துள்ளதுடன் நடனக் கலைஞராகவும் நடிகையாகவும் நடித்துள்ளார். பிரபல சண்டைப் பயிற்சி நிபுணர் மாஸ்டர் முத்துலிங்கத்திடம் வாள் பயிற்சி பெற்று பல மேடைகளில் வாள் சண்டை புரிந்துள்ளார். கலைமணி, நடனமயில், கலையரசி போன்ற பத்துக்கும் மேற்பட்ட பட்டங்களை தேசியரீதியாக இவர் பெற்றுள்ளார். சினிமாவில் இருந்து ஒதுங்கினாலும் நாடகத் துறையை விட்டு ஒதுங்கவில்லை. குடும்ப வாழ்க்கைக்கு அடுத்ததாக கலை வாழ்க்கையை விருப்பத்துடன் ஏற்று வாழ்கிறார்.

ராஜசேகரனது கலையுலக வாழ்க்கை, வானொலி சிறுவர்மலர் நிகழ்ச்சியில் ஆரம்பித்து, பாடசாலை நாடகங்களில் பயிற்சி பெற்று, 1975 ஆம் ஆண்டு கே. செல்வராஜ் தயாரித்த 'உறவுகள்' நாடகத்தின் மூலம் ஆரம்பமானது. ஜெயசீலன், சீதாராமன், நசீர் ஆகியோருடன் இணைந்து வெள்ளிநிலாக் கலாலயத்தை உருவாக்கினார். இலங்கையின் நாடக வரலாற்றில் முத்திரை பதிக்கத்தக்கதான பல தரமான நாடகங்களை இக்கலாலயம் மேடையேற்றி பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. கலாலயத்தின் தலைவராக ஹெலன்குமாரியும் பொதுச் செயலாளராக ராஜசேகரனும் கடமையாற்றுகிறார்கள். வெள்ளி நிலாக்கலாலயம் ஒவ்வொருவருடமும் குறைந்த பட்சம் ஒரு நாடகத்தையாவது மேடையேற்றி வருவது இலங்கையைப் பொறுத்தமட்டில் சாதனையாகவே கருதவேண்டும்.



''ராஜசேகரன் 1979 ஆம் ஆண்டளவில் 'கதம்பம்' என்ற சஞ்சிகைக்காக கலைஞர்களைப் பேட்டிகாணும் நிருபராக இருந்தார். சினிமாவில் பிரகாசித்துக் கொண்டிருந்த என்னைப் பேட்டி காண வந்திருந்தார். அன்று மலர்ந்த எங்கள் நட்பு நான்கு வருடங்களின் பின், 'முக்கோணத்தில் மூவர்' நாடகத்தின் மூலம் காதலாகி, இரண்டு வருடங்களின் பின் கலியாணம் முடித்தேன்; எங்கள் இருவருக்குமிடையில் ஆழமான புரிந்துணர்வு இருந்ததனால், எங்களுக்குள் எந்தக் கருத்து வேற்றுமைகளும் இல்லை'' என்று தனது முதற்சந்திப்பைக் கூறிய ஹெலன்குமாரி, இலங்கை நாடகத் துறையின் வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் எனக் கூறும்போது, ''கலையையும் கதையையும் நம்பி எமது நாடகங்கள் உருவாக வேண்டும். சிறந்த நாடக உருவாக்கத்திதற்கு கதாபாத்திரத்திற்கு ஏற்ற கலைஞர்களைத் தெரிவு செய்வதும் அவசியம். 'ஆராரோ ஆரிவரோ' என்ற நாடகம் நாடகவிழாவில் மேடையேற்றப்பட்டபோது, 'இதுதான் நாடகம்' என்று பலராலும் பாராட்டுப் பெற்றது. இதில் நான் 85 வயது முதியவராவும் ஹெலன் 80 வயது மூதாட்டியாகவும் நடித்தோம். உடல் தளர்ந்து, குரல் தளர்ந்தது. கூன் விழுந்த தோற்றத்தைக் காட்டும் விதத்தில் நடிக்க வேண்டும். எனக்கு சிறந்த நடிகை விருதும் கணவரக்கு சிறந்த அளிக்கை விருதும் கொடுத்தார்கள். அதென்ன சிறந்த அளிக்கை விருது எனக்கேட்ட போது கணவனுக்கும் மனைவிக்கும் சிறந்த நடிகர், நடிகை விருது கொடுக்கக்கூடாது என்பதனால் இவ்வாறு கொடுக்கப்பட்டது எனப் பதில் வந்தது. இங்கே யார் நடிக்கிறார்கள் என்பதைத்தான் பார்க்கிறார்களே தவிர என்ன நடிக்கப்பட்டது? எப்படி நடிக்கப்பட்டது? என மதிப்பீடு செய்யப்படவில்லை. இப்படியான மனோபாவங்கள் களையப்படும் போது இந்தநாட்டில் கலைத்துறை சிறப்படையும்'' என்றார் ஹெலன்.



இலங்கை நாடகத்துறையின் போக்குகுறித்து தனது கருத்துக்களைக் ரா ஜசேகரன் கூறும்போது, ''ஈழத்து சினிமாவோ, நாடகமோ ஏன் வளரவில்லை என்று கூற வேண்டுமானால் தென்னிந்திய தமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்களும் இந்தி, ஆங்கிலப் படங்களுமே காரணம் என்று கூறுவது வழமையாகி விட்டது. இதில் ஓரளவு உண்மையாயினும் பெரும்பாலும் கலைஞர்களின் போக்கும் ரசிகர்களின் நோக்கும் வெவ்வேறு திசைகளில் பிரிந்திருப்பதே முக்கிய காரணம் என்று கூறவேண்டும். நாடகத்துறை குறித்த விழிப்புணர்ச்சி பாடசாலை மட்டத்திலிருந்து வரவேண்டும். கிழக்கில் பல்கலைக்கழக மட்டத்தில் பயிற்சிப்பட்டறைகள், வகுப்புகள் நடத்தப்பட்டு பட்டங்கள் வழங்கப்படுகிறது. நாடகத்துறை பற்றி விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஒரு நாடகத்தை மேடை ஏற்றினால் ரசிகர்களைத் தேட வேண்டிய தேவை கிடையாது. இத்துறை சார்ந்த மாணவர்களே ரசிகர்களாகி விடுவார்கள். ஆனால் இவர்கள் படிப்போடு மட்டுமே இருக்கிறார்கள். கொழும்பில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழி மூலமான அரங்கியல் கற்கை நெறிகள் இல்லாமையினால் அவை உருவாக்கப்பட வேண்டும்.

கலைஞர்களுக்கு வழங்கப்படும் அரச உயர்விருதான கலாபூசனம் விருது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் வழங்கப்படவேண்டும் என்று ஒரு நியதி வகுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் கலைஞர்கள் வயதைப் பார்க்காமல் ஒருவரின் சாதனையைப் பார்த்து விருது வழங்குகின்றார்கள். ஆனால் தமிழ்க்கலைஞர்களைப் பொறுத்தவரையில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.உதாரணமாக ஸ்ரீதர்பிச்சையப்பா போன்ற பல்துறைசார் நிகரில்லாக் கலைஞன் எந்த தேசிய கௌரவத்தையும் பெறாமல் இறந்துவிட்டார். தமிழ்மொழிக் கலைஞர்களுக்கு திறமையையும் சாதனையையும் வைத்து மதிப்பீடு செய்து, விருது கொடுக்கப்பட வேண்டும். சிங்களக் கலைஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான கலைஞர்கள் இருப்பதனால் இந்த விதிமுறை சரி என எண்ணுகின்றேன்'' என்றார்.

**பி. ஜோண்சன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புராதன இலங்கையில் பௌத்த பிக்குகளும் பௌத்த சங்கமும்

வட இந்தியாவில் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் பெரும் பேரரசை அமைத்த அசோகன் கலிங்கப்போரில் தனக்கேற்பட்ட துயர அனுபவங்களின் பின்னர் போரின் மூலம் நாடுகளை இணைத்துக் கொள்ளும் திக்விஜயத்தைக் கைவிட்டு அறவழியில் செல்லும் தர்மவிஜயத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்தான். போரில் ஏற்பட்ட துயரங்களைத் தணிக்கும் அறவழியை நிலைநாட்ட பௌத்த சமயத்தில் காணப்பட்ட தர்மம் பற்றிய சிந்தனைகள் தகுந்தனவெனக் கண்டான்.

அவை சாதாரண பொதுமக்களும் பின்பற்றுவதற்கு தகுந்த சமூகதர்மமாக விளங்கியமையால் அவற்றைத் தான் பின்பற்றுவது மட்டுமன்றித் தனது நாட்டிலும் பரப்புவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டமையைச் சான்றுகள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. தனது நாட்டிலுள்ளவர்கள் மட்டுமன்றி அயல்நாட்டவர்களும் அக்கொள்கையைப் பின்பற்றி, அமைதியையும் நல்வாழ்வையும் பெறவேண்டும் என்ற ஆவலினால் சமய தூதுவர்களை அந்நாடுகளுக்கு அனுப்பினான்.

தனது குடும்ப உறுப்பினர்களைக் கூட இப்பணியில் ஈடுபடுத்தியமையானது அசோகப்பேரரசன் புத்தரது தர்மக்கொள்கைகளைப் பரப்புவதில் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. இப்பின்னணியில் இலங்கையில் தேவநம்பியதீசனின் ஆட்சியில் அசோகனின் மகனாகிய மகிந்தரின் தலைமையில் பௌத்தமதம் அறிமுகம் செய்யப்பட்டமையைக் காணலாம். கி.மு.3 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் அறிமுகமாகிய பௌத்தம் அன்று தொடக்கம் ஆட்சியாளர்களின் அனுசரனையைப் பெற்று இன்றுவரை முக்கியமான இடத்திலுள்ள மையை அவதானிக்கலாம். துறவினைப் பின்பற்றிப் புத்தரின் கொள்கைகளை ஏற்று அவற்றைப் போதனை செய்யும் பணிகளை மேற்கொள்வோர் பிக்குகள் எனப்பட்டனர். இந்து மதத்தில் காணப்பட்ட சடங்குகள், கிரியைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றுக்கு எதிராகத் தோற்றம் பெற்றதே பௌத்த சமயமாகும். இதனால் இந்து சமயத்தின் சில அம்சங்கள் பௌத்தத்தில் காணப்படுவது தவிர்க்கமுடியாததே.

இந்துக்களின் நான்கு ஆச்சிரம தர்மங்களில் பிரமச்சரியம், சந்நியாசம் என்பன வாழ்வின் இடை, கடைப் பகுதியில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். இவ்விரு நெறிகளே பௌத்தமதத்தில் பிக்குகளின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடுமெனக் கருதப்படுகின்றது. 'உபசம்பதா' என்ற சடங்கு மற்றவர்களிடமிருந்து பிக்குகளை வேறுபடுத்தவும் அவர்களுக்குரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் உதவியது. அநுராதபுர கால பௌத்தத்தின் வளர்ச்சியில் பௌத்தசங்கத்தின் தோற்றமும், எழுச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். இச்சங்கத்தில் பிக்குகள் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. சாதிப் பாகுபாடுகளோ, பிறபாகுபாடுகளோ பௌத்தபிக்குகளாவதற்குத் தடையாக இருக்கவில்லை. புத்தம், தர்மம், சங்கம் என்பனவே அவர்களின் தாரக மந்திரமாகும்.

பொதுவாக பண்டைய காலத்தில் சமயத் தலைவர்கள் அரசர்களுடைய அவையிலே பல்வேறு நிலைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அநுராதபுர இராசதானியில் பிராமணர்கள் ஆசிரியர்களாகவும், ஆலோசகர்களாகவும், சமயக்கடமைகளை ஆற்றுவோராகவும் பணிபுரிந்தமைக்கு பாளி இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. பௌத்தசமயம் எழுச்சியடைந்ததையடுத்து பௌத்தபிக்குகள் அவ்விடத்தைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் புத்தருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைப் போதித்தல், கற்பித்தல் போன்ற பணிகளில் ஆரம்பகாலத்தில் ஈடுபட்டனர். பௌத்தமதத்தை அநுராதபுரத்திலும், பிற இடங்களிலும் பரப்புவதிலும், அதனை நிலைநிறுத்துவதிலும் இவர்கள் பெரும்பங்களிப்புச் செய்தனர்.

அவ்வப்போது இவர்கள் கல்வி மற்றும் புனித யாத்திரைகளின் பொருட்டு அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று வந்தமை பௌத்தத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்ததென்பதை மறுப்பதற்கில்லை. அங்குள்ள நாலந்தா, தட்சசீலம் போன்ற பௌத்த கல்விக்கூடங்களுக்கு இலங்கைப்பிக்குகள் செல்வதும், அங்கிருந்து பிக்குகள், யாத்திரிகர் உள்ளிட்ட பலர் இலங்கையிலிருந்த மகாவிகாரை, அபயகிரி விகாரை போன்றவற்றுக்கு வருகை தருவதும் வழக்கமாக இருந்தது. பிற்காலத்தில் சீனா, ஜப்பான், திபெத், கம்போடியா போன்ற நாடுகளுடனும் இலங்கைப் பிக்குகள் சமயரீதியிலான தொடர்புகளை வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலங்களில் நகருக்கு ஒதுக்குப் புறத்தில் காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்த பிக்குகள் காலப்போக்கில் அரசவையிலும் அரச குடும்பத்திலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கினர்.

இவர்கள் இருசோடி ஆடைகள், பிச்சா பாத்திரம், ஊசி, நூல், சவரக்கத்தி ஆகிய பொருட்களை மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்பது பௌத்த மதத்தின் தொடக்ககால மரபாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் சாதாரண மக்கள் தொட்டு அரசகுடும்பம் வரைத் தானமாக வழங்கிய நிலம், குளம், கால்வாய், குகை, கற்படுக்கை என்பவற்றால் பௌத்த சங்கம் உருவாகி, அது அரசிற்குச் சமமான நிலையில் சொத்துடைய நிறுவனமாக வளர்ந்தது. இதனால் பௌத்த துறவிகளின் பணி போதனைக்கப்பால் கல்வி, சமூக நலன், மருத்துவம் என விரிவடைந்தது. இத்தகைய கொடைகளால் பொருளாதார ரீதியாகவும் எழுச்சியடைந்த பிக்குகள் செல்வாக்கிலும் அரசுக்கு நிகராக எழுச்சி பெற்றனர்.

அரசர்களும் அரசபதவியும் மாறும் தன்மையுடையதாக இருந்தபொழுது பௌத்தசங்கம் என்றும் நிலைபெற்றிருக்கும் நிறுவனமாக விளங்கியது. இதனால் பொருளாதார ரீதியாகக்கூட பொதுமக்கள் சங்கத்துடன் தொடர்புகளைப் பேணக் கூடியதாக இருந்தமை சங்கத்தின் அதிகார வளர்ச்சிக்கு ஏதுவாகியது.

நாளடைவில் அரசியல் பிணக்குகளைத் தீர்த்து வைக்குமளவுக்கு செல்வாக்குப் பெற்றமையைச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. தென்னிந்தியத் தமிழ்ப் படையெடுப்பாளர்களிடமிருந்து வட்டகாமணியைப் பாதுகாத்தவர் குபிக்கல மகாதிஸ தேரர் என்ற பிக்குவேயாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு நன்றிக் கடனாக வட்டகாமணி 'அபயகிரி' விகாரையைக் கட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. இவ்விகாரை பிற்காலத்தில் மகாஜான பௌத்தத்தின் மையமாக விளங்கியமை குறிப்பிடத்தக்ககது. மேலும் இவர்கள் நாட்டின் ஆட்சியாளரின் கொள்கைகளையே மாற்றும்படி செய்தமைக்கு மகாசேனனின் ஆட்சி சிறந்த சான்றாக அமையும். தமிழ்நாட்டிலிருந்து வந்த சங்கமித்திரர் என்ற பிக்கு மகாசேனனின் ஆசிரியராகி, மகாஜான பௌத்தக் கொள்கைகளை ஏற்கச்செய்து, தேரவாதபௌத்த மையங்களையும் இந்துக்கோவில்களையும் அழிக்கச் செய்தமையை மகாவம்சம் அறியத்தரும். இக்காலகட்டத்தில் தேரவாத - மகாஜான பௌத்த பிக்குகளிடையே பெரும்வாதங்கள் நடைபெற்றதை அவதானிக்கலாம். மகாபராக்கிரமபாகுவுக்கும் கஜபாகுவுக்கும் இடையே உடன்பாடு ஏற்படுவதற்கும் பௌத்த சங்கமே காரணமாக இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. இந்நிகழ்வுகள் பௌத்தசங்கமும், பௌத்தபிக்குகளும் ஆரம்ப காலத்தில் இலங்கையில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.


பௌத்தர்களின் வழிபாட்டு மையமாக தூபிகளும், விகாரைகளும் விளங்குகின்றன. சிறப்பாகத் தூபி வழிபாட்டு இடமாகவும், விகாரை பௌத்த துறவிகள் தங்குகின்ற இடமாகவும், கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மையமாகவும் காணப்படுகின்றது. பாளி இலக்கியங்கள் தேவநம்பியதீச மன்னன், மகிந்ததேரரும் அவரது குழுவினரும் தங்குவதற்காக மகாவிகாரையைக் கட்டிக்கொடுத்தான் எனக் கூறுகின்றன. இவ்விகாரையே இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது விகாரையாகும். இதனையடுத்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்பவர்கள் விகாரைகள், தாதுகோபுரங்கள் முதலியவற்றை நிறுவுவதையும், பிக்குகளை ஆதரிப்பதையும் பிரதான கடமையாகக் கருதிச் செயற்பட்டனர்.

ஓர் ஆட்சியாளன் தனது பதவியை நிலைநாட்ட இப்பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மகிந்ததேரர் இலங்கைக்கு வந்த புதிதில் ஆண்களே பௌத்த துறவிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தேவநம்பியதீசனின் தம்பியின் மனைவியாகிய அனுலா 500 தோழிகளுடன் பிக்குணியாவதற்கு விரும்பினாள். அதனை அறிந்த மகிந்த தேரர் தனது சகோதரியாகிய தேரி சங்கமித்தையே பெண்களைப் பிக்குணிகளாக்குவதற்குப் பொருத்தமானவள் என்றும், பேரரசனுக்குத் தூதுக்குழுவை அனுப்புமாறும் ஆலோசனை கூறினார்.

இதன் பிரகாரம் புத்தர் ஞானம்பெற்ற போதி மரக்கிளையுடன் இலங்கையின் வடபகுதியிலிருந்த ஜம்புக்கோளப் பட்டினத்தினூடாக சங்கமித்தை அநுராதபுரத்தை வந்தடைந்ததாகவும், மகாமேகவனம் உள்ளிட்ட பல இடங்களில் அக்கிளை நாட்டப்பட்டதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

இதனைத் தொடர்ந்து அனுலாவும் அவளுடன் 500 பெண்களும் பிக்குணிகளாக்கப்பட்டனர். இதன்மூலம் இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாகப் பெண்கள் பிக்குணிகளாக சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதைக் காணலாம். அதேவேளை அரசமரத்தை நாட்டி வழிபடும் மரபு பௌத்தத்தில் பிரதான இடத்தைப் பெற்றிருப்பதை இன்றுவரை காண்கின்றோம். ஏறக்குறைய 1300 ஆண்டுகால வரலாற்றுப் பெருமைமிக்க அநுராதபுர காலத்தில் அறிமுகமாகிய பௌத்தம் இலங்கையின் அரச சமயம் என்ற அந்தஸ்தைப் பெற்றதுமன்றி, பௌதத்தை, பௌத்தசங்கத்தை ஆதரிப்பவரே இலங்கையின் அரசபதவியை நிலைநிறுத்த முடியுமென்பதையும், பிற்காலத்தில் புனித தந்ததாதுவினை யார் வைத்திருக்கின்றாரோ அவரே நாட்டின் ஆட்சியாளராகலாம் என்பதையும் நிலைநிறுத்தியது. இத்தகைய பின்னணியே இன்றும் இலங்கையின் அரசியலில் பௌத்தசங்கமும், பௌத்ததுறவிகளும் முக்கியத்துவம் பெறுவதற்கு காரணமாக இருந்து வருகின்றது.

**- சாந்தினி அருளானந்தம்**
**யாழ். பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் உங்களுக்கு எப்படி?

இடபம் : சூரியன்,புதன்
மிதுனம் : வெள்ளி, கேது
சிங்கம் : செவ்வாய்

கன்னி : சனி
தனு : இராகு
மீனம் : வியாழன்

*15.06.2010 இல் மிதுனச் சூரியன் சந்திரன் அபர பக்க உத்தராடம் நட்சத்திரம் மகர இராசியில் இருந்து எல்லா இராசிகளிலும் இந்த மாதம் சஞ்சரிப்பார்.*
*(01.06.2010 தொடக்கம் 30.06.2010 வரை)*

**- ஜோதிடமாமணி எஸ். தெய்வநாயகம்**



## மேடம்

இம்மாதம். சகல விதத்திலும் நன்மைகளைக் கொடுக்கும். எடுத்த கருமங்கள் யாவும் வெற்றியடைந்து தொழில் நிலை சிறப்பு தரும். பண விடயங்கள் யாவும் சுமாராக அமைந்தாலும் இடையிடை மனக் குழப்பத்தை தோற்றுவிக்கும். குடும்பத்தில் நன்மையான காரியத்தின் பொருட்டு செலவுகள் ஏற்படும். அதனால் மனமகிழ்ச்சியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் விலகும். பதவிகளில் மாற்றமும் உண்டாகும். வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்திருப்பது நன்மை தரும். மேட இராசியினருக்கு ஆனி மாதம், ஆறுதல் அளிக்கும் மாதமாக அமைந்திடும்.



## இடபம்

இந்த ராசியினருக்கு நன்மையும் தீமையும் கலந்த மாதமாக ஆனி மாதம் அமையும். காரியங்கள் யாவும் திட்டமிட்டு செய்தால் நன்மையுண்டாகும். எதிர்பார்த்த கருமங்களில் வீண் தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் முடிவுற்று மகிழ்ச்சி தரும். பண விடயங்களில் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக் கஷ்டங்கள் மறையும். உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரை பதவிகளில் இருந்து வந்த தடைகள் விலகும். பதவிகளில் மாற்றம், உயர்ச்சி என்பவைகளையும் தரும்.வியாபாரிகள் முதலீடுகளால் இலாபம் அடைவர். இடர்களிலிருந்து விடுவிக்கும் மாதமாக அமையும்.



## மிதுனம்

எதிர்பார்த்த கருமங்களில் வீண் தடைகள் ஏற்படும். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகும். புதிய முயற்சிகளை ஆரம்பிப்பதை யோசித்து செய்வது நல்லது. பணப்புழக்கம் சுமாராக அமையும். குடும்பத்தில் எதிர்பார்த்த பல விடயங்களில் தாமதம் ஏற்பட்டு மாத முடிவில் வெற்றிகரமாக முடிவுறும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகள் மனச் சஞ்சலங்களை ஏற்படுத்துவர். இதனால் இட மாற்றங்களும் சிலருக்கு கிடைக்கும். வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்திருப்பது நல்லது. மிகவும் அவதானமாக நடக்க வேண்டிய மாதம் இது.



## கடகம்

இம்மாதம் மிகவும் நன்மைகளை தரக் கூடிய மாதமாக அமையும். தொழில் நிலைகள் சீராக அமைவதுடன் எதிர்பார்த்த பண வரவும் வந்து சேரும். புதிய முயற்சிகளைத் தொடங்கக் கூடிய காலமிது. குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான நிலை உருவாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சியுண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வந்த தொல்லைகள் மறையும். பதவிகளில் உயர்ச்சி கிடைக்கும். வியாபாரிகள் முதலீடுகளால் எதிர்பார்த்த இலாபம் பெறுவர்.கர்க்கடக இராசியினருக்கு கவலைகள் மறைந்து செயற்படும் மாதமாக ஆனி மாதம் அமைவு பெறும்.



## சிங்கம்

ஆனி மாதம் அவதானமாக செயற்பட வேண்டிய மாதமாகும். எதிர்பார்த்த கருமங்களில் வீண் தடையும் தொழில் ரீதியாக சிக்கல்களையும் கொடுக்கும். எதையும் திட்டமிட்டு பொறுமையுடன் செய்யா விடில் மனக் கவலைகளைத் தரும். பணவிடயங்களும் சீராக அமைவு பெறாது. குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகளும் அதனால் மனக் குழப்பங்களும் ஏற்பட்டு மறையும். உத்தியோகஸ்தர்கள் மிகவும் நிதானமாகவும் பொறுமையுடனும் கருமங்கள் ஆற்றுவது நல்லது. வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்திருப்பது நல்லது. சிங்க இராசியினருக்கு சிந்திக்க வைக்கும் மாதமாக அமைந்திடும்.



## கன்னி

நன்மையும் தீமையும் கலந்த மாதமாக இம்மாதம் அமைந்திடும். தொழில் நிலைகள் சீராக இருந்தாலும் இடையிடை பிரச்சினைகளுக்கு இடமுண்டாகும். புதிய முயற்சிகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. பண விடயங்களில் அவதானத்துடன் நடக்காவிட்டால் பாரிய இழப்புக்களுக்கு இடம் உண்டாகும். குடும்பத்தில் சகல விடயங்களும் மிகவும் அவதானத்துடன் நிறைவேற்றினால் நன்மையுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகள் மறைமுகத் தொல்லைகளைத் தருவர். இதனால் மனக் குழப்பங்கள் ஏற்பட்டு மறையும்.வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்பட்டால் இலாபமடையலாம்.கன்னி இராசியினரை கலங்கவைக்காது.



## துலாம்

மிகவும் அவதானமும் பொறுமையுடனும் நடந்து கொள்ள வேண்டிய மாதமாகும். தொழில் நிலைகளில் மனக் குழப்பங்கள் தோன்றி மறையும். எதையும் சீராகச் செய்ய முடியாத நிலை தோன்றும். பணக் கஷ்டங்கள் அடிக்கடி தலைதூக்கும். இதனால் திட்டமிட்ட கருமங்களை நிறைவேற்ற முடியாத நிலை உருவாகும். குடும்பத்தில் பிள்ளைகளால் மனக்கவலைகள் உருவாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளால் மனக் குழப்பங்கள் தோன்றி மறையும். வியாபாரிகள் எதிர்கொண்ட கஷ்ட நிலை மறைந்து முதலீடுகளில் இலாபம் பெறும் வாய்ப்புண்டு. துலாம் இராசியினருக்கு துயர் கொடுக்கும் மாதமாக அமையாது.



## விருச்சிகம்

இம்மாதம் மிகவும் நன்மைகளைக் கொடுக்கும். தொழிலில் முன்னேற்றமும் எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும் கிடைக்கும். நீண்ட நாள் மனக் குறைகள் நீங்கும். பண விடயங்களில் இருந்து வந்த சிக்கல்கள் மறைந்து சீரான பண வரவுகள் கிடைக்க வாய்ப்புண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வந்த மனக் கவலைகள் மறைந்து பதவிகளில் உயர்ச்சியுண்டாகும். சிலர் மன மகிழ்ச்சிக்குரிய மாற்றங்களைப் பெறுவர். வியாபாரிகள் எதிர் பார்த்த இலாபம் வந்து சேரும். விருட்சிக இராசியினருக்கு ஆனி மாதம் நன்மை தரும் மாதமாக அமையும்.



## தனு

சம பலன்களைத் தரும் மாதமாக அமைந்திடும். தொழில் நிலைகளில் எதிர்பார்ப்புக்கள் யாவும் தாமதமாகி கிடைத்திடும் புதிய முயற்சிகளை நேரம் காலம் பார்த்து ஆரம்பிப்பது நன்மை தரும். பண விடயங்களில் தாமதம் ஏற்பட்டாலும் உரிய நேரத்தில் பணம் வந்து சேரும். திட்டமிட்ட கருமங்களால் எதிர்பாரா செலவுகளும் உண்டாகும். குடும்பத்தில் அடிக்கடி மனம் குழப்பங்கள் ஏற்பட்டு மறையும். உத்தியோகஸ்தர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். மேலதிகாரிகள் தக்க தருணத்தில் உதவிகள் புரிவர். வியாபாரிகள் முதலீடுகளில் கவனமுடன் செயற்பட்டால் உரிய இலாபம் கிடைத்திட வாய்ப்புண்டு. தளர்ச்சி ஏற்படுத்தாத மாதமிது.



## மகரம்

இந்த ராசியினர் எதையும் துணிந்து செய்தால் நன்மைகளைப் பெறுவர். இல்லையேல் தொழில்நிலை மந்தமாக அமைந்து மனக்கவலை தரும். செலவுகள் கூடுதலாக அமைவதுடன் எதிர்பார்த்த கருமங்களில் வீண் தடைகளும் ஏற்பட்டு மறையும். பண விடயங்களில் எதிர்பாரா திருப்பம் உண்டாகும். குடும்பத்தில் மனக்குழப்பங்கள் ஏற்படுவதுடன் உறவினர்களுடன் அவதானமாக நடந்து கொள்வதும் நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரை இருந்து வந்த தொல்லைகள் மறையும். நீண்ட நாள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் மாற்றங்கள் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் சிறிது தாமதத்தின் பின் வந்து சேரும். மனக் குழப்பம் தந்து தீர்வு தரும் மாதமாக ஆனி மாதம் அமைந்திடும்.



## கும்பம்

இம்மாதம் நன்மையுடன் சிறிது சிக்கல்களையும் தோற்றுவிக்கும் மாதமாக அமையும். தொழில் நிலைகளில் மனக் கசப்புக்கள் தோன்றினாலும் சமாளிக்கும் திறனுண்டாகும். புதிய முயற்சிகளை நேரம் காலம் பார்த்து தொடங்குவது நன்மை தரும். பண வரவுகள் சீராக அமையாவிட்டாலும் தேவைக்கேற்ற பண வரவு வந்து சேரும். குடும்பத்தில் மன மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்களுக்கு செல்வாக்கு அதிகரிப்பதுடன் பதவிகளில் உயர்ச்சியும் ஏற்படும். வியாபாரிகள் இலாபமடைவர். கும்ப இராசியினருக்கு நன்மை மிக்க மாதமாக அமைவு பெறும்.



## மீனம்

இம்மாதம் நன்மையும் தீமையும் கலந்த மாதமாகும். சகல விடயங்களில் கவனம் எடுத்து தேக சுகத்திலும் அவதானமாக இருப்பது நன்மையைத் தரும். தொழில் நிலைகளில் சாதகமான நிலை போல் தோன்றினாலும் இடையிடை மனக் குழப்பங்களைத் தோற்றுவிக்கும். பண வரவுகள் எதிர்பார்த்தபடி அமையாது. இதனால் மனக் குழப்பம் ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் மன அமைதி குன்றும். பிள்ளைகளால் கவலைகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வந்த தொல்லைகள் மறைந்தாலும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. மிகையான கஷ்டம் தராத மாதமிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நான் எனது ஆண்டவரைக் காண்கின்றேன்”



# கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் 175 ஆவது ஜுபிலி விழா

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் 175 ஆவது ஜுபிலி விழா 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

தன்னை நோக்கி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது அனைத்து வேண்டுதல்களுக்கும் பரிகாரம் கொடுத்து, நிறைவோடு வழியனுப்பும் வல்லமை இத்தலத்திலிருக்கும் புனித அந்தோனியாருக்குண்டு. இதனால்த்தான் இரவு - பகல் பாராது, இனம், மதம், மொழி கடந்து இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து பெருந்திரளான மக்கள் பக்தியுடன் வந்து, இப்புனிதரிடம் வரம் வேண்டிச் செல்கின்றனர்.

புனித அந்தோனியார் பக்தியானது 1505 இல் இலங்கைக்கு போர்த்துக்கேயர் வந்த காலம் தொட்டு அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையை போத்துக்கேயர் செயிலாவோ (Ceilao) என அழைத்தனர். அதேபோல் களனி கழிமுகத்திற்கு மேல் இருந்த துறையை ‘கொலோன் தோட்ட’ என அழைத்தனர். இதிலிருந்துதான் கொழும்பு என்ற பெயர் உருவானதாக வரலாறுகள் இயம்புகின்றன.

போர்த்துக்கேயரின் காலத்தில் கொலோன் தோட்டத்தில் வாழ்ந்த மக்கள் குறிப்பாக துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும் இறைபக்தியிலும் உறுதியுடன் திகழ்ந்தார்கள்.

இலங்கை ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டதன் பின்னர், கத்தோலிக்க மக்களின் இறைவிசுவாசத்தை இல்லா தொழிப்பதற்கு முயன்றார்கள். இவர்கள் ஒல்லாந்து சீர்திருத்த சபை என்ற மதத்தை பரப்பினார்கள். ஆனால் கத்தோலிக்க மக்களின் இறைபக்தியை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல்ப் போனது. இதனால் கத்தோலிக்க குருக்கள், துறவிகளை நாடுகடத்தினார்கள்.

இந்த நாடுகடத்தல் செய்தியை இந்தியாவில் கொச்சியில் இருந்து கேள்வியுற்ற ஜோசவ் வாஸ் அடிகளார், 1687 இல் இலங்கைக்குப் புறப்பட்டு வந்தார். யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி ஆகிய இடங்களில் குருத்துவப் பணியாற்றினார். தியான சம்பிரதாயச் சபையைச் சேர்ந்த ஜோசவ் வாஸ் அடிகளாரைத் தொடர்ந்து, அருட்தந்தை அந்தோனியோ அடிகளார் கொச்சியில் இருந்து இலங்கை வந்தார். தற்போதுள்ள பிலிப்நேரியார் ஆலையத்தின் பின்புறத்தில் (மலிபன் வீதி) மீனவர்களின் வாடி போன்று சிறுகுடிசை அமைத்து தங்கியிருந்து, கொழும்பை அண்டிய பகுதிகளில் தமது குருத்துவப் பணிகளை நிறைவேற்றினார்.

இவ்வட்டாரத்தில் ஒல்லாந்தரின் செல்வாக்கு அதிகரித் திருந்தது. இதனால் அந்தோனியோ அடிகளாரின் இறைபணியை' இலகுவில் அறிந்து கொண்டார்கள். தருணம்பார்த்து அடிகளாரைக் கைது செய்வதற்கு ஒல்லாந்தர் படை வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தனர். இதை முன்கூட்டியே அறிந்துவிட்ட அடிகளார் அங்கிருந்து தப்பித்து, ரெக்கிளமேசன் வீதியூடாக முகத்துவாரத்தை நோக்கி விரைந்தார். இவ்வழியில் மீனவர்கள் அதிகமானோர் வாழ்ந்தனர். இந்நேரத்தில் கடலலைகள் பலமாக மேலெழுந்து கரையுடன் மல்லுக்கட்டின. மீனவர்கள் உலர வைத்திருந்த மீன்பிடி வலைகளையும் நனைத்து ஒருகை பார்த்தன. கடலின் சீற்றத்தைக் கண்டுபயந்த மீனவர்கள், அவ்வழியே விரைந்த அந்தோனியோ அடிகளாரிடம் கடல் கொந்தளிப்பிலிருந்தும் கடல் அரிப்பில் இருந்தும் காப்பாற்ற செபிக்குமாறு வேண்டினார்கள். மீனவர்களின் வேண்டுதலை ஒல்லாந்துப் படைகள் ஒட்டுக்கேட்டு, குருவானவரின் ஜெபம் பலிக்காது போகும் போது மீனவர்களே குருவை அடித்து விரட்டுவார்கள் என சிந்தித்து, மறைந்திருந்து நடப்பவற்றை அவதானித்தனர்.

அருட்தந்தை அந்தோனியோ அடிகளார் தனது குருவுக்குரிய ஆடையை அணிந்துகொண்டு, ஒரு மரச்சிலுவையை கையில் ஏந்தியபடி, கொந்தளிக்கும் கடலலையை ஊடறுத்து நடந்தார். ஓரிடத்தில் நின்றுகொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டார். என்ன ஆச்சரியம்! ஆக்ரோசத்துடன் ஆர்ப்பரித்த கடலலைகள் அடங்கிப் பின்வாங்கின. குருக்கள் நின்றிருந்த இடம்வரை மணற்திட்டு உருவானது. அவ்விடத்தில் சிலுவையை ஊன்றினார். உடனே மக்கள் பக்திப்பரவசடைந்து அவரண்டை ஓடி வந்தனர். ஒல்லாந்துப் படை வீரர்களோ அதிர்ச்சியில் உறைந்தனர். எக்காரணத்தைக் கொண்டும் குருவானவரைக் கைது செய்யக் கூடாது எனக் கூச்சலிட்டனர். நடந்த அற்புதங்களை உடனடியாகப் படைவீரர்கள் ஆளுநருக்கு அறிவித்தார்கள்.


ஆளுநரும் பயபக்தியுடன் கடல்பின்வாங்கி உருவான புதிய நிலத்தை குருவானவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். குருவானவர் அதில் ஒரு சிறுகடையை உருவாக்கினார். காலையிலும் மதியத்திலும் மீன்பிடித்தொழிலாளர்களின் உணவகமாகவும், இரவில் இறைபோதனைகள் நடைபெறும் செப ஆலையமாகவும் அது திகழ்ந்தது. கொச்சி நகரில் இருந்து வந்த குருவானவர் கடை வைத்தபடியால் அந்த இடம் கொச்சிக்கடை என இடப்பெயர் உருவானது. இக்கடை சிறிது சிறிதாக சிற்றாலயமாக உருவானது. அருட்தந்தை அந்தோனியோ அடிகளார் இறந்த பின்னர், அவரின் திருவுடல் செப ஆலயத்தில் புதைக்கப்பட்டது. இக்கல்லறையை பீடத்திற்கருகில் இன்றும் காணலாம்.


1790 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, காணி உறுதியின் பெயர் மாற்றப்பட்டு ஆலயத்திற்கு உரித்தாக்கப் பட்டது. டபிள்யூ. யூவானிஸ் அப்பு, ரி.ஜெரோனிஸ் அப்பு ஆகியோரின் பெயர்களுக்கு உரித்தானதாக டச்சு மொழியில் இந்த உறுதி எழுதப்பட்டிருந்தது. எனவே இதை வாசித்து விளங்கிக்கொள்ள முடியாத காரணத்தால், பேராயர் மெலிகன் ஆண்டகையின் வேண்டுகோளின்படி, ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்யப்பட்டது.

1802 ஆம் ஆண்டில் ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

1806 இல் ஆங்கிலேயர் ஆட்சி, மக்கள் தாம் விரும்பிய மத அனுட்டானங்களைக் கடைப்படிக்க அனுமதி வழங்கியது. இதன் மூலம் கத்தோலிக்கர்கள் மீளஒருங்கிணைந்து இறை முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.

1826 இல் ஆலையத்தை புதுப்பிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, 1828 முடிவடைந்து, புனித அந்தோனியாருக்கு ஆலையம் அர்ப்பணிக்கப்பட்டது. இராணுவ அதிகாரிகள், அரச ஊழியர்கள் உட்பட இன, மத பேதமில்லாமல் மக்கள் ஆலயத்திற்கு வருகைதர ஆரம்பித்தார்கள். 1834 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருமுதல்வர் அருட்தந்தை கைத்தான் அந்தோனியோ அடிகளாரால் புதிய அந்தோனியார் திருச்சொரூபம் அபிஷேகம் செய்யப்பட்டது. திருப்பண்டமும் (புனித அந்தோனியாரின் நாக்கினுடைய சிறுபகுதி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கண்ணாடிப் பேழைக்குள் பாதுகாக்கப்பட்டு, அந்தோனியாரின் சொரூபத்துடன் வைக்கப்பட்டது. (திருப்பண்டம் என்றால் புனிதர் ஒருவர் பயன்படுத்திய பொருள் அல்லது அவருடைய உடலின் ஒரு பகுதியாகும்.)

இக்கால கட்டத்தில் புனித அந்தோனியார் ஆலையம் கொட்டாஞ்சேனை, புனித லூசியாஸ் பேராலயத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. எனவே மூப்பனார், அண்ணாவியார் ஆகியோரின் பணி ஆலையத்தில் முக்கிய பங்கை வகித்தது. அண்ணாவியார் செபவழிபாடுகள் நடத்துவதிலும் மூப்பனார் ஆலைய விழாக்களை ஏற்பாடு செய்வதிலும் பொறுப்புகளை வகித்தனர்.

1882 இல் மன்ன முதலியாரும் வேறு சிலரும் சேர்ந்து இந்தியாவிலுள்ள கோவாவுக்குச் சென்று, அந்தோனியார் திருச்சொரூபம் பெற்று வந்தார்கள். இந்த திருச்சொரூபம் அருட்திரு அந்தோனியோ அடிகளார் மரச்சிலுவையை ஊன்றிய இடத்தில் வைக்கப்பட்டது. புதுமை மிக்க இந்த திருச்சொரூபமே அண்டி வந்தோரை அரவணைத்து, கோடி அற்புதங்கள், புரிந்து பக்தர்களின் துயர் தீர்க்கின்றது.

1892 ஆம் ஆண்டு கொழும்பு மறை மாவட்டத்தின் முதலாவது பேராயர் அதிவணக்கத்துக்குரிய கிறிஸ்தோபர் பொன்ஜின் ஆண்டகையின் பூதவுடல் பீடத்திற்கருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1912 ஆம் ஆண்டு இலங்கையின் காலனித்துவ நிர்வாக அதிகாரியாக இருந்த சேர் ஹேன்றி ஆதர் பிளேக், துறைமுக புகையிரத பாதையை அமைக்கும் நோக்கத்துடன் புனித அந்தோனியார் ஆலையத்தை நிர்மூலமாக்க திட்டமிட்டார். கத்தோலிக்க மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புகள் எழ இதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது குறித்து அலசி ஆராய்ந்த குழு, ஆலயத்தை நிர்மூலமாக்க முடியாது என்று சிபார்சு செய்து, அதற்கான மூன்று காரணங்களையும் முன் வைத்தது. முதலாவது; புனித அந்தோனியார் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்திற்கு பெயர் போனவர். கொச்சிக்கடை அந்தோனியார் ஆலையமும் அவ்வாறே; இரண்டாவது;





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பெருமளவில் பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். மூன்றாவது; இங்கு கிடைக்கும் பணம், ஆயர் இல்லங்களினூடாக ஏழைச் சிறுவர்களின் பராமரிப்புக்கும் கல்விக்கும் உதவுகிறது. இதனால் திருத்தலம் அப்படியே இருக்கத்தக்கதாக, புகையிரத பாதை ஆலையத்தின் பின்புறமாக அமைக்கப்பட்டது.

1936 இல் புனித சூசையப்பர் கல்லூரியில் களியாட்ட கண்காட்சியும் காணிவேலும் நடாத்தப்பட்டு சேகரிக்கப்பட்ட பணத்தில் பார்வையாளர் கலரியும், இரண்டு பக்க முகப்புகளும், குருவானவர் பணிமனையும் கட்டப்பட்டது. பேராயர் மல்சன் ஆண்டகையினால் 1940 இல் ஆசிர்வதிக்கப்பட்டது.

1951 இல் புதிய பீடம் கொழும்பு பேராயர் கருதினால் தோமஸ் குரே ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டது.

1965 முதல், திருச் சொருப பவனியின் போது தோளில் சுமந்து செல்லும்நடைமுறையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, வாகனத்தில் வைத்துக் கொண்டு செல்லும் முறை ஆரம்பமானது.

1986 இல் அரசாங்கத்தினால் துண்டுக்காணி ஆலயத்திற்கு வழங்கப்பட்டு, அதில் இரண்டு மாடிக் கட்டடம் கட்டப்பட்டது.

1989 ஆம் ஆண்டில் அற்புத அந்தோனியாரின் திருச்சொரூபத்தின் மரத்தினாலான கூடு அகற்றப்பட்டு பளிங்குக் கற்களினாலான கூடு அமைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டில் தேசிய திருத்தலமாக பிரகடனப்படுத்தப் பட்டது. மும்மொழிகளிலுமான வழிபாட்டு முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. அத்துடன் முதலாவது நிர்வாக குருவாக அருட்தந்தை சுனில் குமார் அடிகளார் நியமிக்கப்பட்டார்.

குண்டுதுளைக்க முடியாத கண்ணாடியினால் திருச்சொரூபம் பாதுகாக்கப்படுகின்றது. திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இலங்கை வந்திருந்த போது அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டிருந்தார்.

மேலும் இத்திருத்தலத்தின் 175 ஆவது ஜூபிலியை ஒட்டி புனித அந்தோனியாரின் திருப்பண்டம் கடந்த பங்குனி மாதம் பாதுவையிலிருந்து கொண்டுவரப்பட்டது. பெருந்தொகையான மக்கள் பக்திப்பரவசத்துடன் புனிதரின் திருப்பண்டத்தைத் தரிசித்து புனித அந்தோனியாரின் புதுமைகள் மற்றும் மறையுரைகள் பற்றி தெரிந்து கொண்டார்கள்.

**புனித அந்தோனியாரின் வரலாறு**

கி.பி 1195 ஆண்டு போர்த்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் பெர்டினன்ட் மாட்டினஸ் டிபக்ளிபோன் பிறந்தார். சிறுவயதிலிருந்தே இறைவன் மீது மிகுந்த பற்றுக் கொண்டு செபதவத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். 15 ஆவது வயதில் அகஸ்தினார் துறவற சபையில் இணைந்தார். அங்கு அவரது நண்பர்கள் அடிக்கடி தோந்தரவு செய்ததால், தன்னை இடமாற்றம் செய்யும்படி அதிபரை வேண்டிக் கொண்டார். அதன்படி கொயின்புரோவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர், தனது 25 ஆவது வயதில் குருப்பட்டம் பெற்றார்.

பிரான்ஸ்கன் துறவற சபையில் இணைந்து, கிறிஸ்துவின் வேதசாட்சியாக மாறி, தனது பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார். மொரோக்கோ நகர் சென்று தனது போதனையின் மூலம் கலகக்காரர்கள் பலரது மனக்கண்களை திறக்கச் செய்தார். மொரோக்கோவில் இவரைக் கடுமையான காய்ச்சல் பீடித்தது. 1231 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி தனது 36 ஆவது வயதில் இறைபதம் எய்தினார். ''நான் எனது ஆண்டவரைக் காண்கின்றேன்'' என்பதுதான் இவரது இறுதி வார்த்தையாக இருந்தது. இவர் இறந்து ஒரு வருடத்திற்கு உள்ளேயே புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கத்தோலிக்க திருச்சபையில் மிகவிரைவாக திருநிலைப்படுத்தப் பட்டவர் இவரேயாவர். 1946 இல் திருச்சபையின் மறைவல்லுநர் பட்டம் (வேதபாரகர்) இவருக்கு வழங்கப்பட்டது.

1263 இல் பொனவெஞ்சர் இவரது கல்லறையைத் தோண்டிய போது அங்கே இவரது எலும்புக் கூடும் இதயமும் நாக்கும் அழியாமல் காணப்பட்டன.இவை இன்றுவரை பாதுகாப்பாக கண்ணாடிப் பெட்டிக்குள் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**அருட் சகோதரர் ஆர். ஜோசப் ஜெயகாந்தன்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரையில் முகம் பதித்த தமிழறிஞர்கள்

மிகச் சிறிய வண்ணப்படங்களான முத்திரைகள் பல பயனுள்ள தகவல்களைத் தம்முள் புதைத்து வைத்துள்ளன. இங்கே தமிழின் தொல்சீர்மைக்கும், அதன் வளர்ச்சிக்கும், சமயத்திற்கும் பல்வேறு வகைகளில் பெரும் பங்காற்றிய இலங்கை தமிழ்பேசும் அறிஞர்களை கௌரவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட முத்திரை களையும் அறிஞர்கள் பற்றிய சில குறிப்புகளையும் இங்கே தருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் 1832 ஆம் ஆண்டில் சி. வை. தாமோதரம்பிள்ளை பிறந்தார். 1853 ஆம் ஆண்டில் 'நீதிநெறி விளக்கம்'' என்னும் நூலினைப் பதிப்பித்து வெளியிட்டு 'தமிழ்ப் பதிப்புத்துறை முன்னோடி' எனும் பெருமை பெற்றார். சென்னை அரசினர் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகவும் நியமிக்கப்பட்டார். 1895 ஆம் ஆண்டில் அரசினால் 'ராவ் பகதூர்' பட்டமளித்துப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது. இவரது கடும் உழைப்பினால் தொல்காப்பியப் பொருளதிகாரம் உட்பட பத்து பண்டைக்கால இலக்கிய நூல்களைப் பதிப்பித்துள்ளதுடன், ஒன்பது நூல்களை இயற்றியுள்ளார். அவர் தமது 61 ஆவது வயதில், 1901 ஆம் ஆண்டு, ஜனவரி, 01 திகதி, சென்னை, புரசை வாக்கத்தில் மறைந்தார்.

திருக்குறள், திருக்கோவையார், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துத் தமிழுக்கும், சைவத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் ஆறுமுகநாவலர். நல்லூரில், டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி 1822 ஆம் ஆண்டில் பிறந்தார். சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கிய நாவலர், வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பாடசாலையை ஆரம்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். 1879 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 05 ஆம் திகதி இரவு இவ்வுலகை விட்டு மறைந்தார்.




சேர் பொன்னம்பலம் இராமநாதன் சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞரானார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவிவகித்து 1906 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். 1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் இந்துக்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இரண்டு பாடசாலைகளை நிறுவியுள்ளார். இவற்றில் பெண்கள் பாடசாலையான உடுவில் இராமநாதன் பெண்கள் கல்லூரியும் ஆண்கள் பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரியும் முக்கியமானவை. கீழைத்தேய மெய்யியல் தூதுவராக 1905 - 1906 இலே அமெரிக்கா சென்று சொற்பொழிவுகளாற்றிப் பேரெடுத்தார். 1923 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தோன்றுவதற்குக் காலாக இருந்ததோடு அதன் முதற் தலைவராகவும் சேவை செய்தார்.

சுவாமி விபுலாநந்தர் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 27-03-1892 பிறந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே. 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். 1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலாநந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்றார். 1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த்துறையின் முதலாவது பேராசிரியராக




Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்தார். திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில், 1947 ஆம் ஆண்டு ஆனி மாதம் யாழ் நூலை அரங்கேற்றினார். 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19 ஆம் நாள் சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார்.

1833 ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி பருத்தித்துறையில் சேர் முத்து குமாரசுவாமி பிறந்தார். சைவசித்தாந்தத்தினை முதன் முதலில் ஆங்கிலேயருக்கு விளக்கினார். இவரது ஆங்கில மொழிப் பேச்சுத் திறனுக்கும் நடிப்புக் கலைக்குமாக விக்டோரியா மகாராணியாரால் சேர் பட்டம் வழங்கப்பட்டது. ஆசியாவிலேயே முதன் முதல் 'சேர்' பட்டம் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர் சேர் முத்துக்குமாரசுவாமி. சேர் முத்துக் குமாரசுவாமி இலண்டனில் உள்ள கலைக் கூடங்களில் தொடர்ச்சியாகச் 'சைவ சித்தாந்தம்' பற்றியும் 'இந்தியத் தத்துவம்' பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றினார். 1879 ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் திகதி இவர் மரணமானார்.

1911 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நாலாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஏ. எம். ஏ. அஸீஸ் பிறந்தார். இலங்கையில் முதல் முஸ்லிம் சிவில் சேவையாளரான இவர் பிறகு ஸாஹிரா கல்லூரியின் அதிபரானார். 'அரபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்'' என்ற மொழிக் கோட்பாட்டினூடாக முஸ்லிம் சமுதாயத்தின் மொழிவளத் தேசியத்தை நிறுவவேண்டுமென வலியுறுத்தி வந்தார். இக் கருத்தை 1970 களில் சென்னை நகரில் நடந்த சர்வதேச இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டிலும் முன்வைத்தார்.

மட்டுவிலில் 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ஆம் திகதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பிறந்தார். திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் 1929 ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராக இருந்தார். 30 வருடங்கள் சைவாசிரியப் பணியை தொடர்ந்து செய்தார். இவர் எழுதிய கந்தபுராண தக்ஷண காண்ட உரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் யானைமேல் வைத்து ஊர்வலமாக எடுத்து சென்ற சிறப்பும் பெற்றது. சைவசமயம், தமிழிலக்கியம், மெய்யியல், தமிழர் பண்பாடு ஆகிய துறைகளில் இவர் ஆற்றிய உரைகளும், எழுதிய கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு 23 நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகம் 'இலக்கிய கலாநிதி' பட்டத்தை வழங்கி கௌரவித்தது. தமிழ், சைவம் இரண்டையும் இரு கண்களாக போற்றிய பண்டிதமணி 86 ஆண்டுகள் பிரமச்சரியாக வாழ்ந்து, 1986 ஆண்டு பங்குனி மாதம் 13 திகதி இறைவனடி சேர்ந்தார்.

1875 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி மானிப்பாய் ஊரில் சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்தார். ஞானப்பிரகாசருக்கு 5 வயதிருக்கும்போது அவருடைய தந்தையார் இறந்துவிட்டார். அதன் பின்பு அவருடைய தாயார் அச்சுவேலியிலிருந்த தம்பிமுத்து என்ற கத்தோலிக்கரை மறுமணம் செய்து கொள்வதற்காக அம்மதத்திற்கு சேர்ந்த பொழுது அவருடைய மகனும் கத்தோலிக்க மதத்தில் சேர்க்கப்பட்டார். 1901ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி அவர் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பிறந்த ஊராகிய மானிப்பாயில் அவர் கட்டுவித்திருந்த கோவில் முப்பத்தேழாவது கோவிலாகும். எழுபத்திரண்டு மொழிகளை அவர் அறிந்திருந்தார். யாழ்ப்பாணச் சரித்திரத்தை விஞ்ஞான முறைப்படி முதல்முதலாக எழுதியவர் ஞானப்பிரகாசரே. சொற்பிறப்பு ஒப்பியல் என்னும் அகராதியில் ஆறு பாகங்களை வெளியிட்டிருந்தார். எஞ்சிய 14 பாகங்களையும் கையெழுத்துப் பிரதிகளாக வைத்திருந்தார். அவற்றை வெளியிடுவதற்கு முன்பு, 1947 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி மானிப்பாய் மருத்துவ மனையில் 72 ஆவது வயதில் மரணமானார். ஜேர்மனி அரசு, சுவாமி ஞானப்பிரகாசரின் பெருமையை உணர்ந்து மதித்து 1939 ஆம் ஆண்டில் ஒரு முத்திரையை வெளியிட்டு கௌரவித்தது. இலங்கை அரசாங்கம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி முத்திரையை வெளியிட்டு கௌரவித்தது.

இவ்வாறு இலங்கையில் தமிழ், சமய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய தமிழறிஞர்களின் வரலாறு, குடும்பம், சாதனைகள் போன்ற பல்வேறு சுவையான அம்சங்களை நாம் தொடர்ந்து கலைக்கேசரியில் பிரசுரிக்க எண்ணியுள்ளோம்.



**முத்திரை உதவி : Rajiv Walpita**

**-மிருனாளினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கான இருப்பு

உனக்கான
உனக்கேயான
இருப்பும் இடமும்
ஒளியூட்டப்படாமல் இருக்கிறது !

உன்
பிரிவினூடான
ஒவ்வொரு பயணங்களிலும்
அழத்துடித்து
அடங்கிப்போகும்
என்
மனதையும் மையங்களையும் ...

உன்
களிப்புகளுக்கிடையில்
உறைந்து ஊனமாகும்
என்
எதிர்பார்ப்புகளையும்
ஏக்கங்களையும் ...

உன்
மென்மொழிகளில்
மௌனம் காக்கும்
என்
ஊமை நினைவுகளின்
அடையாளங்களையும்
ஆத்மார்த்தங்களையும் ...

தவிர்க்கவே எண்ணி
தருணம் பார்த்து
தவறாமல் காத்து நின்ற
பொழுதுகளையும்
இருத்தலையும் ...

இமைக்கூடங்களில்
சிறையிருக்கும்
கடைசிப் பார்வையையும்
உணர்பாசத்தையும் ...

வார்த்தை கோர்த்து
எழுதித் திரித்து
உனக்கான என் இருப்பில்
வைத்திருக்கிறேன் !

தனியறையில்
தவம்கிடக்கின்றன
என் கவிதைகள்
காலத்தோடான அத்தனை
நினைவுகளையும்
ஏந்திச் சுமந்தபடி !

ஒன்றும் வேண்டாம்
உன்
கண்களின் வெளிச்சம் கொடு !

அந்த இருட்டறையில்
நீள் வெளியாய் நிறைந்திருக்கும்
வெண்காகிதங்களில்
உன்
பெயர்மட்டும் ஜொலிக்கப்பார்க்க
ஆசை எனக்கு !

- இராமானுஜம் நிர்ஷன்

## செம்மொழியெனும் செங்கம்பள மாநாடு

மொழிகளில் முதல்வியாய்
கலைகளில் சகலகலா வல்லியாய்
சரித்திரம் படைத்திடும்
உனக்கு

ஆயிரம் அடைமொழிகள்
அழகழகாய்
அதுவும்
அணிகலன்களாய்

அதனாலோ என்னவோ
எம்மொழிக்குமில்லா
பெருமை
உனக்கு மட்டும்

செம்மையும் செழுமையும்
கொண்ட தாயே
இப்பொழுது
செம்மொழியெனும் ஒரு
செங்கம்பள மாநாடு
உன்
செல்லக் குழந்தைகளால்
உனக்காக

உன்
கருவறையில்
ஒவ்வொரு நாளும்
கலைக் குழந்தைகள்
உருவாகட்டும்
உலகெங்கும்
உன்புகழ்பாட

- எம்.நேசமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய கலை, கலாச்சார நிகழ்வுகள்

## கொழும்பு

**கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகள்**

**ஜூன் 05** மாலை 5.00 மணி ஆலாபனா இசை நிகழ்ச்சி
**ஜூன் 12** மாலை 6.00 மணி வாக்கியகாரர் வரிசை இசை நிகழ்ச்சி
**ஜூன் 19** மாலை 6.00 மணி நூல் வெளியீடு
**ஜூன் 25** மாலை 6.00 மணி அற்றைத் திங்கள்

## ஐரோப்பா

**ஜூன் 2 இல் இருந்து ஜூலை 10 வரை (2010)**
பரத நாட்டிய விற்பன்னரான ரமா வைத்தியநாதன் தன் சொந்த பக்க வாத்ய கலைஞர்களுடன் ஐரோப்பாவில் நிகழ்ச்சிகள் நடத்த சுற்றுப் பயணம்.

## கனடா

**ஜூன் - 4**
பரதநாட்டிய விற்பன்னரான அனிதா ரத்தினத்தின் விசேட நடன நிகழ்ச்சி.
இடம் Signy and Cleophee Eaton Theatre Royal Outario Museum, Toronto.
Info: arangham@gmail.com www.arangham.com

**ஜூன் - 8**
கனடா நடன விழாவில் கிருத்திகா ரத்னஸ்வாமி மற்றும் சுஜித் வைத்யா (மண்டலா ஆர்ட்ஸ் அன்ட் கல்ச்சர்) பி. ப. 2 மணிக்கு Arts Courts Theatre இல் பரத நாட்டிய விருந்தளிப்பார்.

## லண்டன்

**ஜூன் - 12, 13**
கதக் நடன வித்தகர் ஜய்லல்ஜி நினைவாக லண்டனில் முதன் முறையாக கதக் நடன விழா.
இதில் 20 பிரபல கதக் கலைஞர்கள் பங்கு கொள்வார்கள்.

## சிங்கப்பூர்

**ஜூன் - 9**
அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் கலைஞர்களுக்கிடையேயான கலாசார நடன நிகழ்வு.
Esplanade Theatre Studio பி. ப. 8 மணி (பி. ப. 3 மணி,
டிக்கெட்டுகள் : SISTIC (65) 63485555 Email: info@mayadancetheatre.org

**ஜூன் - 20**
கொன்கோட் CA சுகந்தா ஸ்ரீநாத் ஜயந்திரா கலாஷேத்ரா அரங்கேற்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சி.
இடம் : சிவமுருகன் ஆலயம், 1819.
2nd st. concord, 12 noon to 1 p. m. info: sugadaiyer@comcast.net

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள எழுத்தாளர்கள், மற்றும் கலை, இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து இலக்கியம், கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு ஆகியன குறித்த கட்டுரைகளையும், தகவல்களையும் அதனோடு தொடர்புடைய தெளிவான படங்களையும் எதிர்பார்க்கிறோம்.

- **ஆசிரியர்**

EDITOR, KALAIKESARI
NO.185, GRANDPASS ROAD, COLOMBO -14, SRILANKA.
email:- editor@kalaikesari.com/subscription@kalaikesari.com


Plaan It Tourist Hotels
(Approved by Ceylon Tourist Board)
24 மணிநேர சேவை
சகல வசதிகயுடன் கூடிய திருமண மண்டபம்
(A/C, Non A/C) அறைகள்
தொலைக்காட்சி மற்றும் மூன்று நேர உணவு வசதி
PUB-D.J- பீல்யட், பியர் கார்டன், வாகன தரிப்பிட வசதி
181-1A, Hekitta Road,Wattala.

Tele: +94 114588078 Fax: 011 2941442 Mobile: 0777 292412, 0777 292090, 077 3108250.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே. வி. எஸ் வாஸ் அவர்களின் ஏக புதல்வனும் கதம்பம் சஞ்சிகையின் ஆசிரியருமான கே. வி. எஸ். மோகன்அவர்களின் 70 ஆவது பிறந்த தின வைபவம் 30. 05. 2010 அன்று ஞாயிற்றுக்கிழமை, திருமதி. ஹரிப்பிரியா மோகன், பிள்ளைகளான கோகுல் மற்றும் ஷோபா ஆகியோரின் ஏற்பாட்டில், கொழும்பு சினமன் கிராண்ட் கொட்டலில் சிறப்பாக நடைபெற்றபோது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















ஜேர்மனி டியூஸ்போர் நகரிலிருந்து வெளிவரும் ''மண்'' கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழாவும் சிறுவர் கலை விழாவும் ஜேர்மனி டியூஸ்போர் நகரில் நடைபெற்றபோது...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை உச்சியில் வாழும் தெய்வங்கள்

# இமயம் போல் ஒலிம்பஸ்

மிக உயர்ந்த இடங்களில் தெய்வங்கள் உறைகின்றன என்ற நம்பிக்கை, மனிதகுல வரலாற்றில் மிக பழைமையான ஒன்றாகும். இயற்கையே இறைவன் என நம்பியே ஆதிகால மனிதன், தான் இலகுவில் அடைந்துவிட முடியாத மிக உயரமான இடங்களை புனிதமானவை எனக் கருதி வணங்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். புராணக் கதைகளும் இதன் அடிப்படையிலேயே மலைகளைச் சார்ந்தவையாக இருக்கின்றன.

இந்த நம்பிக்கை இயற்கையின் அற்புத படைப்பான மிக உயர்ந்த மலைகளின் அடைய முடியாத அந்த உச்சிகளில் தெய்வங்கள் வாழ்கின்றன என்ற கோட்பாட்டை வலுவுள்ள தாக்கி இருக்கிறது. புராதன கிரேக்கர் மற்றும் உரோமர் காலத்தில் இருந்தே மலை உச்சிகளை புனித இடங்கள் என வணங்கும் வழக்கம் இருந்து வந்தள்ளது.

இவ் வகையில் கிரேக்கத்தில் உள்ள ஒலிம்பஸ், கடவுள் உறையும் இடமாக வணங்கப்பட்டு வந்துள்ளது. இதைப் போலவே பாரதத்தில் இமயமலையும், எவரெஸ்ட் சிகரமும் புனித ஸ்தலங்களாகப் போற்றப்படுகின்றன. இமாலயம் இந்துக் கடவுளான சிவபெருமான் உறையும் இடம் என இந்துக்களால் போற்றப்படுகின்றது.

இவ்விதமே இலங்கையில் சிவனொளிபாத மலை புனித இடமாக வணங்கிப் போற்றப்படுவதை நாமறிவோம். இவ் உயர்ந்த இடங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்ற பல்வேறு புராணக் கதைகள் வழக்கத்தில் உள்ளன. தத்தம் நாட்டு பிரசித்தி பெற்ற மலைகளின் கம்பீரத்தையும் புனிதத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் அந்தந்த நாட்டுப் புலவர்களும் தமது கவிதைகளில் போற்றுகிறார்கள். ''மன்னும் இமயமலை எங்கள் மலையே!'' என்று பாரதி போற்றியதும் இத்தகையதே. இந்த வகையில் கிரேக்கத்தின் பெயர் பெற்ற ஒலிம்பஸ் மலையும் குறிப்பிடத்தக்கது. ஆதிகாலந்தொட்டு கடவுளர்கள் வாழும் புனித மலையென இம்மலை வணங்கப் பட்டு வருகின்றது. அத்துடன் ஸியஸ் தெய்வத்தின் (Zeus) சிம்மாசனமும் அவ்விடத்தில் இருப்பதாக நம்பப்படுகின்றது.


கிறிஸ்துவுக்கு முன் 700 ஆம் ஆண்டில் ஹோமர் என்ற பேரறிஞர் எழுதிய இலியட் மற்றும் ஒடிஸி ஆகிய புராதன காவியங்களில் இந்த சுவர்க்க மலை எங்குள்ளது என்பது குறித்து மிகச் சிறியதோர் குறிப்பையே தந்திருக்கின்றார். கிரேக்கம், துருக்கி மற்றும் சைப்பிரஸ் நாடுகளில் சில மலைகள் ஒலிம்பஸ் என்ற பெயரைக் கொண்டு விளங்குகின்றன. பின்னர் குறிப்பிட்ட ஒரு மலை உச்சியுடன் தொடர்புபட்டு ஓர் இலட்சிய மலையாக விளங்குகின்றது.

கிரீஸின் மலைத் தொடர்களில் மிகவும் உயரமான மலையாக விளங்கும் ஒலிம்பஸ் (2919 மீட்டர்கள் - 9570 அடிகள்) ஆகும். இம்மலை வடக்கு கிரீஸில் உள்ள தெஸலோனிகி என்ற நகருக்கு தென்கிழக்காக நூறு கிலோ மீட்டர்களுக்கு அப்பால் காணப்படுகின்றது. பூமியில் இருந்து மிகவும் உயரமாகவும் அதேவேளை புதிராகவும் இப்பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த மலையில் அரச கடவுளான ஸியஸ், அவரது துணைவியான ஹெரா, அவரது சகோதரர்களான பொஸிடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஹேடெஸ், அவரது சகோதரியான டெமெற்றர் மற்றும் ஹெஸ்ரினா அவரது பிள்ளைகளான அப்பலோ, அர்டிமிஸ், ஏரெஸ், அப்றோடிற், அதெனா, ஹேர்மெஸ், ஹெபஸ்ரஸ் ஆகிய தெய்வங்கள் உறைந்திருப்பதாகவும் புராதன கிரேக்க மக்களால் நம்பப்பட்டது. இவர்கள் ஒலிம்பியன்கள் என அழைக்கப்பட்டனர்.

இந்த ஒலிம்பியன் கடவுள்கள், பல்வேறு முகம் கொண்ட மனித அமானுஷ்ய சக்தியின் இலட்சிய நோக்கு அம்சங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிமைகளாக பண்டைக் காலத்தில் விளங்கிக் கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கடவுள்களை வணங்குவதானது, அந்த அம்சங்களை வணங்கும் மனிதனது நடவடிக்கையிலும் ஆளுமையிலும் ஓர் ஊக்கத்தையும் சக்தியையும் ஏற்படுத்தும் ஒரு வழி என நம்பப்பட்டது.

ஒலிம்பஸ் மலையில் உறையும் கடவுளர்கள் பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

உள்ளம் மற்றும் புத்தி சாதுரியத்தின் கடவுளாக விளங்கும் ஸியஸ், புதியவர்களிடமிருந்து காப்பவராக விளங்குகிறார். ஹெரா தாய்மை மற்றும் பெண்ணின் திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையின் தெய்வமாக விளங்குகிறார். சட்டம், ஒழுங்கு மற்றும் ஆன்மீக, சமூக, புத்திபூர்வ விடயங்களில் மிதவாத கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக அப்போலோ விளங்குகிறார்.

அப்றோடிர் ற்(வீனஸ்) காதல் தெய்வமாகும். அதி தீவிரமான ஆசைகள், மனிதர்களை ஒழுக்கவீனமாக நடக்கத் தூண்டுகின்றன. பிரயாணிகள், தூக்கம், கனவு எதிர்வு கூறல் ஆகியவற்றின் கடவுளாக ஹேர்மெஸ் விளங்குகிறார். ஆன்மீக அறிவின் தெய்வமாக அதென்னாவும். கலை மற்றும் நெருப்பின் தெய்வமாக ஹெபாரஸும், ஏரெஸ், இருள் மற்றும் மனித குணத்தில் தோன்றும் கொடூரங்களை பிரதிபலிப்பவராக விளங்குகிறார்.

உண்மையில் இக் கடவுள்கள், ஒலிம்பஸ் மலையில் வாழவில்லை. ஆனால் இப்பண்டைய புராணவரலாறு இந்தப் புனித மலையின் சக்திக்கு ஒரு குறியீடு என விளங்கிக் கொள்ள முடியும்.

பருவ காலங்கள் என்னும் பெண் தெய்வங்களால் பேணப்படும் முகில், நுழைவாயில் தெய்வங்கள் பூமிக்கு வர எண்ணும்போது திறந்து வழி விடுகின்றன. அவர்கள் திரும்பி வரும்போது வரவேற்கின்றன.

ஒலிம்பஸ் அரச மாளிகை மகா மண்டபத்தில் தினமும் விருந்து நடக்கிறது. அங்கு அமுதபானம் (Nectar) வழங்கப் படுகிறது. இந்த இனிய பானம், புளித்ததேன் மற்றும் அம்ப்றோஸியா கொண்டு தயாரிக்கப்படுகிறது. இதில் சமைக்கப்படாத தேன் கலவை, தண்ணீர், பழம், ஒலிவ் எண்ணெய், வெண்ணெய், பார்லி ஆகியவை கலந்திருக்கும். இவர்களுக்கு ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி ஆகியவற்றின் சமையல் வாசனை விருப்பம். ஆனால் ருசி விருப்பமில்லை. எனவே மனிதர்கள் அவற்றினை கடவுளருக்கு படைத்து பின், தாம் உண்கின்றனர்.

ஒலிம்பஸ் கடவுள்களும் மனிதர்களைப் போலவே வாழ்கின்றனர். சட்ட திட்டங்களுக்கு பணிகின்றனர். ஸியஸ் மாளிகையில் சிறு சிறு கூட்டங்களுக்காக அழைக்கும்போது வந்து கூடுகின்றனர். அவ்வேளை அவர்கள் எல்லோரும் பேசிக்களிக்கின்றனர். உணவுண்டு ஆடல், பாடல் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அதேவேளை உலகினதும் உலக ஜீவராசிகளினதும் விதி குறித்தும் தீர்மானிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இக்கடவுளர்க்கு வைத்தியர்கள், பணியாளர்கள், போதனையாளர்கள், வாயில்காப்போர் எனப் பலாது சேவையும் கிடைக்கின்றது. ஒலிம்பஸ் மலையின் கதவுகளை, வெளி உலகினருக்கு திறப்பதும் முழுவதுமான பணி ஹோரே (Horae) என்பவருக்கு உண்டு. இருப்பினும் கடவுள் ஒருவர் தனது வாக்குறுதியை மீறுவாரானால் ஒன்பது வருடங்களுக்கு அவர் ஒலிம்பஸ் மலைக்கு வெளியே இருக்க வேண்டும். கடவுளரின் கூட்டங்களில் பங்கு கொள்ள முடியாது.

ஒலிம்பஸில் உள் மாளிகையைக் கட்டியவர் சைகோப்ஸ் எனப்படும் மிகப் பெரும் ஒற்றைக் கண் கொண்ட ரிரான்ஸ் (Titans) என்பவராகும். ஸியஸ் இவர்களை ரார்ரஸிடமிருந்து (Tartarus) விடுவித்தார். அதற்கு நன்றியாக அவர் தமது பிரசித்தி பெற்ற தண்டாயுதத்தை வழங்கினார். சிமித்ஸின் ஆற்றலுள்ள கடவுளான ஹெபோஸ்ரஸ் (Hephaestus) ஒலிம்பஸ் மாளிகையின் தளபாடங்கள் மற்றும் கலை வேலைப் பாடுகளைச் செய்தார். அதில் சில கதிரைகளும் மேசைகளும், தாமாகவே தெய்வீக மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் நகர்ந்து செல்லும்படியாகச் செய்து கொடுத்தார்.

ஸியஸ் அரசன் மற்றும் அவரது மனைவி ஹெராவின் தனிப்பட்ட இல்லங்கள், ஒலிம்பஸின் தெற்கு முனையில் இருந்தது. அங்கிருந்து பெயர் பெற்ற கிரேக்க நகரங்களான எதென்ஸ், திபெஸ், ஸ்பார்ட்டா, கொரின்த், அர்கோஸ், மைகனே ஆகியவற்றின் அழகை இரசிக்க முடியும். மாளிகையின் வடக்கு முனையில் சமையலறை, விருந்து மண்டபம், ஆயுத நிலையம், வேலைக் கூடங்கள், பணியாளர் இல்லங்கள் ஆகியன காணப்பட்டன. இம் மாளிகை மணிடோனியாவின் மலைப் பகுதியைப் பார்த்தவாறு இருந்தது. அத்துடன் எல்லாக் கடவுளர்க்கும் தனித்தனி வாழ்விடங்கள் இருந்தன.

''ஒலிம்பஸின் குறுக்கீடற்ற அமைதியை எந்தக் காற்றும் ஒரு போதும் அசைக்கவில்லை. அங்கு மழையோ, பனியோ ஒரு போதும் வீழ்ந்ததில்லை. ஆனால் முகில்களற்ற உறுதிப்பாடு எல்லாப் பக்கமும் சுற்றிவர விரிந்திருந்தது. சூரிய வெளிச்சத்தின் வெள்ளைப் பிரகாசம் அதன் சுவர்களில் குறைந்திருந்தது'' என ஹோமர் கூறுகிறார்.

இம்மலையில் நிலவிய ஆன்மீக சக்தி காரணமாக ஞானிகளும் துறவிகளும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே இங்குள்ள குகைகளிலும் மலைக் காடுகளிலும் விரும்பி வாழ்ந்து வந்துள்ளனர். பின்னர் காலப் போக்கில் பழைய கிரேக்கத்தின் புராணங்கள், இதிகாசங்கள் மறைந்து போயின. புனித மலைக்கு விஜயம் செய்வதும் அரிதாகிவிட்டது. தற்காலத்தில் வார இறுதி மலைப் பயணம் செய்வோரும் இளம் பயணிகளும் ஒரே நாளில் இங்கு வந்து பார்த்து இம் மலையின் கொள்ளை அழகை ரசித்து விட்டுப் போகிறார்கள்.

எனினும் இம்மலையின் உண்மையான மாயாஜாலத்தை அறிய வேண்டுமானால் ஒருவர் ஆகக் குறைந்தது ஒரு மாத காலமாகினும் இக் காடுகளில் தங்கி அந்த அமைதியில் கழிக்க வேண்டும். அந்தப் பழைய ஆண் கடவுள்கள் மற்றும் பெண் கடவுள்களின் சக்தி இப்போதும் அங்கு பலமாக நிலவுகின்றது என்று நம்புவோரும் உள்ளனர்.

1778 ஆம் ஆண்டு இம்மலைக்கு விஜயம் செய்த ஆங்கில கப்பல் பிரயாணியான ஜோன் மியர்ஸ் (Mears) இம்மலை பற்றிக் கூறுகையில், ''கடவுளர்கள் உறையும் இடமாக இது இருக்கின்றதோ இல்லையோ, ஆனால் நிச்சயமாக இது ஓர் அழகான இடமாகும். அதனால் நான் இதனை ஒலிம்பஸ் மலை என்பேன்'' என்றார்.

1700 க்கும் மேற்பட்ட உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவாக மரங்களும் செடிகொடிகளும் நிறைந்த இம்மலையைத் தரிசிக்க உலகின் பல பாகங்களிலும் இருந்து உல்லாசப் பயணிகள் செல்கின்றனர். அவர்கள் தங்குவதற்கேற்ற தங்குமிட வசதிகளும் ஏராளமாக உள்ளன. ஒலிம்பஸ் மலையின் அடிவாரத்தில், அகழ்வாராய்ச்சி, நூதனசாலை மற்றும் பூங்காவும் உள்ளன.

பண்டைய மசிடோனிய மக்களின் புனித மலையாக விளங்கிய இவ்விடத்துக்கு மாவீரன் அலெக்ஸாண்டர், நாடுகளைக் கைப்பற்றும் பொருட்டு போருக்குச் செல்லும் முன் இங்கு சென்று கடவுளர்களுக்கு காணிக்கை செலுத்தி வணங்கிச் செல்வது வழமை என்றும் குறிப்பிடப்படுகிறது.

- கங்கா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் மடல்

## வளர்க கலைக்கேசரி

அன்புக்குரிய ஆசிரியரவர்களுக்கு,
சிவ அன்பு சர்மாவின் வணக்கம்!

கலைக்கேசரி ஏப்ரல் மாத இதழ் கிடைக்கப் பெற்றேன். திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரி விழா, தமிழர் வாழ்வில் சித்திரைப் புத்தாண்டு, தங்கமாக மிளிரும் தம்புள்ள குகைக் கோயில் உட்பட அனைத்துக் கட்டுரைகளும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. எல்லாம் வல்ல திருக்கேதீஸ்வரப் பெருமான் கலைக்கேசரியின் வளர்ச்சிக்கு அருள் புரியட்டும் என வாழ்த்துகிறேன்.

மிகுந்த அன்புடன்
**பி.எஸ். அன்பு சர்மா**
மனிந்தரம் வீதி
மதுரை

***

## கண்ணையும் கருத்தையும் கவரும் சஞ்சிகை

பண்டைத் தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாசாரம், பண்பாடு முதலியவற்றைப் பேணி வளர்க்க வேண்டும். இளம்தலைமுறையினருக்கு அவற்றின் அருமை பெருமைகளை உணர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு வீறு நடை போடும் கலைக்கேசரி,வாசகர்களின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் சஞ்சிகை என்றால் அது மிகையாகாது.

கட்டுரைகளுக்குப் பொருத்தமான கவின்மிகு படங்களுடன் வெளியிடப்படுவது பாராட்டுக்குரியதாகும்.

கலைக்கேசரி தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் வெற்றி நடை போட நெஞ்சார வாயார வாழத்துகிறேன்.

**மாஸ்டர் சிவலிங்கம்**
மட்டக்ககளப்பு

***

## தமிழில் இணையில்லா சஞ்சிகை

கலைக்கேசரி சஞ்சிகையானது 64 கலைகளையும் உள்ளடக்குவது என்பது திண்ணமே. எம்மதமானாலும் சம்மதம் என்பதற்கிணங்க சாதி, மத, இன, குல பேதம் பாராமல் சகலரினதும் கலைகளை வளர்க்கவும், நினைவூட்டவும் செய்வது சாலச்சிறப்பானது. இந்துக்களை மட்டுமன்றி முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என சகல மதத்தினரையும் அது கௌரவிப்பதுடன், பௌத்த மத கலாசாரத்தினையும் மறக்க வில்லை.

எம். எஸ். சுப்புலட்சுமி, எம்.எஸ். வசந்தகுமாரி... இந்த வரிசையில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜபாகவதரும் சேர்க்கப்பட்டுள்ளார். இன்றைய தலைமுறையினருக்கு இவர்களைத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் தெரிய வைத்திருக்கிறது கலைக்கேசரி; மாதம் தோறும் ஒவ்வொரு ஆலயத்தின் சிறம்பும் நினைவூட்டப்படுகின்றது. அந்த வகையில் நயினை நாகபூசணி, சல்லி முத்துமாரி அம்மன், வற்றாப்பளை கண்ணகியம்மன்.... அடுத்த மாதம் எதுவோ?

இந்துக்களின் திருமண சம்பிரதாயமானது அறியாதவர் களுக்கு வரப்பிரசாதம். ''மறந்தவையும் மறைந்தவையும்'' பிரமாதமான பகுதியாகும். பண்டைய கலாசாரங்களையும் விளையாட்டுக்களையும் நினைவூட்டுவது இன்றைய காலத்தின் தேவையே. தொடரட்டும் பணி; வளரட்டும் கலைக்கேசரி; வாழ்த்துக்கள். என்போன்றோரின் ஆதரவு என்றும் உண்டு.

**க. தருமலிங்கம்**
'தாயகம்'
பதுளை வீதி, கரடியனாறு

***

## பார்க்கும் போதே பரவசம்!

அன்புள்ள ஆசிரியருக்கு,
வணக்கம்

''கலைக்கேசரி'' யின் இரு இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. அழகான வர்ணப் படங்களுடன் உயர்தர காகிதத் தில் சிறப்பாக வெளியிட்டிருக்கிறீர்கள். பத்திரிகையைப் பார்க் கும் போது பரவசம் ஏற்படுகின்றது.

என்னிடம் வந்துபோகும் சில நண்பர்களுக்கும் ''கலைக்கேசரி''யைக் காட்டினேன். ''தமிழ்நாட்டிலேயே இவ்வளவு அழகான தரமான சிறப்பான பத்திரிகை வெளிவந்ததாகத் தெரியவில்லை'' என்றார்கள். இலங்கையில் ''வீரகேசரி'' போன்ற ஒரு பெரிய நிறுவனத்தால் மட்டுமே இப்படி ஒரு சாதனையைச் செய்ய முடியும் என்றும் சொன்னார்கள்.

கனடாவில் சுமார் 10- 12 தமிழ் வார, மாதப் பத்திரிகைகள் வெளியாகின்றன. பெரும்பாலானவை வீரகேசரி முன்னர் வெளியிட்ட மித்திரன் அளவில் சுமார் நூறு பக்கங்களில் வெளியாகி இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒரு டொலர் இரு டொலர்களுக்குச் சில விற்கப்பட்டன. அவற்றில் ஒன்றிரண்டு நின்றுவிட்டன. தமிழ் நாட்டில் வெளியாகும் அனேகமான பத்திரிகைகள் இங்கே கிடைக்கின்றன. ஆனந்த விகடன் பிரதி இரண்டு டொலர்தான். இத்தகைய சூழலில் ''கலைக்கேசரி'' இற்கு பத்து டொலர் அதிகமோ என்று எண்ணத் தோன்று கின்றது. தரத்தைப் பார்ப்பவர்கள் கணக்குப்பார்க்க மாட்டார்கள். எல்லாம் சிறப்புற வேண்டுமென வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.


அன்புடன்

**உதயணன்**
2050, Bridletowne Circle
Apt. 1404
Scraborough Ontario
MIW 2V5 Candada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Your special day...*




உங்கள் திருமண நாளானது என்றென்றும் உங்கள் வாழ்நாள் முழுவதும் நினைவுகூரக்கூடிய
ரம்மியமான நாளாகும். கலாசார, பண்பாட்டிற்கேற்ப அழகிய, விசாலமான மண்டபங்கள்
உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் நாம் வழங்கத் தயாராக உள்ளதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். மனத்திரையில் தோன்றும்
அந்த வண்ணமிகு தருணத்தை நனவாக்கிட நாம் என்றும்
கடமைப்பட்டுள்ளோம். உங்கள் வாழ்நாளின்
முக்கிய தருணத்தை ஆரம்பித்திட...

Welcome to Cinnamon Lakeside Colombo... How may we indulge you?

Cinnamon
LAKESIDE
COLOMBO

115, Sir C. A. Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka.
Telephone: +94-11-2491000 Fax: +94-11-2449184
Email: lakeside@cinnamonhotels.com
Visit: www.cinnamonhotels.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Jaffna now goes global with the opening of the world's local bank.
We bring you international recognition and global access by adding Jaffna to our elaborate network of over 8,500 HSBC branch offices in more than 86 countries and territories across the world.

Providing a wide range of customised financial products and services to personal and corporate clients, we are proud to be a part of Jaffna's development.

**Call 011 4 4722 77 Click www.hsbc.lk**

HSBC
The world's local bank

*Issued by The Hongkong and Shanghai Banking Corporation Limited. Fitch rating of AAA (lka).*

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org